VISIT…

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

பட்டாபி

துறுதுறு தாத்தாவின் ஆச்சரிய அனுபவங்கள்

மாலை நேரம். வீட்டு வாயிலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வீட்டின் உள்ளே... முன் அறையில் தாத்தா ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். அதிலேயே மூழ்கிப் போயி ருந்த அவரது கவனத்தை, 'லொட்டு...புட்டு' என்று ஏதோ சத்தம் திசை திருப்பியது. நிமிர்ந்த தாத்தாவை, முறைத் துப் பார்த்தபடி உள்ளே நுழைந்தான் பேரன்.

புத்தகத்தை மூடி வைத்த தாத்தா, "காலைக் கழுவிட்டு உள்ளே வா!" என்றார் சற்றுக் கறாராக.

"செருப்பு போட்டுக்கிட்டுத்தானே போனேன். வெறுங் காலோடவா போனேன்?" என்று முணுமுணுத்தபடியே கால்களைக் கழுவிக் கொண்டு தாத்தாவை நெருங்கினான் பேரன். வெளியில் சுற்றிவிட்டு வந்ததனால் உண்டான வியர்வையும் அடங்கவில்லை; தாத்தாவின் கறார் வார்த்தைகளால் உண்டான வருத்தமும் அடங்கவில்லை அவனுக்கு.

குளிர்சாதனப் பெட்டியில் இருந்து குளிர்ந்த தண்ணீரைக் கொண்டு வந்து, மகனிடம் நீட்டினாள் தாயார்.

"கொஞ்ச நேரம் கழிச்சுக் குடி!" என்றார் தாத்தா.

கோபம் பொத்துக் கொண்டு வந்தது பேரனுக்கு.

“பிராணனை வாங்கறியே தாத்தா! உன் காலத்து சமாசாரத்தை எல்லாம் இந்தக் காலத்துல யார் சீண்டுறா? விஞ்ஞானம் எங்கேயோ போய்க்கிட்டிருக்கு. இந்தக் காலத்துல போய்.... உதவாததையெல்லாம் சொல்லிக்கிட்டு...” என்று வெடித்தான் பேரன்.

சிரித்தார் தாத்தா. “உதவாதது எதையும் நம்ம முன்னோர்கள் சொல்லிட்டுப் போகலை. என்ன சொன்னே? விஞ்ஞான வளர்ச்சியா, ஒண்ணு சொல்றேன், கேட்டுக்கோ! அணுவைப் பற்றின சிந்தனைகூடத் தோணாத அந்தக் காலத்துலேயே விஞ்ஞான உண்மைகளை சொன்னவங்க நம்ம பெரியவங்க. அதைப் பத்தி விளக்கமா சொன்னா தான் உனக்குப் புரியும். இந்தா, அதுக்கு முன்னாடி இப்ப தண்ணீரைக் குடி!” என்றபடி தண்ணீரை பேரனிடம் நீட்டினார் தாத்தா.

‘இந்தத் தாத்தா பொய் சொல்றாரா? அல்லது ஏதாவது உண்மை இருக்குமா?’ என்ற குழப்பத்துடன் தண்ணீரை வாங்கிக் குடித்த பேரன், “என்ன தாத்தா சொல்றே? நம்ம பெரியவங்க... விஞ்ஞான உண்மை... அது இதுன்னு என்னென்னவோ சொல்றே? இதெல்லாம் உண்மையா?” என்றான்.

தாத்தா நிமிர்ந்து உட்கார்ந்தார். “நான் சொல்றேன். நீயே தீர்மானிச்சுக்கோ! அணுவைப் பற்றி மேல் நாட்டுக்காரங்க யாரும் யோசிக்காத அந்தக் காலத்துலேயே அதுபத்தின விஷயங்களை நம்ம பெரியவங்க விளக்கமா சொல்லியிருக்காங்க தெரியுமா? கம்பராமாயணத்துலயும் இதுபத்தி ஒரு தகவல் உண்டு. யுத்த காண்டத்துல, ராவணனுக்கு விபீஷணன் யோசனை சொல்றான். அப்ப அவன் ஹிரண்யகசிபுவை பத்திச் சொல்றதைப் படிக்கிறேன், கேளு...

‘எங்கே இருக்கிறான் உன் இறைவன்?’ என்று தன் மகனைப் பார்த்துச் சீறினான் ஹிரண்யகசிபு. பிரஹ்லாதன் பதில் சொன்னான்: ‘சாணிலும் உளன். ஒரு தன்மை அணுவினை சத கூறு இட்ட கோணிலும் உளன்!’ ‘அணுவுக்குள் அணுவாக இறைவன் இருக்கிறான்’ என்பதைச் சொல்ற இந்த இடத்துல, அணுவை நூறு(சத) கூறுகளாகச் செய்து, அதில் ஒரு சதவிகித அணுவை ‘கோண்’ என்று, கம்பராமாயணம் குறிப்பிடுது” என்ற தாத்தா சற்று நிறுத்தினார்.

பேரன் ஆச்சரியப்பட்டான்.

ஓரக்கண்ணால் அவனது வியப்பை ரசித்தபடி தாத்தா தொடர்ந்தார்: “பிளக்க முடியாததுன்னு சொல்லப்பட்ட அணுவைப் பிளந்து, ஒரு சதவிகித அணுவுக்கும் தமிழில் பெயர் வெச்சுட் டாங்க அந்தக் காலத்துலயே! ஆனால், எனக்குத் தெரிஞ்சு இன்னிக்கும் ஒரு சதவிகித அணுவுக்கு ஆங்கிலத்தில் பெயர் சூட்டப்படலை. சரி... மேலே சொல் றேன். கம்ப ராமாயணமே, அணுவின் செயல்பாட்டையும் சொல்றது.

போர்க்களத்தில் இந்திரஜித் இறந்து கிடக்கிறான். அவன் தாயார் மண்டோதரி அழுகிறாள். ‘தலை சிறந்த வீரனான உன்னை- இந்திரனையே வென்று இந்திர ஜித் என்று பெயர் பெற்ற உன்னை- கொன்று விட்டார்களே! அணு ஆயு தத்தை ஏவ, அது ஓடிவந்து வெடித்துச் சிதறி நாசத்தை உண்டாக்கியது போல் இருக்கிறது’ என்கிறாள். அந்த வரி: உக்கிட அணு ஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா!

எங்கோ ஓரிடத்தில் சுவிட்சை அழுத்தியதும் அணு ஆயுதம் சீறிக் கிளம்பும். குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் வெடித்துச் சிதறி நாசத்தை உண்டாக்கறது. இதைத் தான் கம்ப ராமாயணம், ‘உக்கிட அணு ஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா!’னு சொல்றது!” தாத்தா சற்று நிறுத்தினார். பேரன் பெருமூச்சு விட்டான்!

தாத்தா தொடர்ந்தார்: “இப்போ கால் கழுவுற விஷயத்தைச் சொல்றேன். கவனமா கேள்! நின்றாலும் நடந்தாலும் உட்கார்ந்தாலும் நம்ம கால் மட்டும்தான் தரையில் பட்டுக்கிட்டிருக்கும். இப்படிக் கண்ட

இடத்துலயும் அலையுற கால்கள்ல ஏராளமான கிருமிகள் ஒட்டிக்கிட்டிருக்கும். கால் கழுவாம இருந்தா அவ்வளவு கிருமிகளும் கால் களில் உள்ள நகக் கண் வழியா உள்ளே புகுந்து வியாதியை உண்டாக்கும். அதனாலதான் நம்ம பெரியவங்க காலைக் கழுவிட்டு உள்ளே வரச் சொன்னாங்க. என்னதான் கழுவி னாலும் ஒன்றிரண்டு கிருமிகள் கால்களில் ஒட்டிக் கிட்டிருந்தா, என்ன செய்யுறது? அதுக்காகவே வீட்டு வாசப் படியில் - மஞ்சள் பொடியைக் குழைத் துப் பூசி வெப்பாங்க. காலைக் கழுவிட்டு மஞ்சள் பூசின வாசப்படி வழியா உள்ளே நுழைஞ்சா, காலில் மிச்ச மீதி இருக்கும் கிருமிகளும் அழிஞ்சு போயிடுமாம். தலை சிறந்த கிருமி நாசினி மஞ்சள் என்பதை தெரிஞ்சதாலதான் நம்ம பெரியவங்க அப்படி செஞ்சாங்க.

இதே போல சாப்பிடறதுக்கு முன் னாலயும் சாப்பிட்ட பிறகும் கால் கழுவறதும் நல்லது. இதனால ஜீரண உறுப்புகள் பலப்படும். ஜீரண சக்தி அதிகரிக்கும். புரிஞ்சுதா?" என்றார் தாத்தா.

பிரமிப்பில் இருந்த பேரன் வாயைத் திறந்தான். "புரிஞ்சுது தாத்தா... புரிஞ்சுது! இதையெல்லாம் உணர்ந்து ஃபாலோ பண்றதாலதான், உங்களை மாதிரி பெரியவங்க வயசானாலும் கரும்பைக் கடிச்சு சாப்பிடுறீங்க. நாங்களோ..." என்ற பேரனை இடைமறித்த தாத்தா, "கரும்பையே ஜூஸாகக் கேட்கறீங்க!" என்றார் கலகல சிரிப்புடன்.

"அது போகட்டும் தாத்தா! நான் வீட்டுக்குள்ளே நுழைஞ்சதும், அம்மா தந்த தண்ணீரைக் குடிக்க விடாம, அப்புறமா குடிக்கலாம்னு சொன்னீங்களே, அது ஏன்? சொல்லுங்க!" என்றான்.

"இதற்கு உண்டான பதிலைப் பெரிய புராணம் சொல்றது. அதையும் சொல் றேன்" என்றார் தாத்தா.

"சேக்கிழார் எழுதினதுதானே?" என் றான் பேரன். ஆச்சரியப்பட்டார் தாத்தா. "அடடே... சேக்கிழார் எழுதினதை எல்லாம் சரியாச் சொல்றியே... பரவாயில்லை!" எனப் பாராட்டினார்.

"தாத்தா! இந்தக் காலத்துப் பசங்களான எங்களைப் பத்தி தப்பாவே நினைச்சுக்கிட்டிருக்கீங்க போல! கொஞ்சம் கொஞ்சமாவது எங்களுக்கும் தெரியும். மற்றதைத் தெரிஞ்சுக்கிற ஆர்வமும் இருக்கு! ஏற்கும்படி சொல்ல வேண்டியது அனுபவசாலியான பெரியவங்க கடமை! சரி... சரி! நான் கேட்டதுக்குப் பதிலைச் சொல்லுங்க. பாராட்டெல்லாம் அப்புறமா வெச்சுக்கலாம்" என்று ஆர்வத்துடன் கேட்டான் பேரன்.

தாத்தா சொன்ன பதில், அடுத்த விஞ் ஞான ஆச்சரியம்!

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

துறுதுறு தாத்தாவின் ஆச்சரிய அனுபவங்கள்

குளியல் அறையில் இருந்து அப்பாவின் கூச்சல் கேட்டது. “ஏண்டீ... சனியனே... சோப்பை எங்கே வெச்சே?”

“அங்கயேதான்! இடக் கை பக்கமா பாருங்க... வழக்கமா வெக்கிற செவப்பு டப்பாலதான் வெச்சுருக்கேன். ராத்திரியே புதுசா எடுத்து வெச்சாச்சு!” _ சமையல் அறையில் இருந்து

அம்மாவின் பதில் கூச்சல் கேட்டது.

தாத்தா வாயைத் திறந்தார்: “பேராண்டி... காலையிலேயே உங்க அப்பா, சுப்ரபாதம் சொல்ல ஆரம்பிச்சுட்டான். தொட்டுத் தாலி கட்டின மனைவியை, ‘சனியனே’ங்கறான். உங்கம்மா சனியன்னா, உங்க அப்பா...?”

“அம்மா மிஸஸ் சனியன்னா, அப்பா மிஸ்டர் சனியன்னுதானே அர்த்தம்?!” - பேரன்.

தாத்தாவுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. “அப்ப, நீ என்ன... சன் ஆஃப் சனியனா? சரி, சரி... உங்க அப்பன்கிட்ட இருந்து அடுத்த கத்தல் கேக்கும் பாரு!” என்று பேரனை அடக்கினார்.

குளியல் அறையில் இருந்து அடுத்த ஒலிபரப்பு துவங்கியது. “ஏண்டீ... பீடை! தரித்திரம்! துண்டை எங்கே வெச்சுத் தொலைஞ்சே?”

அடுத்த ஒரு சில நொடிகளில் கத்தல் அடங்கி விட்டதன் காரணமாக, துண்டு குளியலறையில் போய்ச் சேர்ந்து விட்டது என்பது புரிந்தது!

தாத்தா தொடர்ந்தார்: “கொஞ்ச நேரக் குளியலுக்கே பொறுமை இல்லை. கோபத்தில் குதிக்கிறான். சோப்பு தேய்க்கும்போதே பீடை-தரித்திரம்னு சொல்லி, பீடையையும் தரித்திரத்தையும் உடம்புல மொத்தமா தேய்ச்சுக் கிறான். அப்புறம் எப்படி உடம்பும் மனசும் நல்லா இருக்கும்? கொதிப்புதான்; ஙி.றிதான். குளிக்கறதுக்கு முன்னாடியே தேவையானதை எடுத்து வெச்சுக்க வேண்டாமா? எங்க தலை முறையில எல்லாம் சாமான்யன் தொடங்கி மகான்கள் வரை, குளிக்கும் முறையே வேற. நான் பக்கத்துல இருந்து பார்த்திருக்கேன். ஸ்வாமி பேரைச் சொல்லிட் டுத்தான் குளிப்பாங்க. அதனால கடைசி வரைக்கும் ஆரோக்கியமா இருந்தாங்க.”

“அது நல்ல பழக்கம் தாத்தா” - பேரன்.

“பேரன் நீ சர்டிபிகேட் கொடுத்தா சரிதான். ஒண்ணு சொல்றேன், கேட்டுக்கோ. ஒரு ஆசாமிக்கு தெய்வமே செல்வத்தை அள்ளிக் கொடுக்குதுன்னு வெச்சுப்போம். அவன் மட்டும் கோபக்கார ஆசாமியா இருந்தான்னா தங்காது அத்தனையும் அவன்கிட்டே. எல்லாம் கைநழுவிப் போயிடும். ஓட்டாண்டிதான்!” எனச் சொல்லி நிறுத்தினார் தாத்தா.

கோபம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பேரனின் விழிகளில் தெரிந்தது.

“கோபத்தையெல்லாம் விட்டுட்ட ஒருத்தன் தன் வாழ்க்கையில மிகப் பெரிய நல்ல மாற்றங்களைப் பார்க்க முடியும்; உணர முடியும்.”

“ஏன் தாத்தா... இதையெல்லாம் நீ, எங்க அப்பாவுக்கு, அதுதான் உன் புள்ளைக்கு சொல்லித் தரலியா?” என்ற பேரன், தாத்தாவை மலரும் நினைவுகளில் இருந்து மீட்டான்.

“சொல்லிக் கொடுத்ததுனாலதான், குளிக்கும்போது மட்டும் கோபப்படற அளவுக்கு வந்துருக்கு. முன்னாடியெல் லாம் எப்பப் பார்த்தாலும் கோபமாத்தான் இருப்பான். இப்ப எவ்வளவோ பரவா யில்லை. இன்னும் கொஞ்ச நாள்ல இந்தக் கோபத்தையும் விட்டுடுவான். என்ன செய்யறது? இந்தக் காலத்துல, படிக்கற சின்னப் பசங்களுக்குக்கூட, எவ்வளவு கோபம் வருது! அவங்களுக்கு நல்லதையெல்லாம் அடிக்கடி சொல்லிக் கொடுத்து, அரவணைச்சுக் கொண்டு வரணும்” என்றார் தாத்தா, தன் மகனை விட்டுக் கொடுக்காமல்!

பேரனும் விடவில்லை. தொலைக்காட்சி மெகா தொடர்களைப் போல, விட்ட இடத்தில் இருந்து பிடித்தான்.

“ஏன் தாத்தா... வெளியில போயிட்டு வந்ததும் தண்ணி குடிக்கக் கூடாதுனு சொன் னியே...!”

“மறக்கலைடா கண்ணா... மறக்கலை! வெளியில இருந்து வேர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள்ள நுழைஞ்ச உடனேயே தண்ணீர் குடிக்கக் கூடாது; அதுவும் ஃப்ரிட்ஜ் வாட்டர் கூடவே கூடாது! பதில் சொல்றேன். வெளியில இருக்கும் காற்றழுத்தம், சுற்றுப்புறச் சூழ்நிலை முதலானவை வேறு. அதில் இருந்து விடு பட்டு, வீட்டுக்குள்ள நுழையும்போது, அங்க இருக்கற சூழ்நிலை அடியோடு மாறிப் போயிருக்கும். வெளியில இருக்கும் வெப்பம் - காற்றழுத்தம், வீட்டுக்குள் இருக்காது. வீட்டுக்குள் நுழைஞ்ச உடனே அங்க இருக்கற சுற்றுப்புறச் சூழ்நிலையை உடம்பு ஏற்றுக் கொள்ளக் கொஞ்ச நேரமாகும். அதுக்குள்ள அவசரப்பட்டு தண்ணியைக் குடிச்சா -அதுவும் ஃப்ரிட்ஜ் தண்ணியைக் குடிச்சா, உடம்புல பிரச்னையை உடனடியா உண்டாக்கிடும்.

வீட்டுக்குள்ள நுழைஞ்சு, அங்க இருக்கற சுற்றுப்புற சூழ்நிலைக்கு உடம்பு பக்குவப்பட்ட பிறகு, தண்ணியைக் குடிச்சா பிரச்னை இல்லை. இந்தத் தகவலை ரொம்ப அழகா பெரிய புராணத்துல அப்பூதியடிகள் வெச்ச தண்ணீர்ப் பந்தலைப் பற்றிச் சொல் லும்போது சேக்கிழார் சொல்றார்.

‘வெயில் காலம். மக்களுக்காக வைக்கப் பட்ட தண்ணீர்ப் பந் தல். அளவில் பெரியது. வெளி வெயிலில் இருந்து உள்ளே நுழைந்தவுடன், குளிர்ச் சியாக இருக்கிறது; வெப்பம் போய் விட்டது. நீர் நிறைந்த தாமரைத் தடாகம் போலக் குளிர்ச்சி மிகுந் திருக்கிறது; வளம் பொருந்திய நிழ லைத் தருகிற தண்ணீர்ப் பந்தல்’ என்கிறார் சேக்கிழார்.

‘... தண்ணளித்தாய் உறுவேனில்
பரிவகற்றிக் குளம் நிறைந்த நீர்த்தடம் போல்
குளிர் தூங்கும் பரப்பினதாய்
வள மருவு நிழல் தரு தண்ணீர்ப்பந்தல்’

இன்றைய விஞ்ஞானமும், வெளியில் இருந்து வீட்டுக்குள் வந்த உடன் தண்ணீர் குடிப்பது - அதுவும் ஃப்ரிட்ஜ் தண்ணீர் குடிப்பது மிகமிகக் கெடுதல் என்கிறது" என்றார் தாத்தா.

"தாத்தா... என்ன ஆச்சு உனக்கு? திடீர்னு, மேடையில பேசற மாதிரி பேசறே!" என்று உலுக்கினான் பேரன்.

"அது ஒண்ணும் இல்லே. நாளைக்கு நம்ம குடியிருப்போர் அசோசியேஷன்ல நான் பேசப் போறேன். அந்த பாதிப்பு இப்பவே வந்தாச்சு. அத னாலதான்..." என்றார் தாத்தா.

"என்ன தலைப்புல பேசப் போறே?" - பேரன்.

"ஸ்கேனிங்-னு தலைப்புல" - தாத்தா.

அப்போது எதிர்பாராத விதமாக உள்ளே நுழைந்த பேத்தி, "தாத்தா! வயத்துக்குள்ள இருக்கிற கொழந்தைய ஸ்கேன் எடுக்கறது தப்பு. ஏதானும் பேசி வம்புல மாட்டிக்கப் போறே. என்ன பேசப் போறே? சொல்லு பார்க்கலாம்..." என்றாள் பேத்தி.

"உங்க கால ஸ்கேனிங் பத்தி அந்தக் காலத்துலயே நம்ம முன் னோர்கள், மானாவாரியா பக்கம் பக்கமா சொல்லி இருக்காங்க. அதைத்தான் சொல்லப் போறேன். என்ன பேசறேன்னு நாளைக்கு அசோசியேஷன் மீட்டிங்குல வந்து கேளு!" என்றார் தாத்தா.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

துறுதுறு தாத்தாவின் ஆச்சரிய அனுபவங்கள்

பட்டாபி

"சிறப்பு அழைப்பாளரான பெரியவரைப் பேச அழைக்கிறேன்!" என்றார் அசோசியேஷன் தலைவர். தாத்தா மேடை ஏறினார். அவருக்கு மாலைபோட்டு, சால்வை போர்த்தி மரியாதை செய்தனர். மாலையையும் சால்வையையும் பேத்தியிடம் கொடுத்த தாத்தா, மைக்கைப் பிடித்தார். பேத்தி, தாத்தாவின் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

தாத்தா கணீரென்று பேசத் தொடங்கினார். "மேடையில் இருக்கும் பெரியவர்களும், என் எதிரில் இருக்கும் பெரியவர்களும், அடுத்த தலைமுறைப் பெரி யவர்களான இளைய தலைமுறையினரும் சிறுவர் -சிறுமியரும் நல்லா இருக்கணும்!

கண்ணதாசன் ஒரு முறை, 'இளம் வயதுல செய்யக் கூடாததையெல்லாம் செஞ்சு நேரத்தை வீண் பண்ணக் கூடாது. எதைச் செய்யணும்னு உடலும் உள்ளமும் விரும்புதோ அதைச் சரியா செய்யணும். இந்தச் சிந்தனை மட்டும் எனக்கு இளம் வய சுல இருந்திருந்தா, இன்னும் ஏராளமா எழுதி இருப்பேன்'னு வருத்தப்பட்டார். ஒண்ணு ஞாபகம் வெச்சுக்கங்க! உலகத்த மாத்த நம்மால முடியாது. நம் மைத்தான் மாத்திக்கணும். இப்படி மாற்றிக் கொண்டு வெற்றி பெற்றவர்கள்தான் நம்ம முன்னோர்கள்.

அவர்கள், எல்லாவற்றிலும் சூரப்புலிகள். குறிப்பா சொல்லணும்னா கணக்குல! கணக்குப் போட்டு அவங்க கட்டின தஞ்சாவூர் கோயில் கோபுரமும், ராமேஸ்வரம் கோயில் பிராகாரமும் இன்னிக்கும் அயல்நாட்டுக்காரங்கள பிரமிக்க வெக்குது. அந்தக் காலத்துலயே எப்படி இவ்வளவு கணக்குப் போட்டுக் கட்டினாங்கன்னு ஆச்சரியப்படறாங்க.

'ஸ்கேனிங்'கற தலைப்புல பேசப் போற நான், தெறம சாலிகளான நம்ம முன்னோர்களைப் பத்தியும், அவங்க சொல்லிட்டுப் போனதப் பத்தியும், மொதல்ல ஸ்கேனிங் பண்ணி உங்களுக்குச் சொல்லப் போறேன். நடைமுறை வாழ்க்கையில தாங்கள் சந்திச்ச அனுபவங்கள எல்லாம் அப்படியே எழுதியும் வெச்சுட்டுப் போயிருக்காங்க நம்ம முன்னோர்கள். அதுல ஏராளமானது இப்ப இல்லங் கிறது வருத்தமான விஷயம். உரை நூல் ஆசிரியர்கள் - மேற்கோள் காட்டிச் சொல்லி இருக்கறதுனால, அந்த நூல்களெல்லாம் இருந்துச்சுங்கற அளவுக்கு மட்டும் நமக்குத் தகவல் கெடைச்சிருக்கு. போனது போகட்டும்... இப்ப மீதி இருக்கறதையாவது அடுத்த தலைமுறைக்கு எளிமையா கொண்டு சேர்க்கணும்.

'அடுத்த வீட்டுப் புள்ள, குறிப்பிட்ட இந்த சப்ஜெக்ட்ல பிரமாதமா படிக்குதே'ங்கற எண்ணத்தோட, நம்ம வீட் டுப் புள்ளைகளையும் அந்த வகுப்பு - இந்த வகுப்புனு போட்டு சக்கையா பிழியக் கூடாது.

அப்படி செஞ்சா, அந்தப் புள்ளைங்க எதுலயுமே தேறாது. கொழந்தைங்க மேல அக்கறை இருக்கற பெற்றோர்களும், இளைய தலைமுறையும் இப்ப நான் சொல்லப் போற கதையைக் கூர்மையா கேக்கணும்.

ஒரு சிற்பி இருந்தார். சிலை வடிக்கறதுக்காக ஒரு பெரிய்ய்ய பாறையை உளி வெச்சு செதுக்க ஆரம்பிச் சார். நாலஞ்சு சில்லு (உடைந்த பகுதிகள்) கீழ விழுந்த உடனே, அந்தப் பாறையில் அடைபட்டிருந்த அழ கான ஒரு தேவதை வெளியில வந்துச்சு. இதைப் பார்த்த நம்ம சிற்பி பிரமிச்சுப் போயிட்டார்! அந்த நேரத்துல தேவதை, 'எனக்கு விடுதலை கொடுத்த துக்கு ரொம்ப நன்றி. உனக்கு என்ன வேணும்?' என்றது. சிற்பிக்கு எதைக் கேக்கறதுனு தெரியல. அப்ப தேவதையே இரக்கப்பட்டு, 'சரி! போகட்டும். இன்னும் ஒரு மணி நேரத்துக்கு உன் மனசுல நீ என்ன நெனச்சாலும் அது அப்படியே நடக்கும். ராஜாவா ஆகணும்னு நினைக்கறியா... நீதான் ராஜா! மிகப் பெரிய மாளிகை வேணும்னு ஆசைப்படறியா? நீதான் மாளிகைக்குச் சொந்தக்காரன். என்ன வேணும்னாலும் நெனச்சுக்க! ஆனா, எல்லாம் ஒரே ஒரு மணி நேரத்துக்குத்தான். அந்த ஒரு மணி நேரம் முடியறப்ப, அதாவது அறுபதாவது நிமிஷத்துல நீ என்னவாக இருப்பாயோ, அப்படியேதான் ஆயுள் முழுக்க இருப்பே'னு சொல்லிட்டு மறைஞ்சது.

நேரம் காலை பதினோரு மணி. வெயில் கொடுமை தாங்க முடியல. வழியும் வியர்வையைத் துடைச்ச சிற்பி, 'சே! என்ன வெயில்! பூமியில இருந்து வெயிலோட கொடுமையை அனுப விக்கறதுக்குப் பதிலா, இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கிற சூரியனா நாம இருந்துடலாம். பிரச்னையே இருக்காது'னு நெனச்சான். அட...! ஆச்சரியம். தேவதை கொடுத்த வரத்தின்படி அவன் சூரியனா மாறினான். 'எல்லாரையும்விட நாம தான் ஒரு படி மேலே'னு கொஞ்சம் கர்வமாகூட நினைச்சான். மணி பதினொண்ணேகால். சூரியன் வடிவில் இருந்த சிற்பியை ஒரு மேகம் வந்து மூடிச்சு. 'பச்! சூரியனான நம்மள ஒரு மேகம் வந்து மூடிடுச்சே. சூரியனையே மறைக்கக் கூடிய ஓர் ஆற்றல் இந்த மேகத்துக்கு இருக்குன்னா மேகமாவே இருந்திருக்கலாம்'னு நெனச்சான் சிற்பி. என்ன ஒரு ஆச்சரியம்... அடுத்த கணமே மேகமா மாறினான். ரொம்ப பெருமிதத்தோட வான்வெளியில் மிதந்துட்டிருந்தான்.

மணி பதினொன்றரை. மேகத்துல இருந்து திடீர்னு மழை கொட்ட ஆரம்பிச்சுது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுது. மரம் அது, இதுன்னு மிதந்துக்கிட்டு ஓடுது. 'ஆஹா... இத்தனை ஆக்ரோஷத்தோட சகலத்தையும் புரட்டிப் போடற மழையா நாம இருந்தா இன்னும் நல்லா இருக்குமே'னு சிற்பி நெனச்சான். நினைத்தது நடந்தது. உடனே மழையா மாறினான். மண் வீடு, காரை வீடு, குடிசை வீடுனு எல்லாத்தையும் கவுத்து பெரட்டிக் கிட்டு ஓடுது மழைத் தண்ணி. ஆனா, ஒரே ஒரு பாறைய மட்டும் இந்த மழைத் தண்ணியால ஒண்ணும் பண்ண முடியல. சிற்பி மனசு வேதனப்பட்டுச்சு. 'இவ்வளவு பெரிய மழைக்கே இந்தப் பாறை அசையாம இருக்குன்னா இதனோட சக்தி, வலி மையான ஒண்ணாத்தான் இருக்கும். மழையா இருக்கறதுக்குப் பதிலா, இந்தப் பாறையா இருந்துருக்கலாம்'னு நெனச்சான். பாறையாக மாறினான். மழை நின்னு போச்சு.

மணி பதினொன்றே முக்கால். வேறொரு சிற்பி வந்து, அந்தப் பாறையைச் செதுக்க ஆரம்பிச்சான். 'ஆஆஆ... வலிக்குதே... உடம்பெல்லாம் எரி யுதே... என்னமா பொட்டுபொட்டுனு எம் மேல உளியால போட்டுத் தள்றான். தாங்க முடியலடா சாமீ'னு பாறை வடிவில் இருந்த சிற்பி புலம்ப ஆரம்பித்தான். மனசு உடைஞ்சு போனான். 'சே! பொறுமையே இல்லை எனக்கு. பாறையா இருக்கறதவிட சிற்பியா இருக்கறதே நல்லது. பாறையில அழகா சிலை வடிக்க லாம்'னு நெனச்சான். பழையபடியே சிற்பி ஆனான். மணி, மிகச் சரியாக பன்னிரண்டு. இனிமே அந்த சிற்பி, ஆயுள் முழுவதும்..." என்று நிறுத்தினார் தாத்தா.

"பழையபடியே சிற்பி தான்!" எனக் கூட்டம் கோரஸாக பதில் அளித்தது. சற்றுச் சிரித்து விட்டு, தாத்தா தொடர்ந்தார்: "புரிஞ்சா சரி. அந்தச் சிற்பிக்கு, தெய்வமே வரம் தந்தாலும், அடுத்த கட்டத்துக்கு வளர

முடியல.

இளைய தலைமுறையினரே... உங்களுக்குப் பிடிச்ச ஏதாவது கோர்ஸுல ஜாயின் பண்ணி, நேரத்த வீணாக்காம முழு மூச்சா முயற்சி செஞ்சா, அந்த கோர்ஸுல நீங்கதான் மாஸ்டர். நேரத்த வீணடிக்காம ஒரே மனசோட முயற்சி பண்ணுங்க. அடுத்து, நான் பேசப் போற சப் ஜெக்ட்- ஸ்கேனிங்...." என்று நிறுத்திய தாத்தா, தனக்கு எதிரில் இருந்த தண்ணீரைக் கொஞ்சம் குடித்தார்.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

துறுதுறு தாத்தாவின் ஆச்சரிய அனுபவங்கள்



தண்ணீர் குடித்த தாத்தா, சற்று நிதானித்து விட்டுத் தொடர்ந்தார்:

“இது வரையில, முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கைய ‘ஸ்கேன்’ பண்ணிப் பார்த்து, அதனால என்ன லாபம்னு பார்த்தோம். இனிமே, ஸ்கேன் பற்றி முன்னோர்கள் என்ன சொல்லி இருக்காங்கனு பார்க்கலாம். நட்சத்திரங்கள், கிரகங்கள், பூமி, மரம், செடி, கொடினு எல்லாத்தையும் அவங்க ஸ்கேன் பண்ணி இருக்காங்க. இருந்தாலும், இந்தக் காலத்துல ஸ்கேன்னு சொன்னாலே, எல்லாருக்கும் என்ன நினைவுல வரும்?

இப்பல்லாம் கர்ப்பத்துல இருக்கற குழந்தை வளர்ச்சி பற்றி ஸ்கேன் பண்ணித் தெரிஞ்சுக்கறாங்க. ஆனா, இதை இன்னும் விரிவா, அந்தக் காலத்துலயே எழுதி வெச்சிருக்காங்கங் கறதைப் பார்க்கறப்ப ஆச்சரியமா இருக்கு. இந்தத் தகவல்கள் ‘மார்க்கண்டேய புராணம்’ நூல்ல விரிவா இருக்கு. அது என்னனு இப்ப உங்களுக்குச் சொல்றேன்.

அம்மா வயத்துல இருக்கற குழந்தைக்கு, இப்ப வயசு 5 நாளுன்னு வெச்சுப்போம். இங்க ஆரம்பிச்சு, 10-வது மாசத்துல பாப்பா பொறக்கற வரைக்கும் நாள் வாரியா, மாச வாரியா குழந்தை எப்படி இருக்கும்னு அதுல சொல்லி இருக்கு.

அம்மா வயத்துல இருக்கற 5 நாள் குழந்தை, வட்டமா- நுரை வடிவத்துல இருக்கும். 10 நாட்கள்ல, எலந்தப் பழம் மாதிரி கட்டியான உருவத்துல இருக்கும். அதுக்கு அப்புறமா மாமிசப் பிண்டம் மாதிரி இருக்கும்.

ஒரு மாசம் ஆனதும், தலை உண்டாகும். 2-வது மாசத்துல கை - கால் எல்லாம் உண்டாகும். 3-வது மாசத்துல நகம், முடி, எலும்பு, தோல், ஆணா - பெண்ணாங்கற அடையாளம், காது ஓட்டை, மூக்கு ஓட்டை இதெல்லாம் உண்டாகும்.

4-வது மாசத்துல- தோல், ரத்தம், மாமிசம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்கிலம் அப்படிங்கற ஏழு தாதுக்கள் உண்டாகும். 5-வது மாசத்துல பசி, தாகம் உண்டாகும். 6-வது மாசத்துல கர்ப்பப் பையால் சுற்றப்பட்டு, அம்மாவோட வயித்துல வலப் பக்கமா ரவுண்டு அடிக்கும்.

7-வது மாசத்துல அந்த ஜீவனுக்கு ஞானம் கெடைக்கறது. போன ஜன்மங்களுடைய நினைவு, இப்ப பிறக்க வேண்டிய காரணம், தொடர்பு எல்லாம் புரியறது. அம்மா சாப்பிடற சாப்பாடு, பானங்கள் இதுனால, வயத்துல இருக்கற குழந்தை வளர்றது. அப்போ, வயிற்றில் இருக்கும் குழந்தையின் தொப்புளில் 'ஆப்யாயனீ' என்ற நாடி கட்டப்படுகிறது. அதன் மறு முனை தாயின் வயிற்றில் இருக்கும் குடலின் ஓட்டையில் கட்டப்படுகிறது. இந்த நாடி (தொப்புள் கொடி) மூலமாகவே, தாயார் சாப்பிட்டது - குடித்தது என அனைத்தும், கருவில் இருக்கும் குழந்தையின் வயிற்றில் போய்ச் சேருகின்றன. அதன் மூலம் குழந்தை வளர்கிறது என்கிறது மார்க்கண்டேய புராணம்.

இப்படி மெள்ள வளர்ற குழந்தை, ஏராளமான புழுக்கள் உண்டாகக் கூடியதும், மலம்- மூத்திரம் இதெல்லாம் இருக்கறதுமான குழியில படுத்திருக்கு. ரொம்பவும் சாஃப்டா இருக்கிற அந்தக் குழந்தையோட உடம்பை, அங்க இருக் கற புழுக்கள் எல்லாம் ஒட்டுமொத்தமா கடிக் கறது. குழந்தையால இதைத் தாங்க முடியல. எனவே, அப்பப்ப மயக்கமாயிடறது.

அம்மா சாப்பிடுற சாப்பாட்டுல இருக்கற உப்பு, உறைப்பு, கசப்பு, தித்திப்பு இதெல்லாம் அந்தக் குழந்தையை பாதிக்கிறது. ஒரே வேதனைதான். தன்னைச் சுத்தி கர்ப்பப்பை. கர்ப்பப்பையச் சுத்தி, மாலை மாதிரி குடல், வளைஞ்ச முதுகு - கழுத்து... வயித்துல தலையை மடிச்சு வெச்சுக்கிட்டு குழந்தை அங்கயே கெடக்கறது. உடம்பை, கொஞ்சம் ஃப்ரீயா அசைக்கக் கூட முடியல.

போன பிறவி, அதுக்கு முந்தின பிறவினு... எல்லாப் பிறவியும் அந்தக் குழந்தைக்கு, அப்ப தெரியறது. இந்த நேரம் பார்த்து பிரசவக் காற்று குழந்தையை அங்கயும் இங்கயுமா அலைக்கழிக்கும்.

ஏழாவது மாசத்துல அறிவு உண்டாகி, அம்மா வயத்துல அங்கயும், இங்கயுமா அலையுற குழந்தை நடுங் கும். ரெண்டு கையையும் கூப்பின மாதிரி வெச்சிருக்கும். 'எப்படா வெளியில வருவேன்'னு சாமிகிட்ட பிரார்த்தனை பண்ணும்.

10 மாசம் ஆனதும், குழந்தை வெளிப்பட காரணமா இருக்கற காற்று, குழந்தையைத் தலைகீழா வெளியில தள்ளி விடும். அப்புறம் என்ன... குழந்தை பொறந்தாச்சு.

சொந்த பந்தம் எல்லாம் ஆணா- பொண்ணானு கேக்கும். ஸ்வீட் குடுக்கும். ஆனா, குழந்தையோ 'குவாகுவா'னு கத்திக்கிட்டு கிடக்கும்" என்று சொல்லிச் சின்ன இடைவெளியை தாத்தா கொடுக்க... அங்கிருந்தவர்கள் பிரமிப்போடு வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். தாத்தா படுகம்பீரமாகத் தொடர்ந்தார்.

"குழந்தை பிறந்ததும் ஏன் அப்படிக் கத்தறதுங்கற விளக்கத் தையும், அயல்நாட்டுக்காரங்க ஆச்சரியப்படறதைப் பத்தியும் கொஞ்ச நேரம் போனதுக்கு அப்புறமா சொல்றேன்.

அதுக்கு முன்னால இவ்வளவு நேரமா பார்த்த தகவல்கள், அதா வது அம்மா வயத்துல இருக்கற குழந்தையோட வளர்ச்சியை-5 நாள்ல ஆரம்பிச்சு, அது பொறக்கற வரைக்கும் மார்க்கண்டேய புராணத்துல அற்புதமா சொன்ன அந்த மகான் யாரு தெரியுமா?" என்று தாத்தா நிறுத்த, குடியிருப்புவாசிகளும் குழந்தைகளும் இமை கொட்டாமல் தாத்தாவையே பார்த்துக் கொண்டிருந் தனர்.

ஒரு சிறிய இடைவேளைக்குப் பிறகு தொண்டையைச் செருமிக் கொண்டு தாத்தா ஆரம்பித்தார்.

“இன்றைய விஞ்ஞானமெல்லாம் வியந்து போகிற வகையில் ஒரு கர்ப்பிணியை முழுக்க முழுக்க ஸ்கேன் பண்ணி இது போன்ற பிரமிக்கக் கூடிய தகவல்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே நமக்கெல்லாம் சொன்ன அந்த அவர்- டாக்டர் இல்லை... விஞ்ஞானி இல்லை... சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர். வேதங்களைத் தன் சுவாசமாகக் கொண்டு வாழ்ந்தவர். அவர் பெயர்.....”

“சொல்லுங்க தாத்தா... சீக்கிரமா சொல்லுங்க...” என்று குழந்தைகள் எழுந்து கூக்குரல் எழுப்பின.

ஏன்? ஏன்? - சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

பட்டாபி

துறுதுறு தாத்தாவின் ஆச்சரிய அனுபவங்கள்

கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் வளர்ந்து வரும் குழந்தையின் நிலையை ஸ்கேன் செய்தது போல் மார்க்கண்டேய புராணத்திலும் பாகவத புராணத்திலும் அன்றே சொன்னவர்- வியாச பகவான்!" என்று கம்பீரமாகச் சொன்ன தாத்தா, தனது உரையைத் தொடர்ந்தார்:

"நேரம்- அதாவது காலத்தைப் பற்றியும், அதை உபயோகிக்க வேண்டியதைப் பற்றியும் ஏற்கெனவே பார்த்தோம். இதுல ஏமாந்து போயிட்டோம்னு வெச்சுக்கங்க... 'இதெல்லாம் அப்பவே செஞ்சிருந்தா, நல்லா இருந்துருக்குமே. இப்போ, இப்படி அல்லாட வேண்டியிருக்காது'னு பொலம்பிக்கிட்டு இருக்கும் படியா ஆகிப் போயிடும். அந்தந்தக் காலத்துல காரியங் களைச் செய்யலேன்னா, கண்ணீர் விட்டுத்தான் ஆகணும்.

'எல்லாம் காலம் பண்ற கூத்து' அப்படினு சொல்லக் கூடாது. காலம் எங்க மாறிச்சு? மரம், செடி, கொடி எல் லாம் அதது, அததுக்கு உண்டான காலத்துலதான் பூத்து, காய்ச்சு, பழுக்குது. விலங்குகள்ல கூட சைவம், சைவமாகத் தான் இருக்கு; அசைவமும் அப்படியேதான் இருக்கு. யானை- அசைவத்துக்கோ, புலி- சைவத்துக்கோ மாறி இருக்குதா என்ன? உண்மையில் காலம் மாறிப் போச்சுன்னா, இதுங்க எல்லாம் மாறி இருக்குமே! ஆசை, சோம்பேறித்தனம், அலட்சியம் இதெல்லாம் நம்மைப் புடிச்சு ஆட்டுது. நாமதான் நம்ம ஆசைகளுக்குத் தகுந்தபடி மாறிட்டோம்.

'காலம் தலைகீழா மாறிப் போச்சு சார். முன்னாடி எல்லாம், வாத்தியார் உட்கார்ந்து பாடம் சொல்லிக் கொடுப்பார். பையன் நின்னுட்டு பாடம் கத்துப்பான். இப்ப வாத்தியார் நின்னுட்டுப் பாடம் சொல்லித் தர்றார். பையன்தான் உக்கார்ந்து கேக்கறான். அப்பல்லாம் மாவு அரைக்கும்போது, குழவி சுத்தும்; ஆட்டுக்கல்லு அங்கேயே அசையாம இருக்கும். இப்ப என்னடான்னா, ஆட்டுக்கல்லே அடியோட சுத் துது. கேட்டா, கிரைண்டர்னு சொல்றாங்க. துணி துவைக்கணுமா அதுக்கு ஒரு மிஷினு, தோச்ச துணியப் புழியணுமா அதுக்கும் மிஷினு.

அட! இவ்வளவு ஏன் சார்? முன்னோர்கள் 'வாக்கிங்'கறத சூப்பரா செஞ்சாங்க. இப்ப பார்த்தா, அதுவும் தலைகீழாப் போயிருச்சு அப்படீனு சொல் றாங்க. நம்ம முன்னோர்கள் காலங் காலையில சூரியன் உதிக்கறதுக்கு முன்னாலேயே எழுந்து, நதியிலயோ, குளத்துலயோ அல்லது கிணத்துலயோ குளிக்கப்

போவாங்க. சூரியன் உதிச்ச உடனே, இயற்கையாவே தண்ணியில இருக்கற சக்தி எல்லாம் மறைஞ்சு போயிடும். அதனாலதான் சூரியன் உதிக்கறதுக்கு முன்னாடியே குளிச்சாங்க. தண்ணியில இருக்கற சக்தியும் கெடைச்சது. அடுத்து, காலையில குளிக்கப் போற இவங்க குளிச்சுட்டு அப்படியே கோயிலுக்கும் போயிட்டு வீட்டுக்கு வருவாங்க. அப்பதான் மெள்ளமா சூரியன் உதிக்கும். அதிகாலை நேரம், நல்ல குளியல், தூய்மையான காத்து இதோட அவங்களுக்குப் பொழுது விடிஞ்சுது. அப்படி இருந்த வாக்கிங், இன்னிக்கு ஏ.சி. ரூமுக்குள்ள கன்வேயர் பெல்ட்டுக்கு மேல ஒரே இடத்துல நடக்குது. அப்புறம் முன்னோர்களுக்கு கெடைச்ச ஆரோக்கியம் நமக்கு எப்படி கிடைக்கும்?

எல்லாத்துலயும் நேரப்படி இருந்த பெரியவங்க, சாப்பாட்டு விஷயத்துலயும் முறையா இருந்தாங்க. சாப்பிடும்போது அவங்க சிந்தனை சாப்பாட்டுலதான் இருந்துச்சு. பேச்சு இல்லாம அமைதியா சாப்பிட்டாங்க. ஆனா, இன்னிக்கு சாப்பிடும்போது கண்டிப்பா டி.வி. பார்க்கணும். சேனல் மாத்தி சேனல் பார்க்கணும். 'தட்டுல என்ன போடறாங்க, என்ன சாப்பிடறோம்'கற நினைவே இருக்காது. கடைசியில, 'ச்சே... ஒரு டி.வி-லயும் ஒண்ணும் உருப்படியா இல்ல!'னு சலிச்சுக்கிட்டே ரிமோட்டைப் போட்டுட்டு சாப்பாட்டுலேர்ந்து எழுந்திருப்போம். 'இந்த மாதிரி டி.வி. பாத்துட்டே சாப்பிடறது தப்பு, வியாதி வரும்' அப்படினு அதே டி.வி-லதான் சொல்றாங்க டாக்டருங்க. சாப்பிடும்போது புத்தி சாப்பாட்டுல இருக்க வேண்டாமா?

சாப்பிடும்போது வாழை இலையில சாப் பிட்டா கிழத்தனமோ, நரை திரையோ நம்மை பாதிக்காது. ஆரோக்கியமா இருக்கலாம். வாரம் ஒரு தடவை கறிவேப்பிலை துவை யலை சாதத்துல கலந்து சாப்பிட்டாங்க. இளநரை வராம இருந்தது. அதே மாதிரி கீரை வகைகளை அப்பப்ப சாப்பாட்டுல சேர்த்துச் சாப்பிட்டாங்க. அதனால கண் பார்வை, நரம்புகள் எல்லாம் ஆரோக்கியமா இருந்துச்சு. இந்தக் காலத்துல பையனுக்குக் கீரையைப் போட்டா, 'அம்மா, அம்மா! இதெல் லாம் மனுஷன் திங்கறதா? மாடுதான் திங்கும். கொண்டு போய் அப்பாவுக்கு போடு!'ங்கறான். பலன், பத்துப் பதினஞ்சு வயசுலயே ஆரோக்கியம் போயிடுது. சோடா புட்டி கண்ணாடி போடும்படியா ஆயிடுது.

சாப்பாட்டுல இன்னும் என்ன டெக்னிக் கெல்லாம் வெச்சிருந்தாங்கய்யா நம்ம தாத்தா- பாட்டியெல்லாம்! ஒரு வேளை சாப்பாட்டுக் கும், அடுத்த வேளை சாப்பாட்டுக்கும் நடு வுல அமிர்தமே கெடைச்சாலும் திங்க மாட்டாங்க. எப்ப பார்த்தாலும் மொச்சு மொச்சுனு நொறுக்குத் தீனிய உள்ளே தள்ள மாட்டாங்க. நல்லா சாப்பிட்டுட்டு பஸ்ஸுல ஏறி, இறங்க வேண்டிய இடம் வந்த உடனே இறங்கி, அங்கே இருக்குற ஃபாஸ்ட் ஃபுட் கடையிலேயும் நல்லா ஒரு வெட்டு வெட்டறதெல்லாம் ரொம்ப தப்பு. ஆரோக்கியத்துக்குக் கெடுதல்!

சாப்பிடறது மட்டுமில்லை. அதைத் தயாரிக்கறதுலயும் நுணுக்கமா இருந்த வங்க நம் முன்னோர். உதாரணமா, வடைக்கோ அப்பளத்துக்கோ, அடுப்புல எண்ணெய் வெக்கும்போது அதிகமா வெக்க மாட்டாங்க. பத்து அப்பளம்னா பத்து அப்பளம், இருபது வடைன்னா இருபது வடைதான். அதுக்குத் தேவையான அளவு மட்டுமே எண் ணெயை வெச்சு, சுட்டெடுப்பாங்க. மீதியை அன்னிக்கே துவையல், சாதம் அல்லது சாப்பாட்டுக்குன்னு உபயோகப்படுத்தி டுவாங்க. ஒரு தடவ வெச்ச எண்ணெயை அடுத்த தடவ அடுப்புல ஏத்தி சுட வெக்க மாட்டாங்க. காரணம்? மறுபடியும் சுட வெச்சா அந்த எண்ணெயில செய்யற உணவுப் பண்டங்கள் நம்ம உடம்புக்கு அதிகமான தீங்குகளை உண்டாக்கும். இதை இப்ப மருத்துவர்களே சொல் றாங்க!" என்ற தாத்தா கொஞ்சம் நிறுத்தினார்.

கூட்டத்திலிருந்து ஒருவர், "ஐயா! இந்தக் கீரைங்க, கறி வேப்பிலை இதெல்லாம் சாப்பாட்டுல சேக்கறதப் பத்தி, அதாவது அதுக்கெல்லாம் என்னென்ன சக்தி இருக்கறதுன்னு காரண-காரியத்தோட இன்னுங் கொஞ்சம் வெவரமா சொன்னா, இங்கே இருக்கிற இளைய தலைமுறை தெரிஞ்சுக்குவாங்க. அனுபவத்துலயும் கொண்டு வருவாங்க" என்றார்.

“இதெல்லாம் அந்தக் காலத்திலேயே ‘வீட்டு வைத்தியம்’கற தலைப்புல ஆனந்த விகடன்ல தொடர்ச்சியா வந்துது. நல்ல ரெஸ்பான்ஸும் இருந்துச்சு. நீங்க கேட்டதுனால ஒண்ணு, ரெண்டு விஷயத்த மட்டும் சொல்றேன்...” என்று தாத்தா தொடர... குறித்த நேரம் தாண்டி நிமிடங்கள் மணியாக நழுவுவ தைக் கூட பொருட்படுத்தாமல் அபார்ட்மெண்ட் கூட்டம் அப் படியே அமர்ந்திருந்தது.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

ஏன்? ஏன்?

சுகி. சிவம்

துறுதுறு தாத்தாவின் ஆச்சரிய அனுபவங்கள்

“சொல்லுங்க! அந்தக் கால ஆனந்த விகடன்ல ‘வீட்டு வைத்தியம்’கற தலைப்புல வந்ததுல, ஒண்ணு ரெண்டாவது சொல்லுங்க!” என்று, வந்திருந்த பொதுமக்கள் கேட்டார்கள்.

பெரியவர் சொன்னார்: “மனுஷனுக்கு எது இருக் குதோ இல்லியோ... ஆரோக்கியம் இருக்கணும். ‘ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வீட்டு வைத்தியம்’கற தலைப்புல ஐம்பது வருஷத்துக்கு முன்னாடியே ஆனந்த விகடன் வழி காமிச்சுருக்கு. ‘கைக் கொழந்தங்கள்லேர்ந்து குடுகுடு கிழவர் வரை, என்னென்ன வியாதி வரும், அது தீர என்ன வழினு தெளிவா, எளிமையா சொல்லி வெச்சிருக்கு.”

“நேரடியா விஷயத்துக்கு வாங்க தாத்தா... ரொம்ப போரடிக்காதீங்க...” _ குழந்தைகள் குரல் எழுப்பின.

“குழந்தைங்களா... உங்களுக்குன்னே ஒரு வைத்திய முறை சொல்றேன். ஸ்கூலுக்குப் போறப்ப வீட்டுல குடுக்கற பாக்கெட் மணியை வெச்சு சாக்லெட், அது இதுன்னு கண்டதையும் வாங்கித் திம்பீங்க. என்னாகும்? ஜலதோஷம் பிடிக்கும். அப்புறம் இருமல். இதைப் பார்த்துட்டு உங்கம்மா சும்மா இருப்பாங்களா? உடனே ஒரு டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போவாங்க. ஆனா, அந்தக் காலத்துல எங்க வீட்டுல என்ன செய்வாங்க தெரியுமா? சித்தரத்தைனு ஒரு வேர் இருக்கு. நாட்டு மருந்துக் கடையில கிடைக்கும். அதுல ஒரு சிறு துண்டை எடுத்து வாயில போட்டு அடக் கிக்குவோம். உமிழ்நீரை முழுங்கிக்கிட்டே இருக்கணும். இன்னொண்ணும் செய்வாங்க. சித்தரத்தையோட கொஞ்சம் பனங்கல்கண்டையும் கலந்து கொதிக்க வெச்ச கஷாயம் குடிப்பாங்க. ஜலதோஷம், இருமல் எல்லாம் போயே போச்சு. இதே டைப்புல அதிமதுரம் வேரையும் கொதிக்க வெச்சுக் குடிக்கலாம். இதுபோன்ற வைத்திய முறைகளையெல்லாம் நம் முன்னோர்கள் ஆராய்ந்து கண்டுபிடிச்சாங்க.”

சட்டென்று எழுந்தான் ஒரு சிறுவன். “வாஸ்தவம்தான் தாத்தா. நாட்டு மருந்துக் கடையெல்லாம் உங்க காலத்துல நிறைய இருந்துது. அதையே வாங்கி நீங்க சாப்பிட்டுட்டு இருந்தீங்க. இப்ப எங்க காலத்துல இங்லீஷ் மெடிக்கல் ஷாப்தான் அதிகமா இருக்கு தாத்தா...” என்றான் சுரத்து இல்லாமல்.

“எல்லாமே இந்தக் காலத்துலயும் இருக்குப்பா. நாமதான் தேடிப் போறதில்லே” என்றவர், “நேரம் ஓடிட்டே இருக்கு. பழங்கால நூல்கள் பெயர்கள்ல சிலதைச் சொல்லி, அதுல அடங்கியிருக்கிற விஞ்ஞான விஷயத் தகவல்களையும் சொல்லி, அஞ்சே நிமிஷத்துல நிறைவு செய்துடறேன்” என்ற தாத்தா, வெட்டிவேர் போட்ட மணம் நிறைந்த நீரை ஒரு டம்ளர் குடித்து விட்டு ஆரம்பித்தார்.

“மகாபாரதத்துல, அரக்கு மாளிகைத் தீயிலேர்ந்து தப்பின பஞ்ச பாண்டவர்கள், அந்தண வேஷத்துல போய்க்கிட்டு இருக்காங்க. போற வழியில அங்காபரணன்கற கந்தர்வன், தன் மனைவிகளோட குஷியா ஒரு குளத்துல குளிச்சுக்கிட்டு இருக்கான். அந்தண வேஷத்துல இருந்த பஞ்ச பாண்டவர்களைப் பார்த்ததும், அங்காபரணன் அவங்கள கேலி செய்யறான். மத்தவங்க சும்மா இருப்பாங்க. பீமன் இருப்பானா? அங்காபரணனை அடிக்கக் கௌம்பறான். தர்மர் தடுக்கறார். ‘பீமா! அந்தண வேஷத்துல இருக்கோம். அந்தணர் என்போர் அறவோர். ஆயுதம் எடுக்கக் கூடாது. அமைதியா வா!’ங்கறார்.

அங்காபரணன் மறுபடியும் வம்புக்கு இழுத்தான். இப்ப பீமனோட அர்ஜுனனும் சேந்துக்கிட்டான். ரெண்டு பேருமா போய், அங்காபரணனைப் பின்னி எடுத்துட்டாங்க. அப்ப அங்காபரணன், ‘என்னை அடிக்காதீங்க! விட்டுடுங்க! ஒங்களுக்கு நான் ஒண்ணு தரேன்’னான். ‘என்ன அது?’னு கேட்டாங்க, பீமனும் அர்ஜுனனும். அதுக்கு அங்காபரணன் சொன்ன பதில்தான், நம்மை ஆச்சரியப்பட வைக்குது! ‘இருந்த இடத்தில் இருந்து கொண்டே, எல்லா இடங்களிலும் நடப்பதைப் பார்க்கக் கூடிய ஒரு பொருள் என்னிடம் உள்ளது. அதத் தரேன். அதன் பேர் சாட்சுஸி’னு பதில் சொன்னான்.

‘இருந்த எடத்துலியே இருந்துகிட்டு எல்லா இடங் கள்லேயும் நடக்கறதப் பார்க்கக் கூடிய அந்தப் பொருள் எதுன்னு தெரீதா? அன்னக்கி அதன் பேரு சாட்சுஸி. இன்னக்கி...” என்ற தாத்தா கொஞ்சம் நிறுத்தினார்.

ஒட்டுமொத்தக் கூட்டமும், “டி.வி! டி.வி!” என்று குரல் கொடுத்தது. தாத்தா முகத்தில் பிரகாசம். இந்தக் காலத்துப் புள்ளைங்க “சூப்பர்! சூப்பர்! இதே வேகத்தோட நம்ம முன்னோர்களின் விஞ்ஞான நூல்களப் பத்தி சொல்றேன். பதிய வெச்சுக்குங்க மனசுல” என்றார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் பாதிக்கு மேல் பேனாவுடன் குறிப்பெடுக்கத் தொடங்கினார்கள். எஞ்சி இருந்தவர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்வார்கள் போலிருக்கிறது. கூட்டத்தின் ஆர்வத்தைப் பார்த்த தாத்தா தொடர்ந்தார்:

“கி.பி.1000-ல் பாஸ்கரபட்டர்ங்கறவர், ‘சரீர பத்மினி’னு ஒரு நூல் எழுதினார். உடல் கூறுகளை (கிஸீணீ□ஷீனீஹ்) பற்றிய நூல் அது. பரத்வாஜ மகரிஷி எழுதின ‘ப்ருஹத்யந்த்ர ஸர்வஸ்வம்’ங்கற நூல்ல விமானத்தைப் பற்றி விரிவா சொல்லி இருக்கு. தண்ணிலேயும், ஆகாயத்திலும் ஓடும் விமானம் ‘குசுமாகரம்’ங்கற பேர்ல சொல்லப்பட்டிருக்கு. ‘அகஸ்திய சம்ஹிதை’ங்கற நூல், விமானத்துலேருந்து குதிக்கறதுக்கு உபயோகப்படற பாராசூட் பத்தி சொல்லி, அதை ‘அவரோஹிணி’ங்கற பேர்ல சொல்லுது.

‘கப்பல்கள்ல பலகைகளை இணைக்கும் போது, இரும்பு ஆணி கொண்டு இணைக்கக் கூடாது. அப்படிச் செய் தால், கடலுக்கு அடியில இருக்கற காந்த மலைச் சிகரங்களால் கப்பலுக்கு ஆபத்து உண்டாகும்’னு சொல்றார் போஜராஜா. ‘யுக்தி கல்பதரு’ங்கற நூல் கப்பல் வகைகளைப் பத்தி - நீள, அகல, உயரம் உட்பட விரிவா பேசுது.

‘ப்ருஹத் ஸம்ஹிதை’ (கி.பி.550)ங்கற நூல் - அழகு சாதனங்கள், வாசனைத் திரவியங்கள் தயாரிக்கறதப் பத்திச் சொல்லுது. கண்ணுக்கு மை இட்டுக்கற மாதிரி, வெளுத்துப் போன தலைமுடிக்கு கருமை நிறம் (டை) பூசுவது, தலையில பொடுகு இல்லாம இருக்க குறிப்பிட்ட பொடியைப் பயன்படுத்துவது, ஊதுவத்தி, வாசனைப் பொடி என ஏராளமான தகவல்கள் அந்த நூல்ல கிடைக்குது.

அதனால, முன்னோர்கள் எல்லாம் ஏதோ பொழுது போகாம எழுதி வெச்சுட்டுப் போயிட் டாங்கன்னு கேலி பேசாம, அபூர்வமான அந்தத் தகவல்களை இன்னி வரைக்கும் காப்பாத்தி நம்மகிட்ட கொடுத்துட்டுப் போயிருக்கறத நினைக்கணும். அத நாம காப்பாத்தி அடுத்த தலைமுறைக்குச் சேர்க்கணும். அத எல்லாரும் செய்வீங்கங்கற நம்பிக்கையோட, இந்த அளவிலே நான்

விடைபெறுகிறேன்!” என்று முடித்தார் தாத்தா.

அனைவரும் எழுந்து நின்று கைகளைத் தட்டி, தாத்தாவைப் பாராட்டினார்கள். ‘இது எங்க தாத்தாவாக்கும்!’ என்ற பெருமிதம் முகத்தில் பொங்க, தாத்தாவின் கையைப் பிடித்தபடி வீடு திரும்பினாள் பேத்தி.

ஆனால், வீட்டில் ஒரு பெரும் பிரச்னை. அதை வேதம்தான் தீர்த்து வைக்க வேண்டும்!

பட்டாபி

வள்ளுவர் ஊசி... நீ கொஞ்சம் யோசி!

அசோசியேஷன் மீட்டிங்கில் இருந்து வீடு திரும்பிய தாத்தாவை, மிகவும் பெருமிதத்தோடு பின்தொடர்ந்தாள் பேத்தி. வீட்டுக் குள் நுழையும்போது ஒரே கூச்சல்; குழப்பம். தாத்தா வின் பின்னால் பதுங்கியபடியே பின்தொடர்ந்தாள் பேத்தி. தாத்தாவின் மருமகள் கண்கள் சிவக்க, வீட்டின் உள்ளே கத்திக் கொண்டிருந்தாள்.

தாத்தாவும் பேத்தியுமாக உள்ளே நுழைவதைப் பார்த்தவுடன் வேகமாக அவரை நெருங்கி, “நீங்க ஊருக்கெல்லாம் சொல்றது அப்புறமா இருக்கட்டும். மொதல்ல உங்க பேத்தியையும் பேரனையும் சரி பண்ற வழியப் பாருங்க!” என்றாள் மருமகள்.

நாற்காலியில் அமர்ந்த தாத்தா, “ஏம்மா! இன்னிக்கி என்ன இவ்வளவு கோவம்? என்ன ஆச்சு?” என்றார்.

கண்களால் மகளை முறைத்த மருமகள், “இன்னிக்கி ஸ்கூலுக்கு கொடுத்தனுப்பின சாப்பாட்ட, வேணும்னே கீழ கொட்டிட்டு வந்துருக்கா” என்றாள் கடுகடுப்பாக. “சோத்தக் கொட்டினானு சொல்றியே... உனக்கு எப்படித் தெரியும்?” என மருமகளிடம் கேட்டார்.

“அவ சாப்பிட்டிருந்தா, டப்பா க்ளீனா இருந்திருக் குமே... சோத்தக் கொட்டற அன்னிக்கெல்லாம் டப்பா வக் கழுவ மாட்டா” எனப் பதில் வந்தது எரிச்சலுடன். தாத்தா உடனே பேத்தியைப் பார்த்து, “அம்மா சொல்றதெல்லாம் உண்மைதானா?” என்று கேட் டார். உணவைக் கீழே கொட்டியதை ஒப்புக் கொண்டாள் பேத்தி.

“ஏம்மா! சோத்தக் கீழே கொட்டலாமா? உலகத்துல இருக்கற அத்தன பேரும் நாயாப் பாடுபடுறது, இந்த ஒரு வா(ய்) சோத்துக்குத் தானேம்மா. சோறே கெடைக்காம பல பேரு கஷ்டப்படும்போது, நீ

அதக் கொட்டலாமா?" என்றார் தாத்தா பொறுமையாக.

"இனிமே கொட்ட மாட்டேன் தாத்தா! ப்ராமிஸ்" என்றாள் பேத்தி.

அவள் தலையை மென்மையாகத் தடவிக் கொடுத்தார் தாத்தா. "கொழந்த! நீ மட்டும் இல்ல. பல பேரு இப்படித்தான் சோத்த வீணாக்கறாங்க. இப்படிப் பண்ணக் கூடாதுன்னு வேதமும் எவ்வளவோ சொல்லுது!"

உபநிடதங்களும்

"என்னது... சாப்பாட்டப் இருக்குதா? சொல்லு

பத்தி அதுலல்லாம் சொல்லி தாத்தா!" _ பேத்தி ஆர்வமானாள்.

"விரதங்கள்னு நாம பலதைச் சொன்னாலும் ஒரு முக்கியமான விரதம், நம்ம பல பேருக்குத் தெரியாது. சாப்பாட்டப் பழிக்கக் கூடாது; அதுவே ஒரு விரதம்னு தைத்திரிய உபநிடதத்துல பிருகுங்கறவருக்கு அவங்க அப்பா சொல்லிருக்கார். சாப்பிடும்போது அதப் பழிக்கறது, குத்தம் சொல்றது, இதெல்லாம் ஆரோக்கியத்துக்குக் கெடுதல். 'இந்த சாப்பாடு நல்லது செய்யும்; பலம் கொடுக்கும்; மனசத் தூய்மையா வெச்சுக்கும்'னு முழு நம்பிக்கை வெச்சு, சந்தோஷமா சாப்பிடணும்.

சாப்பாட்டப் பத்திச் சொல்லி, அதோட முக்கி யத்தைச் சொல்லிப் படிப்படியாப் போய், பிரம்மதத்துவம் வரைக்கும் அந்த முனிவர் சொல்லியிருக்கார். 'அன்னம் ந பரிசக்ஷீத தத்வரதம்'னு வேற சொல்றார். 'சாப்பாட்ட எறியக் கூடாது. இது விரதம்'ங்கறார். சூப்பர் சாப்பாடா இருந்தாக்கூட ஆசையில அளவுக்கு மிஞ்சிப் போட்டுக்கிட்டு, அப்பறமா சாப்பிட முடியலைனு தூர எறியக் கூடாது. 'உனக்காக மட்டும் உணவை உண்டாக்கினா போறாது. நாட்டுக்குப் பயன்படுற மாதிரி உணவை ஏராளமா உண்டு பண்ணு'னு அந்த முனிவர் சொல்லி இருக்கார். 'அன்னம் பஹி குர்வீத தத் வ்ரதம்'ங்கறார். இத விடப் பெருசான ஒரு பொருளாதார உபதேசம் கெடையவே கெடையாது. இதுவரையில உபநிடதம் என்ன சொல்றதுனு சொன்னேன். வா! இனிமேல வள்ளுவர் கிட்டப் போகலாம்" என்றார் தாத்தா.

"வள்ளுவரா? சாப்பாட்டைப் பத்தியா?" என்ற பேத்தி முகத்தில் ஆச்சரியம் காட்டினாள்.

"ஆமா. வள்ளுவர்தான். அவர் எப்ப சாப்பிட உட்கார்ந்தாலும் ஒரு சின்ன கிண்ணத்துல தண்ணி யும், ஒரு ஊசியும் வெச்சுக்கிட்டு உட்காருவாராம். அது எதுக்குன்னு, அவர் மனைவி வாசுகி ஒரு நாள்கூடக் கேட்டதில்ல. அந்தம்மாவோட கடை சிக் காலம் வந்திடுச்சு. இன்னும் கொஞ்ச நேரத்துல அந்தம்மா செத்துப் போகப் போறாங்க. கண்ணுல நீரோட வள்ளுவர், வாசுகி பக்கத்துலயே இருக்கார். அப்ப அந்தம்மா, 'ஏங்க! சாப்பிடும்போது, ஒரு கிண்ணத்துல தண்ணியும் ஊசியும் வெச்சுக்கிட்டு உட்காருவீங்களே... அது எதுக்குங்க?'னு கேட்டாங்க.

'வாசுகி! நீ சாப்பாடு போடும்போது, ஏதாவது சோத்துப் பருக்கை கீழே சிந்தினா, அத ஊசியால குத்தி எடுத்து, கின்னத்து தண்ணியில சுத்தம் பண்ணி எடுத்துக்கலாம்னுதான் வெச்சுருந்தேன். அதுக்குத் தான் தினமும் நீ வேலையே வைக்கறதில்லையேம்மா!'னு வள்ளுவர் தழுதழுத்துகிட்டே சொன்னாராம். உணவு மேல வள்ளுவருக்கு இருந்த அக்கறை மட்டுமில்ல... கணவன்- மனைவி எவ்வளவு ஒத்துமையா இருந்துருக்காங்க அப்படிங்கறதும் இதுலேர்ந்து தெரியுது பாரு!"

தாத்தா சொல்வதை இமை கொட்டாமல் கவ னித்தாள் பேத்தி. மருமகளின் கோபமும் சற்று தணிந் திருந்தது. அருகே அமர்ந்து அவளும் கவனிக்க ஆரம் பித்தாள்.

“நாம எல்லோரும் மகாபாரதத்து பக்கம் போயிட்டு வரலாமா? கர்ணன் பெரிய கொடை வள்ளல்ங்கிறது தெரியும். அவன் எல்லா தானமும் குடுத்தான். அன்னதானம் மட்டும் செய்யல. அதனால அவன் மேலுலகத்துல கஷ்டப்பட்டதாகவும், அன்னதானம் செய்யறதுக்காக மறுபடியும் பூமியிலேயே வந்து சிறுத்தொண்ட நாயனாரா பொறந்தான்னும் சொல் வாங்க. வியாசரோ, வில்லிபாரதமோ சொல்லாத இந்தத் தகவல், சிறுத்தொண்ட நாயனார் கதையில் இருக்கு.

இப்ப வா! வேதம் என்ன சொல்லியிருக் குன்னு பாக்கலாம். வேதம் நமக்கு ஆசீர் வாதம் பண்ணும்போது முக்கியமா ரெண்டு பாக்கியங்களைப் பத்திச் சொல்லுது. ‘அன்னவான் அன்னாதோ பவதி’ங்குது. அதாவது, அன்னத்தை நெறய உடையவனா இருக்கணும். அத அனுபவிக்கற பாக்கியமும் அவனுக்கு இருக்கணும்ங்கறது எளிமையான விளக் கம். பல பேருக்கு சாப்பாட்டுக்கே வழி இருக்காது; பல பேர்கிட்ட ஏராளமா இருந்தாலும் வியாதியாலோ அல்லது வேற ஏதாவது காரணத்தாலயோ சாப்பிட முடியாம போகும். இந்தக் குறையே இல்லாம இருக்கணும்னுதான் வேதம் ஆசீர் வாதம் பண்ணுது.

இப்ப சொல்லு! சாப்பாட்டு விஷயத்துல வேதம் சொன்ன தீர்வு புரிஞ்சுதா? ஒழுங்கா இருப்பியா?” என்றார் தாத்தா.

“நல்லா புரிஞ்சுது தாத்தா! இனிமே ஒரு பருக்கை கூட சோத்த வீணாக்க மாட்டேன்!” என்றாள் பேத்தி. தாத்தா, மருமகள் பக்கம் திரும்பினார். “இது வரைக்கும் உன் பொண்ணுக்கு சொல்லியாச்சு- அது வும் நல்ல விதமா. அவ கொழந்த. ஆனா நீ கோவத்துல கொழந்தையைத் திட்டறே; மிரட்டறே. பெத்த குழந் தையை இப்பிடித் திட்டறியே, இது என்ன நியாயம்? உங்க கால விஞ்ஞானப்படியும் இது தப்புங்கறது தெரியலியா? ‘விஞ்ஞானம் சொன்னாலும் கேக்க மாட்டேன்; இதிகாச புராணம் சொன்னாலும் கேக்க மாட்டேன்’னா என்ன செய்யறது?”

“விஞ்ஞானமா?” என்று மருமகள் ஆச் சரியமாகப் பார்க்க... தொடர்ந்து தாத்தா தன் மருமகளுக்கு விளக்கினார். மருமகள் மட்டும் அல்ல; நாமும் வியப்போம்.

இளைஞர் சக்தி

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 8

பட்டாபி

மூக்கு குத்திக் கொள்வது எதற்காக?

தாத்தா சொல்லும் விஞ்ஞான விளக்கம்

கோபத்தியைத் திட்டிய மருமகளைத் தன் எதிரில் உட்கார வைத்த தாத்தா மெள்ளப் பேச்சை ஆரம்பித்தார்: “ஏம்மா! உன் குழந்தைகள ‘நாசமாப் போ’னு திட்டறியே! அப்படி ஆனா உனக்கு சந்தோஷமா? நெனச்சுப் பாரு! நீ இதே மாதிரி சின்ன வயசுல ரகள பண்ணினப்போ, உங்க அப்பா - அம்மா என்ன சொல்லித் திட்டினாங்க?” என்றார்.

சில விநாடிகள் யோசித்த மருமகள், “நாசமத்துப் போக அப்படினு திட்டினதா ஞாபகம்” என்றாள்.

“சரியாத்தான் சொல்றே! கோபத்துலகூட ‘நாசம் அற்றுப் போகணும்’னுதான் பெரியவங்க வாழ்த்தா சொல்லுவாங்க. ஏன் அப்படிப் பண்ணினாங்க? யோசிச்சுப் பாரு! வீட்டுக்கு வீடு சுவர்ல லட்சுமி படம் வரைஞ்சு வெச்சு அல்லது சாமி படங்கள்லாம் வெச்சு பூஜை செய்யறோம். அமங்கலமா பேசலாமா? ஒவ்வொரு வீட்டுலயும் கிரகலட்சுமி, கண்ணுக்குத் தெரியாம இருப்பா. நீ சொல்ற எந்த ஒரு வார்த்தையும் ‘அப்படியே பலிக்கட்டும்!’னு அந்த கிரகலட்சுமி ஆசீர்வாதம் பண்ணுவா!” என்ற தாத்தாவை இடை மறித்தாள் மருமகள்.

“எப்படி?”

“இதுக்கெல்லாம் உனக்கு லேபரட்டரில பிப்பெட்டு - பியூரெட்டு வெச்சா காமிக்க முடியும்? இருந்தாலும், உனக்குப் புரியற மாதிரி சொல்றேன். செல்போன் வெச்சிருக்கியா?” - தாத்தா.

“இருக்கே.” - மருமகள்.

“ஏம்மா, நீ எங்க இருந்தாலும் உன்னப் பிடிச்சு உங்கூடப் பேச முடியுதுல்ல?”

“ஆமா. செல்போன்ல அது சர்வ சாதாரணம்.”

“நீ குடுத்த உன் நம்பரை வெச்சு எப்படி உன்னப் பிடிக்க முடியுதோ, அதே மாதிரிதான் நீ சொன்ன வார்த்தைகளில் உள்ள அதிர்வை வெச்சு, கிரக லட்சுமியும் உன்னப் பிடிக்கும்னு சாஸ்திரம் சொல்லுது!” என்றார் தாத்தா நிதானமாக.

“புரியுது. இனிமே அமங்கலமா பேசமாட் டேன்” என்றபடி ஆவி பறக்க சாதமும் கம கமக்கும் ரசமும் கொண்டு வந்து தாத்தாவுக்குப் பரிமாறத் தயாரானாள் மருமகள்.

மற்றொரு நாள்... பக்கத்து வீட்டு அம்மா தன் மகளுடன் வந்தாள். “ஏங்க பெரியவரே! எங்க வூட்டுல எல்லாரும் தவறாம மூக்குக் குத்திக்குவோம்; காதும் குத்திக்குவோம். எந்த நேரத்துல இதப் பெத்தேனோ தெரீல. நீங்களாச்சும் இது புத்தில படறா மாதிரி சொல்லுங்க!” என்று முறையிட்டாள். பெண் குழந்தையை ஒரு முறை பார்த்தார் தாத்தா.

“என்ன தாத்தா இது? இந்தக் காலத்துல போய் மூக்கக் குத்திக்க, மூஞ்சியக் குத்திக்கனு சொல்லிக் கிட்டு! நாங்க ஒண்ணும் முச்சூடா மாட்டோம்னு சொல்லலியே. அதுக்கு பதிலா ஆர்ட்டிஃபீஷியலா ‘டப்ஸ்’ விக்கறாங்க! அதை வாங்கி மாட்டிக்கிட்டா என்ன தப்பு?” எனக் கேட்டாள் சிறுமி.

“இரும்மா... இரும்மா! நீ பாட்டுக்கு இதுக்கு பதிலா அது, அதுக்கு பதிலா இதுன்னு போய்க்கிட்டே இருக்காத. ஏற்கெனவே வாழை இலைக்கு பதிலா, பிளாஸ்டிக்ல வாழை இலை, குங்குமத்துக்கு பதிலா ஸ்டிக்கர் பொட்டுன்னு போய், மாவிலைத் தோரணம்கூட பிளாஸ்டிக்ல வந்தாச்சு. நல்லவேள. விபூதி, திருமண்ணெல்லாம் இன்னும் பிளாஸ்டிக்ல வரல. இப்ப உன் பிரச்னைக்கு வா. காரணங்கள் சொல்றேன், கேட்டுக்க.

பெண்ணோட மூச்சுக் காத்துக்கு, ஆண்களோட மூச்சுக் காத்த விட பவர் அதிகம். சக்தி - அதாவது ஸ்டெமினா அதிகம். அந்த மூச்சுக் காத்து முழுசா எதிர்ல இருக்கவங்க மேல படக் கூடாது. அதுனாலதான் மூக்குத்திங்கறதப் போட்டு, அதை கண்ட்ரோல் பண்ணி வெக்கிறாங்க. அப்படி மூக்குத்திய ஒரிஜினலா தங்கத் துலயே போட்டுக்கிட்டதுனால, ஆரோக்கியமா இருந்தாங்க. இன்னிக்கி அதுக்கு பதிலா செயற்கை டப்ஸ் வந்துடுச்சு. இந்த செயற்கை நகை மூக்குலியோ, காதுலியோ போய்ப் புடிச்சுக்கிட்டு இருக்குமே தவிர, ஒரிஜினலோட பவர் இதுக்குக் கிடையாது. அது மட்டுமில்ல... டூப்ளிகேட் நகை மூக்குலியோ, காதுலியோ ‘நச்’சுனு புடிச்சுக்கிட்டு இருக்கறதால, அங்க ரத்த ஓட்டமும் தடைபட வாய்ப்பு இருக்கு இல்லியா?!”

கேட்டுக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுச் சிறுமி படபடத்தாள்: “அதெல்லாம் சரி தாத்தா. ஆரோக் கியம்ங்கறது எல்லாருக்கும் பொதுதானே. அப்ப ஏன் ஆம்பளைங்களும் காது குத்திக்கக் கூடாது?”

அவளைத் தட்டிக் கொடுத்த தாத்தா, “பொடிசு! பொடிசு! இந்தக் காலத்துக் கொழந்தயா இருந்தாலும், நீயும் என் ரூட்டுலியேதான் வர்ற. வா! அதயும் உனக்குப் புரியும்படியா பாக்கலாம். ஆம்பளைங்களும் காது குத்திக்கிட்டுத்தாம்மா இருந்தாங்க. இப்ப என் காதப் பாரு!” என்று தன் காதுகளை ஆட்டிக் காட்டினார். காது குத்திய துவாரம் அங்கு இருந்தது.

“நானும் நீயும் சேந்து இந்த உலகத்த அப்படியே திருத்திட முடியுமா என்ன? நாம ஒழுங்கா இருந்துட்டுப் போவோமே குழந்தே... என்ன சொல்ற?” - தாத்தா.

“கரெக்ட் தாத்தா. மேல சொல்லுங்க!” - சிறுமி.

“நானும் ‘மேல’ (விணீறீமீ) பத்திதாம்மா ஃபீமேல்கிட்ட சொல்லிக்கிட்டுருக்கேன்...” தாத்தா.

வாய் விட்டுச் சிரித்து விட்டாள் சிறுமி.

“காது குத்தறது, மூக்கு குத்தறதெல்லாம், அந்தக் காலத்துலியே நம்ம பாட்டன் - பூட்டனெல்லாம் அனு பவபூர்வமா சொன்ன அக்குபிரஷர் வைத்தியம்மா. இத, சுமார் பதினஞ்சு வருஷங்களுக்கு முன்னால முரளிதர்ங்கற ஈரோடு டாக்டர் அனுபவபூர்வமாவே சொல்லிருக்காரு. சின்னப் புள்ளைங்க பல பேர அவர் கிட்ட வைத்தியம் பாக்கக் கூட்டிக்கிட்டு வந்தாங்க. எல்லாத்துக்கும் ஒரே ஒரு பிராப்ளம்தான். அடிக்கடி ஜன்னி வருதுங்கறதுதான் அது. அனுபவசாலியான அந்த டாக்டர், அத்தனை கொழந்தைங்களுக்கும் முறைப் படி காது குத்த வச்சாரு. தன் நேரடிப் பார்வையிலேயே வெச்சு சோதனயும் செஞ்சாரு. ரிசல்ட் என்னாச்சு தெரி யுமா? அந்தக் கொழந்தைங்களுக்கு அதுக்கு அப்பறமா ஜன்னியே வரல. போயே போச்சு! இட்ஸ் கான்” என்று சிரித்தார் தாத்தா.

“நாளைக்கே நான் மூக்குக் குத்திக்கறேன் தாத்தா. தாங்க்ஸ்!” என்று சொல்லிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள் சிறுமி.

அவள் தாயார், “இப்ப நீங்க சொன்னதக் கேட்டதுக்கு அப்பறம்தான், எனக்கே விவரமா தெரியுது. நான்கூட அப்பப்ப காதுல, மூக்குல இருக்கறத கழட்டி கழட்டி வெச்சுருவேன். இனிமே அப்படிப் பண்ண மாட்டேன்” என்று தன் காதைத் தடவியவள், “ஐயையோ! என் தோட்டைக் கழட்டி எங்கியோ வெச்சுட்டேன். ரெண்டு பவுனு” என்று கத்தியபடியே வெளியே பாய்ந்தாள்.

மருமகள் பக்கம் திரும்பிய தாத்தா, “உன் வீட்டுக் காரன் ஆபீஸ்ல ஏதோ ‘ஆண்டு மலர்’ போடப்போறாங் களாம். ‘மலை ஏர்றது எதுக்காக?’னு நாலு பக்கம் எழு தித் தரச் சொன்னான். சாப்பிட்டுட்டு, அத எழுதி வெச்சுட்டு கடை வீதி வரை போகணும்!” என்றார்.

“தாத்தா! மலை ஏர்றதுக்கு எத்தன ஆக்ஸிஜன் சிலிண்டர் கொண்டு போவணும்? எத்தன ஷூ கொண்டு போவணும்னு எழுதப் போறியா?” என்று கேட்டாள் படுத்திருந்த பேத்தி, போர்வையை விலக்கியபடி.

“வாண்டு! வாண்டு! வாயப் பாரு! எழுதி வெச்சுரு வேன். காலையில பாத்துத் தெரிஞ்சுக்க!” என்ற தாத்தா எழுதத் தயாரானார்.

பட்டாபி

‘இருக்கிற பொக்கிஷங்களையாவது காப்பாற்றுங்களேன்!’



விடிந்ததும் விடியாததுமாக எல்லோ ரும் அவரவர் வேலையைப் பார்த் துக் கொண்டிருந்தார்கள்.

“அப்பா, எங்க ஆபீஸ் மலருக்காக மலைகளின் மகிமையைப் பற்றிக் கேட்டிருந்தேனே! எழுதியாச்சா?” என்று கேட்டான் பிள்ளை.

“எழுதியாச்சுரா! ஆபீஸ் போகும்போது வாங்கிக் கிட்டுப் போ!” என்றார் பெரியவர்.

“சரியா எழுதிருக்கியா? சாதாரணமா பேசற நடையிலதானே எழுதியிருக்க?” என்று கொக்கி போட்டான் பிள்ளை.

“சந்தேகப் பிராணி... சந்தேகப் பிராணி! இடுப்புல இருக்கற பேண்ட்டையே நம்பாதவன் நீ. எல்லாம் சரியாத்தான் எழுதியிருக்கேன் போ!” என்று சிரித்தார் பெரியவர்.

“கோவிச்சுக்காதப்பா! எங்க ஆபீஸ்ல போடற மலரை, திருவண்ணாமலையில் ரிலீஸ் பண்ணப் போறாங்க. அங்க பாமர மக்களும், படிச்சவங்களுமா ஏராளமா கும்பலா இருப்பாங்க. எல்லாருக்கும் புரிய வேண்டாமா? அதுக்குத்தான் கேட்டேன். நீ எழுதியிருக்கறத, சும்மா அப்பிடியே ஒரு அவுட்-லைன் மாதிரி சொல்லேன்” என்று கேட்டான் பிள்ளை.

“மலைகள்ல எல்லாம் ஒரு சாமிய வச்சு, அந்த மலை மேல மக்கள் ஏறி பூஜை செய்யணும்னு முன்னோர்கள் ஏற்பாடு பண்ணி வெச்சதே முழுசா, ஆரோக்கியத்துக்குத்தான். ஆனா, இப்ப என்னடான்னா... எல்லா மலையிலயும் உச்சி வரைக்கும் கார், ஸ்கூட்டர்னு எல்லாம் போகுது. ப்ச்! என்னத்த செய்யிறது? வயசான வங்க, நோயாளிங்க அப்பிடிப் போனா பரவாயில்ல. எளம் வயசுப்

புள்ளங்களும் நடுத்தர வயசுக்காரங்களும்கூட இப்ப அப்பிடிப் போறாங்க! இப்ப நான் சொல்றதக் கேட்டு தெம்பு இருக்கறவங்க, மலை மேல நடந்து ஏறினாங்கன்னு வெச்சுக்க. ஆரோக்கியம் கெடைக்கும்.

மலை மேல சுத்தமான காத்து. அத சுவாசிக்கற துனால உடம்பு ஆரோக்கியமா இருக்கு. மலை ஏறுறதுனால உடம்புல இருக்குற கெட்டது எல் லாம் வேர்வையா வெளியில போயிடுது. ஊளச் சதையெல்லாம் கரைஞ்சு போவுது. உடம்புக்குள்ள இருக்கிற நுரையீரல், நாடி - நரம்பெல்லாம் ஸ்ட்ராங்கா ஆவுது. கோளாறு இல்லாம சூப்பரா வேல செய்யிது. அஜீரணம்ங்கறது போயி, நல்லா பசி எடுக்குது.

மனசுக்கு எதமா இருக்குற மலைக் காத்து, உடம்பக் குளுமையா வெக்குது. மலைமேல ஏறுறதால மூச்சு வாங்கறோம். நுரையீரல் க்ளீனா வேல செய்யிது. தூய்மையான பிராண வாயுவை நாம காத்துல இருந்து உள்ள இழுத்துக்கறோம். கெட்ட காத்து வெளியில போயிடுது.

மாத்திரை, மருந்து, ஆப்ரேஷனுக்கெல்லாம் சைடு எஃபெக்ட்ஸ் உண்டு. வேற மாதிரியான விளைவுகள் கூட உண்டாகலாம். ஆனா, நான் சொல்றதுல பக்க விளைவுகள் எதுவும் கிடையாது. மலையில இருக்கற பல விதமான மூலிகைக் காத்து ஆரோக்கியத்தைக் கொடுக்குமே தவிர, பிரச்னை பண்ணாது. அது மாத்திரம் இல்ல. அந்தந்த மலைமேல இருக்குற சாமி விக்கிரகத்துக்கு அபிஷேகம் செஞ்ச தீர்த்தத்தைக் குடிச்சா, நல்லா குழந்தை பிறக்கும்னு சொல்வாங்க.

உதாரணமா திருச்செங்கோடுங்கற ஊர்ல மலைமேல இருக்குற அர்த்தநாரீஸ்வரருக்கு அபி ஷேகம் பண்ணின தீர்த்தம், இந்தக் குழந்தை வரத்துக்குப் பெரிய பிரசாதம். அங்க இருக்குற அர்த்தநாரீஸ்வரர் விக்கிரகம் நவபாஷாணத்தால ஆனது. குழந்தைச் செல்வம் இல்லாத ஏராள மானவங்க, திருச்செங்கோடு மலை மேல ஏறி, அர்த்தநாரீஸ்வரரோட தீர்த்தப் பிரசாதம் சாப்பிட் டுக் குழந்தை பெத்து இருக்காங்க.

பழநி மலையிலயும் இதே மாதிரிதான். நாள் பூரா அந்த நவபாஷாண முருகருக்கு அபிஷேகம் பண்ணிப் பிரசாதம் தந்தாங்க. நல்ல பலன் கெடச் சுது!" என்ற தாத்தாவை மறித்தாள் - இந்த முறை பிள்ளைக்கு பதிலாக அவன் மனைவி.

"அப்பா! தடங்கலுக்கு வருந்துகிறோம். பழநியில இப்பல்லாம் முந்தி மாதிரி, எப்பப் பாத்தாலும் அபிஷேகம் நடக்கறது இல்ல!" என்றாள்.

தாத்தாவின் முகம் சற்று வாடியது. "அம்மா! மருமகளே! என்ன செய்யறது? முன்னோர்கள் குடுத்த இந்த மாதிரியான அற்புத பொக்கிஷங்களை எல்லாம் கொஞ்சங் கொஞ்சமாப் பாழாக்கிட்டோம். இருக்கறதயாவது பத்திரமா காப்பாத்தலாம்னுதான், என்னை மாதிரி ஆட்கள் அங்கங்க, அப்பப்ப கத்திக்கிட்டு இருக்கறோம். இந்த வயசுல என்னால வேற என்ன செய்ய முடியும்?" என்றார்.

"சரிப்பா! சரிப்பா! மலைங்களைப் பத்தியெல்லாம் சொல்லிக்கிட்டு வந்தீங்க. திருவண்ணாமலையப் பத்தி ஒண்ணுமே சொல்லலியே?" என்றாள் மருமகள்.

"அதப் பத்தித் தனியா சொல்லணும்மா? அதுனாலதான் அதக் கடைசியா வெச்சுக்கிட்டேன்!" என்ற தாத்தா தொடர்ந்தார்:

"மத்த மலையில எல்லாம், எல்லாரும் ஏறலாம். திருவண்ணாமலை மலை மேல அப்பிடி ஏறக் கூடாது. ஏன்னாக்க, அது அக்கினி மலை. அதை நிரூபணம் செய்யற மாதிரி, இன்னிக்கும் என்னதான் மழை பெஞ்சாலும் மத்த மலைங்கள மாதிரி மலையிலேர்ந்து தண்ணி கீழ வழிஞ்சு ஓடாது. பொட்டுத் தண்ணிகூட கீழ வழியாது. திருவண்ணாமலையில கிரிவலம்தான் முக்கியம். அப்பிடி கிரிவலமா போறப்ப, சும்மா ஏதோ ஜாலி ட்ரிப் போவுற மாதிரி போவக் கூடாது. வலம் வரும்போது நிதானமாத்தான் நடக்கணும். கைகளைப் பக்க வாட்டுல இஷ்டம் போல வீசி ஆட்டிக்கிட்டே போவக்

கூடாது. அமைதியா போவணும். ஏன்னாக்க, இன்னிக்கும் நம்ம கண்ணுக்குத் தெரியாம, ஏராளமான சித்த புருஷர்கள் உலாவிக்கிட்டு இருக்காங்க. அவுங்களுக்கு நாம இடைஞ்சல் பண்ணக் கூடாது" என்றார் தாத்தா.

"அப்பா! நீ சொன்னதை எல்லாம் அப்பிடியே இதுல எழுதி இருக்கியா?" என்று கேட்டான் பிள்ளை.

"அப்பிடியே எழுதி இருக்கேன்... கவலப்படாதே" என்றார் தாத்தா.

ஸ்கிரிப்டை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக வெளியேறினான் பிள்ளை.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

பட்டாபி

‘மார்கழி மட்டும் என்ன உசத்தி?’

அன்று வீடு முழுதும் ஒரே ரகளை. கண்டது கண்டபடி இறைந்து கிடந்தன. பரண்மேல் இருந்த இரண்டு, மூன்று புத்தகக் கட்டுகள் கீழே இறக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டன. ‘என்ன தேடுகி றோம்’ என்று யாரும் சொல்லாததால், இந்த ரகளையில் தாத்தா பங்கேற்கவில்லை. சற்று நேரத்தில் பேரன்- பேத்திகளும், பிள்ளையும், மருமகளும் ஓய்ந்து போய் உட்கார்ந்தார்கள்.

படித்துக் கொண்டிருந்த பேப்பரை மடித்து வைத்த தாத்தா, “என்ன? எல்லாரும் தேடியாச்சா? கிடைச்சுதா? கிடைக்காதே!” என்றார் சிரிப்போடு. அனைவரும் ஒரே குரலில், “நாங்க என்ன தேடறோம்னு தெரியுமா?” எனக் கேட்டார்கள்.

“திருப்பாவை, திருவெம்பாவை புத்தகத்தைத்தானே தேடுகிறீர்கள்?” என்றார் தாத்தா.

“ஆமாம்” என ஆச்சரியத்தோடு குரல்கள் வந்தன.

“மார்கழி மாசம் வந்தா, இந்த மாதிரி தேடுவீங்கனு தெரிஞ்சுதான் ஏற்கெனவே எடுத்து வெச்சுட்டேன்” என்றார் தாத்தா.

“அதான் நாங்க தேடினப்ப கெடக் கலியா?” என்றபடியே அனைவரும் தாத்தா வைச் சூழ்ந்து கொண்டார்கள். “ஏன் புத்த கத்தை எடுத்து வெச்சுக்கிட்டீங்க? நாங்க இன்னிக்கு மானாவாரியா கேள்வி கேக்கப் போறோம்!” என்ற னர்.

மடித்து வைத்த பேப்பரைக் கையில் எடுத்தார் தாத்தா. “அவங்க அவங்க வேலயப் பாருங்க! நான் பேப்பரை முடிக்கிறேன்” என்றார்.

“இன்னிக்கி லீவு. ஞாயித்துக்கிழமை. அதனால தான் உங்ககிட்டே ஆற அமர பேசலாம்னு. பேப்பரைக் கொண்டாங்க!” என்று சொல்லி, தாத்தாவின் கையில் இருந்த பேப்பரைப் பிடுங்கிக் கீழே வைத்தார்கள் சுற்றியிருந்தவர்கள்.

“ஓ! வேற வேலை இல்லேனுதான் என்னச் சுத்திக் கோலாட்டம் போடறீங்களா? சரி... சரி வாங்க! நீங்களா கேக்கறப்ப நான் சொல்லாம இருக்கக் கூடாது. ஒவ்வொருத்தரா கேளுங்க”

“மார்கழி மாசம் மட்டும் என்ன ஒசத்தி?” - முதல் கேள்வியை கேட்டாள் மருமகள்.

“நமக்கு ஒரு வருஷம்கறது, தேவர்களுக்கு ஒரு நாள்னு கணக்கு. அந்தக் கணக்குப்படி மார்கழி மாசம்ங்கறது தேவர்களுக்கு அதிகாலை நேரம். அதனாலதான், அந்த நேரத்துல

அதாவது மார்கழி மாசம் முழுதும் தெய்வ வழிபாடு செய்ய றோம். ‘மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்’னு கிருஷ்ண பரமாத்மாவே கீதையில சொல்லியிருக்கார்.”

பதில் சொன்ன தாத்தாவை இடைமறித்தான் பேரன்: “தாத்தா... மார்கழி மாசப் பனியில இழுத்துப் போத்திக்கிட்டுத் தூங்கினா, என்னமா ஒரு சந்தோஷம். அதுவும் விடியக் காலை வேளையில...”

அவன் கன்னத்தை செல்லமாகத் தட்டிய தாத்தா தொடர்ந்தார்: “மார்கழி மாசத்துலதான் நமக்கு ஆரோக்கியத்தக் குடுக்கற ஓசோன் அதிகமா இருக்கு, அதுவும் அதிகாலை நேரத்துல நிறையவே இருக்குன்னு விஞ்ஞானமும் சொல்லுது. அத முழுமையா நாம அனுபவிக்கணுங்கிறதுக்காகத்தான் விடிகாலையில வீதி வீதியா பஜன பாடிட்டுப் போவாங்க. உன்னை மாதிரி போர்த்திக்கிட்டு தூங்க மாட்டாங்க... புரிஞ்சுதா?”

இப்போது மகன் கேட்டான்: “சரிப்பா... மார்கழி மாசத்துல திருப்பாவை, திருவெம்பாவைக்கு மட்டும் அப்படி என்ன முக்கியத்துவம்?”

தாத்தா விளக்கினார். “திருப்பாவை- திருவெம்பாவைங்கற ரண்டும் உருவானது மார்கழி மாசத்துலதான். அதுனால இதை மக்கள் மத்தியில சின்னஞ் சிறு வயசுல இருந்து பழக்கப்படுத்திடணும்னு காஞ்சி மகா ஸ்வாமிகள் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடெல்லாம் நடத்தி, அந்தப் பாட்டுகளைப் பாக்காம ஒப்பிக்கறவங்களுக்குத் தங்கக் காசு - வெள்ளிக் காசெல்லாம் குடுத்தாரு. ரண்டு பாவை நூல்களையும் படிக்கணும். திருப்பாவையில மொதல் பாட்டே, மாணிக்கவாசகர நெனச்சு ஆரம் பிச்ச மாதிரி ‘மா’ர்கழித் திங்கள்னு ஆரம்பிக்குது. திருவெம்பாவையில மொதல் பாட்டோ, ஆண்டாள நெனச்சு ஆரம்பிச்ச மாதிரி ‘ஆ’தியும் அந்தமும்னு ஆரம்பிக்குது.” – ஆர்வத்தோடு தாத்தா சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த பேத்தி, “தாத்தா... எனக்கு ஒரு சந்தேகம். மார்கழில மட்டும் ஸ்பெஷலா கோலம் போட்டு, அதுமேல பறங்கிப் பூவோ, பூசணிப் பூவோ வெக்கிறோமே, அது எதுக்கு?” என்றாள்.

“இப்ப இருக்கற மாதிரி அந்தக் காலத்துல, கல்யாணத்துக்கு ஜோடி பார்க்கிற மேட்ரிமோனியல் பகுதியெல்லாம் கெடையாது. அதுனால, எந்தெந்த வீட்டுல கல்யாணத்துக்குப் பொண்ணோ - பிள்ளையோ தயாரா இருக்காங்களோ... அந்த வீட்டு வாசல்ல கோலத்துல பூ வெப்பாங்க. காலையில வீதி வீதியா பஜன பாடிட்டு வர்றவங்க கண்ணுல அந்தப் பூ தென்படும். தை மாசம் பொறந்த உடனே பேசி, கல்யாணத்த முடிச்சுடுவாங்க!

மார்கழி மாசம் மட்டும் பெருசு பெருசா கோலம் போடணும்ங்கறது இல்ல. தினந்தோறும் போடணும்.

அதுவும் மொக்கு மாவு (கல் தூள்) மாதிரி இருக்கிற மாவுங்கள்ல கோலம் போடக் கூடாது. இதப் பத்தி காஞ்சி மகா ஸ்வாமிகள் அற்புதமா சொன்னாரு. ஒரு முறை நான் பெரியவரை தரிசனம் பண்றதுக்காகத் தேனம்பாக்கம் போயிருந்தேன். ராத்திரி நேரம். பெரியவரு படுத்துக்கப் போயிட்டாரு. அங்கியே தங்கிட்டேன். மறு நாள் அதிகாலை நேரம். பெரியவரு, வரதராஜ பெருமாள் கோயில வலம் வரக் கௌம்பிட்டாரு. ஸ்ரீகண்டன், பாலு, நான் இன்னும் ரண்டு மூணு பேரும் கூடப் போனோம்.

வலம் வரும்போது ஒரு வீட்டு வாசல்ல சின்னக் கொழந்த ஒண்ணு கோலம் போட்டுக்கிட்டு இருந்துச்சு. அத உத்துப் பாத்த பெரியவரு, 'நீ போட்டியா (கோலத்தை)? நன்னா இருக்கே. ஆனா கோலம் போடறபோது, மொக்கு மாவுலல்லாம் போடக் கூடாது. அரிசி மாவுலதான் போடணும். பண்ணுவியா?'னு கேட்டாரு. கொழந்த தலய ஆட்டுச்சு. அரிசி மாவுல கோலம் போட்டா, எறும்புங்கள்லாம் வந்து அதத் திங்கும். அதை விட்டுட்டு சாக்பீஸத் தண்ணில நனைச்சு, தலையில் மஃப்ளர் கட்டிகிட்டு, ராத்திரியே கோலம் போட்டுட்டு காலையில நல்லாத் தூங்கினா, என்னத்தச் சொல்றது!" தாத்தா வருத்தப்பட்டார்.

"வருத்தப்படாத தாத்தா! இனிமேல்லாம் நாங்க அப்படிப் பண்ண மாட்டோம். சரி... சரி... திருப்பாவை- திருவெம்பாவை புத்தகத்தக் கொண்டா. ஸ்கூல் போட்டியில சொல்லணும்; பிரைஸ் வாங்கணும்!" என்றாள் பேத்தி.

சிரித்தபடியே பக்கத்தில் இருந்த சிறிய அலமாரியைத் திறந்து, திருப்பாவை- திருவெம்பாவை நூல்களை எடுத்துக் கொடுத்தார் தாத்தா.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! -11

பட்டாபி

அன்று வீடே அமைதியாக இருந்தது. தாத்தா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். பேரனும் பேத்தியும் வீட்டில் இல்லை; பள்ளிக்கூடம் போய் விட்டார்கள் போலிருக்கிறது. இனம் புரியாத ஒரு சந்தோஷச் சூழல் நிலவியது தெரிந்தது.

தாத்தாவின் மகனும், மருமகளும் அவர் எதிரில் வந்து நின்றார்கள். தாத்தா நிமிர்ந்து பார்த்தார். மருமகள் தன் கணவனுக்கு ஏதோ ஜாடை செய்துவிட்டு, வெட்கத்தோடு குனிந்து கொண்டாள். கணவனோ, 'நீயே சொல்!' என்பது போல் ஜாடை செய்துவிட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

'ஏதோ நடந்திருக்கிறது' எனத் தீர்மானித்த தாத்தா, பேப்பரை மடித்து வைத்துவிட்டு, "என்னடா? ஒருத்தர் மூஞ்சிய ஒருத்தர் பாக்கறீங்க! என்ன ஆச்சு? கொழந்த அழுதுதா?" என்றார்.

"புள்ளயா பொண்ணானு தெரியல. ஆனா கொழந்தேனு கன்ஃபார்ம் ஆயிடுச்சு!" என்றான் மகன்.

"அட்ரா சக்கை! டாக்டரப் போய்ப் பாத்தியா?" என்று கண்களில் மலர்ச்சியைக் காட்டினார் தாத்தா.

"நேத்து ராத்திரியே போய்ப் பார்த்தோம். கன்ஃபார்ம் பண்ணிட்டு, 'எதையாவது நெனச்சு மனசப் படுத்திக்காதம்மா! அது வயத்துல இருக்கற உன் கொழந்தய பாதிக்கும். மைண்ட (விவீஸீபீ) ஃப்ரீயா வெச்சுக்கிட்டு ரிலாக்ஸா இரு! மேல, நெறைய உங்க மாம னார் சொல்லுவார். அவர்கிட்ட கேட்டுக்க! அவருக்கு என் நமஸ்காரங்களயும் சொல்லும்மா!' அப்பிடினு சொன்னார். ராத்திரி நாங்க வந்தபோது நீங்க தூங்கிட்டு இருந்தீங்க. அதான் இப்ப சொல்லிட்டோம்" என்றான் பிள்ளை.

தாத்தாவுக்கு வாயெல்லாம் பல். "நல்ல கை ராசிக் காரண்டா அந்த டாக்டர். அவன் பேசற பேச்சு லியே பாதி வியாதி சரியாப் போயிடும். அவன், அவங்க அப்பா -

அம்மாகிட்ட இருந்ததைவிட, என் தோள் மேலயும், கைகள்லயும் இருந்தது அதிகம், அனுபவசாலி. மருமகளே! வாம்மா! உட்காரு!" என்றார்.

மருமகளும் அருகில் வந்து அமர்ந்தாள். தாத்தா சொல்லத் தொடங்கினார்: "எதுக்கும் கவலைப் படாதம்மா! நார்மலா நீ செய்யற வேலயெல்லாம் வழக்கம் போல செஞ்சுட்டு வா! வெட்டு, கொல, குத்துங்கற மாதிரில்லாம் வர்ற நிகழ்ச்சிகள டி.வி-ல கூடப் பாக்காத!" என்றார்.

மருமகள் தலை குனிந்தபடியே, "இதுக்கு முன்னாடி பிரசவம் எல்லாம் எம் பொறந்த வீட்டுல நடந்துச்சு. நம்ம வீட்டுல நடக்கற மொதப் பிரசவம் இது. இந்த மாதிரி நேரத்துல, நடந்துக்க வேண்டியதப் பத்தி சொல்லுங்க மாமா! குறிப்பா இன்னிக்கிப் புள்ளைங்களுக் குக்கூட அடிக்கடி உடம்பு சரியில்லாம போயிடுது. ஆஸ்பத்திரிக்கு அலைய வேண்டியதா இருக்கு!" என்று அங்கலாய்த்தாள்.

தாத்தா சிரித்தார். "அம்மா! இதுக்கு நான் பதில் சொல்றத விட, கிருபானந்த வாரியார் சொன்னதைச் சொல்றேன். 'இந்தக் காலத்துல பொறக்கற புள்ளைங்க அடிக்கடி ஏன் ஆஸ்பத்திரிக்குப் போவுதுங்க? காரணம் வேற ஒண்ணுமில்ல... அந்தக் காலத்துல எல்லாம் புள்ளைங்க, பாட்டி வீட்ல பொறக்கும். அடிக்கடி பாட்டி வீட்டுக்குப் போயிட்டு வரும். எல்லாம் பொறந்த எடத்துப் பாசம்தான். அதுனாலதான் பாட்டி வீட்டுக்குப் போயிட்டு வந்துட்டு இருந்துச்சு. இப்ப எல்லாம் பாட்டி வீட்லயா புள்ளைங்க பொறக்குது? ஆஸ்பத்திரியில இல்ல பொறக்குது. அதுனால தான் பொறந்த இடமான ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி போயிட்டு வந்துட்டு இருக்குது புள்ளைங்க. யோசிக்க வேண்டிய விஷயம் இது!' என்பார் வாரியார். இன்னிக்குப் பொண்ணுங்களும் வேலைக்குப் போவுதுங்க. வேலையில டென்ஷன், அதிகாரிங்க மற்றும் கூட வேலை செய்யறவங்களால டென்ஷன், வீட்டுல ஆயிரத்தெட்டு டென்ஷன். இப்பிடி எப்பவும் டென்ஷனாப் போச்சு வாழ்க்கை. இதுல புத்திசாலிங்க அமைதியா இருந்து வாழ்க்கையை நல்ல விதமா நடத்திட்டு இருக்காங்க.

வழியைப் பாப்போம் வா! இந்த மாதிரி வாயும், வயிறுமா இருக்கும்போது, ஏற்கெனவே சொன்ன மாதிரி கண்டதையும் படிச்சுப் பாத்து, புத்தியக் கொழப்பிக்கக் கூடாது. அது வயத்துக்குள்ள இருக்கற கொழந்தய பாதிக்கும்னு இன்னிக்கு சயின்ஸ் சொல்லுது. இதத்தான் நமக்கு சுலபமா புரியும்படியா மகாபாரதமும், பாகவதமும் சொல்லுது" என்றார் தாத்தா.

"என்னது? இதப் பத்தி பாரதத்திலேயும், பாகவதத்தி லேயும் சொல்லி இருக்கா?" என்று ஆச்சரியம் காட்டினாள் மருமகள்.

"கர்போப நிடதம்னு உபநிடதமே உண்டும்மா! எல்லாருக்கும் புரியும்படியா எளிமையா பாக்கலாம் வா! மகாபாரதத்துல, அர்ஜுனன் மனைவி சுபத்திரை உன்னை மாதிரிதான், கொழந்த உண்டாகி இருக்கா. தங்கச்சியப் பாக்க வந்த கிருஷ்ண பரமாத்மா, பேச்சோடு பேச்சா, போர்க்களத்துல படைகளை அமைக்கும் முறை, வியூகங்களை வகுக்கும் முறை, எதிராளியின் வியூகத்தை, அதாவது படை அமைப்பை உடைத்து, உள்ளே நுழையும் முறைனு விவரிச்சுக் கிட்டுப் போறாரு. கேட்டுக்கிட்டே வந்த சுபத்திரை தூங்கிட்டா. ஆனா, அவ வயத்துல இருந்த அபிமன்யு, 'உம்! உம்!'னு கிருஷ்ணன் சொல்றதக் கேட்டுக்கிட்டே இருந்தான். கிருஷ்ணன் சொன்னது எல்லாம் அவன் மனசுல பதிஞ்சுச்சு. பிறந்ததுக்கு அப்பறமா, தலைசிறந்த வீரனா தயாரானான். தர்மர், பீமன்-னு அவங்களால கூடப் பிளக்க முடியாத வியூகத்தை இந்த அபிமன்யுதான் பிளந்தான். கருவிலேயே திரு சேர்த்துக் கொண்டவன்."

"பாகவதத்துல எப்பிடி சொல்லி இருக்குதுன்னு பாக்கலாம். 'இரணியகசிபு வின் மனைவி, பிள்ளை உண்டாகியி ருந்தபோது, தன் வயிற்றில் இருக்கும் குழந்தையின் நன்மைக்காக நாரதருக்குப் பணிவிடை

செய்தாள். நாரதர் அற்புதமான தகவல்களைச் சொன்னார். பிற்காலத்தில் அது அவளுக்கு மறந்து போய்விட்டது. ஆனால், அவள் வயிற்றில் இருந்தபடி கேட்டுக் கொண்டிருந்த பிரகலாதன் மனதில் அது பதிந்தது. பிரகலாதன் தலைசிறந்த பக்தனாக மாறினான்'னு பாகவதம் சொல்லுது. அர்ஜுனன் பேரனான பரீட்சித்தும், இதே மாதிரிதான். இதெல்லாம் பாத்துட்டுத்தான் அயல் நாட்டுக்காரங்க, இந்த மாதிரி பிள்ளை உண்டாகி இருக்கவளுக்கு - பாட்டு கேட்கச் செய்யறது, மியூஸிக் கேட்கச் செய்யறதுன்னு எல்லாம் செஞ்சு, நம் ஞான நூல்கள் சொன்னது உண்மைனு ஒப்புக்கறாங்க.

அதுனால, நல்ல நல்ல புஸ்தகமா படி! வெட்டு, கொலை, குத்துன்னு டி.வி-யில பாக்காத! எதயாச்சும் நெனச்சு, மனசக் கொழப்பிக்காத! எம் புள்ள, அதாம்மா உங்க வூட்டுக்காரன் ஏதாச்சும் திட்டினாக்கூட எங்கிட்ட சொல்லு!" என்றார் தாத்தா சிரிப்போடு.

"நான் ஏம்ப்பா திட்டப் போறேன்..." என்று மகன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே குருக்கள் ஒருவர் ஏதோ பேப்பரோடு வந்தார்.

பட்டாபி

கையில் ஒரு நோட்டீஸோடு, தாத்தாவின் எதிரில் வந்து நின்றார் கோயில் குருக்கள். அவருடன் டீன்ஏஜ் பையன் ஒருவனும் இருந்தான்.

நோட்டீஸை தாத்தாவிடம் நீட்டிய குருக்கள், "உலக நலனுக்காகக் கோயில்ல ஹோமம், யாகம்னு பண்ணப் போறோம். பப்ளிக் ரெஸ்பான்ஸ் நெறயா இருக்கும். ஏற்பாடுகளையெல்லாம் நான் கவனிக்கும்போது, இந்தப் பையனை விட்டு, 'இதெல்லாம் எதுக்குச் செய்யறோம்'னு சொல்லச் சொல்லலாம்னு ஆசை. நல்லா ஆர்வம் உள்ள பையன். உச்சரிப் பும் தெளிவா இருக்கும். ஒரே ஒரு பிரச்னை இவங்கிட்ட என்னன்னா... இந்தக் காலத்துப் பையனா இருக்கறதால, கொஞ்சம் எடக்கு மடக்காப் பேசுவான். அதனால தப்பா நெனச்சுக்காம இவனுக்கு, என்ன பேசணும்னு சொல்லிக் குடுத்தீங்கன்னா உதவியா இருக்கும்!" என்றார்.

கூடவே, "இந்த விசேஷத்தன்னிக்கு நீங்க வெளியூர் போறீங்கன்னு தெரிஞ்சுதான் இப்படி மாத்து ஏற்பாடு. பாத்துக்கங்க! பையன் கொஞ்சம் எடக்கு மடக்கு. நா வரேன்!" என்ற குருக்கள் கிளம்ப முயற்சித்தார்.

"குருக்கள் ஐயா! கொஞ்சம் இருங்க... அஞ்சு நிமிஷம் கழிச்சுப் போவலாம். பையன் எடக்கு மடக்குன்னு அடிக்கடி சொன்னீங்களே. அப்பிடியெல்லாம் சொல்லாதீங்க. இந்தக் காலத்துப் புள்ளைங்கள்ல ஒண்ணுகூட சோடை இல்ல. எல்லாத்துக்கும் சூப்பர் அறிவு. தமாஷா ஒண்ணு சொல்றேன். கேட்டுட்டுப் போங்க!" என்றார் தாத்தா.

"அப்பிடி சொல்லுங்க தாத்தா! இந்தக் காலத்துப் புள்ளைங்கள எப்பப் பாத்தாலும் திட்டிட்டு இருக்கற இவங்கள மாதிரி ஆளுங்களுக்கு நல்லா புரியும்படி சொல்லுங்க

தாத்தா!" என்று குதித்தான் டீன்ஏஜ்.

குருக்கள் உட்கார்ந்தார். தாத்தா தமாஷைத் தொடங் கினார். "ஒரு கஞ்சன். எச்சக் கையால காக்கா ஓட்ட மாட்டான். எங்கியாவது கல்யாணத்துக்குப் போவணும்னா கூட, மொத நாளே எதுவும் திங்காம காயக் காயப் போவான். அப்பத்தான கல்யாண வீட்டுல நெறயா சாப்பிடலாம்.

அவன் ஒரு தடவை ஒரு கல்யாண வீட்டுக்கு சாப்பிடக் கிளம்பினான். அவன் பிள்ளையும் கூடப் போனான். 'மவனே! நம்ம வழக்கப்படி நேத்திக்கி முச்சூடும் சாப்பிடாம இருந்துட்டோம். இன்னக்கிக் கல்யாண வூட்டுல நல்லா ஒரு கட்டு கட்டிட வேண்டியதுதான். என்ன? அதுனால, கல்யாண வூட்டுல கை கொண்ட மட்டும் சோத்த எடுத்து, நல்லா, ஃபுல்லா கட்டிடு. தண்ணிய மட்டும் குடிக்கவே குடிக்காத. தண்ணிய எங்க வேணாலும் சும்மாவே குடிச் சுக்கலாம்!' என்று தன் பிள்ளைக்கு உபதேசம் செய்தான் தந்தை. ரெண்டு பேருமா கல்யாண வூட்டுல சாப்பிட உக்காந்தாங்க. அப்பன் சோத்த மட்டும் தின்னுட்டு இருந்தான். புள்ளையோ அப்பப்ப தண்ணி குடிச்சுக்கிட்டே சாப்பிட்டான். அதப் பார்த்த அப்பனுக்கு எரிச்சல். வீட்டுக்கு வந்ததும் புள்ளயப் போட்டு மொத்து மொத்துனு மொத்தி எடுத்துட்டான். பையன் கத்தினான். 'என்னய அடிக்காத! உள்ளே போய் ஒரு மரக்கால் ஃபுல்லா நெல்லு கொண்டா!'னான். கொண்டு வந்தான் தந்தை.

'இதுல இனிமே நெல்லு போட முடியுமா?' என்பது பையன் கேள்வி. 'முடியாது'னு பதில் சொன்னான் கஞ்சன். பையன் ஒரு சொம்பு தண்ணிய எடுத்து, மரக்கால் நெல்லுல ஊத்தினான். மரக்கால்ல இருந்த நெல்லு அப்பிடியே உள்ள எறங்கிச்சு. இன்னும் நெல்லு போடற அள வுக்கு அதுல எடம் இருந்துச்சு. 'பாத்தி யாப்பா! இப்பத் தெரியுதா? தண்ணி உள்ள போவப் போவ இன்னும் கொஞ்சம் சோறு எறங்கும்'னான் பையன்.

'அடப் பாவிப்பய புள்ள! இதை நீ அங்கனயே சொல்லி இருந்தீன்னா நானும் உன்னய மாதிரியே, இன்னும்கூட சேத்து, சோத்தக் கட் டிருப்பேன்ல?'னு கத்திக்கிட்டே பையன மறு படியும் அடிக்க ஆரம்பிச்சான் கஞ்சன்.

அந்த மாதிரி இப்பப் பசங்கள்லாம் புத்திசாலிங்க. அதுங்க என்ன செஞ்சாலும் குத்தம் சொல்லிக்கிட்டே இருந்தா அதுங்க என்னதான் செய்யும்?" என்றார் தாத்தா.

"சரி... சரி! நா ஒண்ணும் சொல்லல. இந்தப் பயல, உங்களை மாதிரியே தயாரிச்சு வுட்ருங்க" என்ற குருக்கள் கிளம்பினார்.

டீன்ஏஜ் பையனுக்கு ஏக குஷி. "சொல்லுங்க தாத்தா! இந்த ஹோமம், யாகம்னு செய்யறோமே, இதெல்லாம் எதுக்கு? என்ன பலன்...?" என்றான். சற்றுச் சாய்வாக உட்கார்ந்த தாத்தா விவரிக்கத் தொடங்கினார்.

"நம்ம ஞான நூல்கள்ல எல்லாம், இப்ப நீ கேட்டதப் பத்தி விரிவா சொல்லிருக்கு. அதெல்லாம் இன்னிக்கும் பல பேருக்குப் பலனத் தந்திருக்குது. ஒவ்வொண்ணா சொல்றேன். வாங்கி மனசுல பதிய வெச்சுக்க. இதிகாச, புராணங்கள்ல குழந்த வேண்டி யாகம் பண்ணாங்க... மழை வேண்டி யாகம் பண்ணாங்க... பலன் கெடச்சிச்சுன்னு விரிவா எழுதி வெச்சுருக்காங்க. இன்ன பிரச்ன தீர இன்ன ஹோமம், இன்ன யாகம்னெல்லாம் சொல்லியிருக்கு. இப்ப நடந்தது ஒண்ணு சொல்றேன். என் ரெண்டாவது பையன் பரத்துக்கு ஆண்டு நெறவு நடந்தபோது, அவுனுக்கு ரொம்ப உடம்பு சரியில்ல. கிழிசல் துணிய நனச்சுப் போட்ட மாதிரி படுத்துக் கெடந்தான். அப்ப ஹோமத்தையெல்லாம் நடத்துனவரு, காஞ்சிப் பெரியவாகிட்ட பாராட்டு வாங்கின வேத வித்து, கம்பரசன்பேட்ட ரங்கா சாஸ்திரிகள்ங்றவர். அவர் திடீர்னு, 'ஏய்! உடம்பு சரியில்லாம கெடக்கற உன் பிள்ளய, உன் சம்சாரத்து மடில எடுத்துவிடு. ஹோமம் முடியட்டும். எல்லாம் சரியாயிடும் பாரு!'னாரு. அப்பிடியே பண்ணுச்சு. ஹோமம் முடிஞ்சுது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தப் பய பரத் எழுந்து வெளயாட ஆரம்பிச்சுட்டான். இது நேரிடையா நா(ன்) அனுபவிச்ச பலன்.

அடுத்ததா, எல்லாருக்கும் தெரிஞ்சத சொல்றேன். போபால் விஷ வாயு விபத்து. ஏராளமான பேர்

போயிட்டாங்க. அளவில்லாத பேருக்குப் பல விதமான பாதிப்பு. ஆனா இதுல ஒரு குடும்பம் எந்த வித பாதிப்பும் இல்லாம தப்பிச்சுட்டாங்க. காரணம்? அவங்க தினந்தோறும் ஹோமம் செஞ்சுக்கிட்டு வந்ததுதான். அவங்கள போட்டோ பிடிச்சு, எல்லா பத்திரிகையிலும் போட்டு, இந்தத் தகவலையும் விரிவா எழுதி இருந்தாங்க. வர வேண்டிய கெட்டது- பாதிப்பு அந்த ஹோமத்தால ஸ்டாப் ஆச்சு. ஹோமப் புகை பரவற எடத்துல, உடம்புக்கு பாதிப்ப ஏற்படுத்துற எந்த விதமான கெட்ட கிருமிகளும் இருக்காது; இருந்ததும் அழிந்துவிடும்.

இந்த மாதிரியான இடத்துக்கெல்லாம் கூப்பிட்டா தவறாம போவணும். ஹோமப் புகை நம் மீது பரவி ஆரோக்கியம் கிடைக்கும். பசும் நெய்யில் எரியற விளக்கு தனது சுத்துவட்டார (அறையை) காற்றை ரொம்பத் தூய்மையா வெச்சுருக்கும். அதுனாலதான் இந்த மாதிரில்லாம் செய்யும்போது பசும் நெய்யை யூஸ் பண்றாங்க!" என்றார் தாத்தா.

பட்டாபி

பசு விராட்டியின் 'பவர்' தெரியுமா?

சண்டிகேஸ்வரர்

ஹோமம் மற்றும் யாகங்களின் பலன்களைப் பற்றி சுவாரஸ்ய மாகச் சொல்லிக் கொண்டிருந்த தாத்தாவை இடைமறித்தான் டீன்-ஏஜ் பையன்.

"தாத்தா! ஹோமமோ, யாகமோ செய்யும்போது பசு நெய் - பசும் விராட்டிதான் உபயோகப்படுத்தணும்னு சொல்றீங்களே... அது ஏன்? இன்னக்கி அதெல்லாம் கெடைக்குமா, என்ன?" என்றான்.

தாத்தா நிமிர்ந்து உட்கார்ந்தார். "அடேய்! இந்தக் காலத்துப் பயலே! முயற்சி செஞ்சா பசும் விராட்டி, பசும் நெய் என்ன... எது வேணாலும் கெடைக்கும். முயற்சியே செய்யாம சும்மா பொலம்பக் கூடாது. முயற்சி செய்யாதவனுக்கு தெய்வம் கூட உதவி செய்யாது. தேவலோக அமிர்தம்னு சொல்றோமே! அந்த அமிர்தத்தோட பலன்கள் என்னவோ, அத்தனையும் பசு நெய்க்கு உண்டு. அக்கினியில பசு நெய்ய விடறதுனால, உடனடியா சில வாயுக்கள் உண்டாவுது. அது அப் பவே காத்துல பரவி, தூய்மையான சுற்றுப்புறச் சூழ் நிலைய உருவாக்குது. இந்த வாயுக்கள் எல்லாம் மூச்சுக் காத்து வழியா எல்லார் உடம்புலேயும் புகுந்து, உடம்ப நல்லா வெச்சுருக்குது. உடம்புல இருக்கிற எக்ஸ்ட்ரா

கொலஸ்ட்ரால் எல்லாம் போயி, பக்க விளைவுகள் அதாவது சைட் எஃபெக்ட்ஸ் இல்லாம வேல செய்யும்.

அக்கினியில நெய் கலந்த அரிசியப் போடற பழக்கம் உண்டு. அதோட பலன்கள் உசந்தது! நெய் கலந்த அரிசியை யாகத்துலேயோ, ஹோமத்து லேயோ போடும்போது ஏற்படுற ரசாயன மாற்றத்தால எத்திலீன் ஆக்ஸைடு, ப்ரொப்பிலின் ஆக்ஸைடு, பார் மால்டிஹைடு, ப்யூடா ப்ரோ பியோ லாக்டான்,

அசெட்டிலின் போன்ற வாயுக்கள் உண்டாவுது. அக்னியில போடறது எல்லாம் ஒட்டுமொத்தமா சாம்பலான அப்பறம் கூட, வெவரம் தெரிஞ்ச கொஞ்சம் பேரு அங்கேயே உக்காந்து பிராணாயாமம், ஜபம், தியானம்னு செய்வாங்க. அப்பிடி செய்யறதுனால- மன உளைச்சல், அதன் காரணமா உண்டாகற ரத்த அழுத்தம், ஆஸ்துமா, குடல் புண், தலைவலி போன்றதெல்லாம் வெகுவாகக் குறையும். ரத்தம், மூச்சு, நரம்பு மண்டலங்கள் இதெல்லாம் பலமாகும். ஆல்ஃபா வேவ்ஸ் (அலைகள்) வெளிப்பட்டு, மூளை அழுத்தங்களப் போக் கும். இதெல்லாம் மருந்தே இல் லாத ட்ரீட்மெண்ட்.

வா! இனிமே பசுஞ்சாண விராட்டியால கெடைக்கிற பலனை தெரிஞ்சுக்குவோம். தங்கத்த விடத் தங்கபஸ்பத் துக்குப் பவர் அதிகம். அந்த மாதிரி சூப்பரான கிருமி நாசினியான பசுஞ்சாணத்தவிட அதோட விராட்டி சாம்பலுக்குப் பவர் ஜாஸ்தி. உதாரணமா, செடி கொடிங்கள்ல பூச்சி வந்தா, சாம்பலத் தெளிப்போம். பூச்சிங்கள்லாம் போயிடும். இது உனக்கே தெரியும். அந்த மாதிரிதான் பசுஞ்சாண விராட்டி சாம்பலும். யாகத்துலேயோ ஹோமத்துலேயோ போடற பசுஞ்சாண விராட்டியின் சாம்பல் என்ன என்ன செய்யுதுன்னு ஒண்ணு... ரண்டு சொல்றேன் கேளு! தொடை இடுக்குல ஸ்கின் பங்கஸ்னு வரும். அதுல இந்த சாம்பலத் தடவினா, மூணே நாள். அடிச்சுவடே இல்லாம ஸ்கின் பங்கஸ் போயிடும். உடம்புல இருக்குற புண்களுக்குக்கூட இந்த சாம்பலத் தடவினா கிருமியெல்லாம் போயி, புண்ணு ஆறிடும். இந்த மாதிரி நெறயா இருக்கு. அது எல்லாத்தயும் நீ அங்க போய் சொல்ல வேண்டாம். நாம பாட்டுக்கு அள்ளிக் கொட்டினா, கேக்கறவங்க மனசுல அது முழுசா பதியாது. உதாரணமா கொஞ்ச நேரத்துக்கு முன்னால, நெய் கலந்த அரிசி மூலமா சில வாயுக்கள் வருதுன்னு சொன்னேனில்ல. அந்த வாயுக்களின் பேர்களையும் நீ அங்க பேசும்போது சொல்லிட்டு இருக்க வேண்டாம்" என்றார் தாத்தா.

"சரி தாத்தா! இந்த பங்ஷன் கோயில்ல நடக்குது. அதுனால கோயிலுக்கு வர்றவங்க என்ன என்ன செய்யணும் செய்யக் கூடாதுங்கறதக் கொஞ்சம் சொல்லுங்க! பல பேரு சண்டிகேஸ்வரர்கிட்ட நின்னு கையத் தட்டறாங்க; வேட்டிலேர்ந்து இல்லாட்டி, பொடவையிலேர்ந்து நூல் கிழிச்சு சண்டிகேஸ்வரர்மேல போடறாங்க. கேட்டா; இப்பிடி செஞ்சா புது ஆடை கெடைக்குங்கறாங்க. இதப் பத்தி சொல்லுங்க!" என்றான் டீன்-ஏஜ் பையன்.

"ஏய்! கோயில்ல கும்பலா இருக்கும் போதே இந்தத் தகவலையெல்லாம் அவங்க கிட்ட கொண்டுபோய் சேக்கணும்னு நெனச்ச பாரு! பிரமாதம்டா!

கோயிலுக்குப் போனா, துவஜஸ்தம்பம்- அதாவது கொடிமரம்னு சொல்றமே... அதுகிட்ட மட்டும்தான் விழுந்து நமஸ்காரம் செய்யணும். கோயில் உள்ளாற எந்த சந்நிதிலேயும், விழுந்து நமஸ்காரம் செய்யக் கூடாது. ஸ்வாமிக்கும், அதுக்கு முன்னால இருக்குற வாகனத்துக்கும் நடுவுல நாம போவக் கூடாது.

கோயில்ல குடுக்கற பிரசாதம் இருக்குதே, அதாம்பா... விபூதி- குங்குமம் இதயெல்லாம், வாங்கின உடனே இடக் கைக்கு மாத்திக்கக் கூடாது. ஒரு சின்ன பேப்பரை வெச்சு அதுல போட்டுக்கலாம். ஆம்பளைங்க எல்லாம் ரண்டு கையவும் தலக்கி மேல தூக்கி, கூப்பிக் கும்புடணும். லேடீஸ் எல்லாம் ரண்டு கையவும் நெஞ்சுக்கு நேரா வெச்சுத்தான் கும்புடணும்.

புள்ளயார் சந்நிதியில ஆம்பளங்க தோப்புக்கரணம் போடு வாங்க. இப்பல்லாம் லேடீஸும் தோப்புக்கரணம் போடறாங்க. அது கூடாது. லேடீஸ்ங்க தலயில மட்டும் குட்டிக்கிட்டா போதும். வலம் வரும்போது நிதானமா, சாமி சிந்தனையோட மட்டும் வலம் வரணும். டிராஃபிக் இல்லாத ரோட்டுல டூ வீலர்ல போற மாதிரி ஸ்பீடா வலம் வரக் கூடாது. முக்கியமானது- எந்த சாமியவும் அப்பிரதட்சிணமா வலம் வரவே கூடாது. இப்பிடி மூணு சுத்து, அப்பிடி நாலு சுத்துங்கறதெல்லாம் கூடாது" எனத் தாத்தா சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

"அருமையா சொன்னீங்க தாத்தா! சரி... சண்டிகேஸ்வரர் மேல, வேட்டி, இல்லாட்டி பொடவயிலேர்ந்து நூல் கிழிச்சுப் போடறதைப் பற்றிக் கேட்டேனே!" என்றான் டீன்-ஏஜ்.

"ஆமாண்டா பையா! ஆமாம். தினந்தோறும் நாம கட்டிக்கற துணியிலேர்ந்து ரெண்டு ரெண்டு நூலாக் கிழிச்சா என்ன ஆவும்? துணி கிழிஞ்சு போயிடும். வேற ஆடை வாங்க வேண்டியதுதான். என்னத்த செய்யறது?" என்றார் தாத்தா.

"இந்தப் பழக்கம் எப்பிடி வந்துச்சு? நாம என்ன செய்யணும்னு சொல்லுங்க தாத்தா!" எனத் துருவித் துருவிக் கேட்டான் டீன்-ஏஜ் பையன்.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க!

பட்டாபி

லட்சுமணன் கோடு போட்டானா, இல்லையா?

“நம்ம ஆடையிலேர்ந்து நூலைக் கிழிச்சு சண்டிகேஸ்வரர் மேல போடற பழக்கம் எப்படி வந்துச் சுன்னு சொல்றேன்... கேளு!” என விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார் தாத்தா.

ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தான் டீன்-ஏஜ் பையன். தாத்தா சுறுசுறுப்பாக விவ ரிக்கத் தொடங்கினார்:

“போன தலமுறை வரைக்கும் கோயிலுக் குப் போகும்போது மக்கள், எண்ணெயையும் திரியையும் தனித்தனியாக கொண்டு போயி, சண்டிகேஸ்வரர் சந்நிதியில வெச்சுருவாங்க. அத எடுத்துக் கோயிலுக்கு உபயோகப் படுத்திக்குவாரு குருக்கள். இப்ப என்ன டான்னா... எண்ணெயும் வெக்கறது இல்ல; திரியும் வெக்கறது இல்ல. அதுக்குப் பதிலா ஆடையில இருந்து நூலைக் கிழிச்சுப் போடறோம். ஆகமத்திலியோ, சாஸ்தி ரத்திலியோ இப்பிடி நூலைக் கிழிச்சுப் போடணும்னு இல்ல. இத அழுத்தந்திருத் தமா சொல்லு!” என்றார் தாத்தா.

“சொல்றேன் தாத்தா! எனக்கு இன் னும் கொஞ்சம் தகவல் வேணும். ஹோமம் ஆரம்பிக்கறதுக்கு முன்னால, எனக்கு இருபதில் இருந்து முப்பது நிமிஷம் வரைக்கும் டயம் குடுத்துருக்காங்க. இப்ப நீங்க சொன்னதுல இருந்து, பத்து நிமிஷம் வரைக்கும் சமாளிக்கலாம். இன்னும் பத்து நிமிஷத்துக்கு எனக்குத் தகவல் வேணும். எளிமையாவும் இருக்கணும். அதே நேரத்துல, கேக்கறவங்கள நம்ம பக்கமா புடிச்சு இழுக்கற மாதிரியும் இருக்கணும்!” எனக் கேட் டான் டீன்- ஏஜ் பையன்.

“அப்பிடியா! சரி! உனது சாய்ஸுக்கே சொல்றேன். என்ன வேணும்?” என்றார் தாத்தா.

“இப்ப நீங்க பேசும்போது, ‘சண்டிகேஸ்வரர் மேல நூலைக் கிழிச்சுப் போடற பழக்கம், எந்த புஸ்தகத்திலேயும் சொல்லல. நம்ம காலப் பழக்கம் இது’னு சொன்னீங்க. அந்த மாதிரி ஒரிஜினல் புஸ்தகத்துல (மூல நூலில்) இல்லாத தகவல், ஆனா மக்கள் மத்தியில

பரவியிருக்குற தப்பான அபிப்ராயம் - இதப் பத்தியெல்லாம் சொல்லுங்களேன்!” என எடுத்துக் கொடுத்தான் டீன்-ஏஜ்.

அவன் நோக்கத்தைப் புரிந்து கொண்ட தாத்தா சொல்லத் தொடங்கினார். தகவல்கள் வந்து விழுந்தன. ஆனால், அவை அதிர்ச்சிகரமான உண்மைகளாக இருந்தன. தாத்தா ஆரம்பித்தார்: “நீ கேட்ட மாதிரி நெறைய இருக்குப்பா. ஒவ்வொண்ணா சொல்றேன். மொதல்ல கொழந்தைங்ககிட்ட இருந்து ஆரம்பிக் கறேன். குசேலருக்கு எவ்வளவு கொழந் தைங்க... தெரியுமா?” என்றார்.

டீன்-ஏஜ் பரபரத்தான். “தெரியும் தாத்தா! இருவத்தேழு பசங்க!” என்றான்.

“பாத்தியா! உன் தலமுறை வரைக்கும் இந்த அபத்தம் என்னமா கொடிகட்டிப் பறக்குது. ம்... நாராயணீயம், பாகவதம், விஷ்ணு புராணம்னு எந்த நூல்லியும் குசேலருக்கு இருவத்தேழு புள்ளைங் கன்னு இல்ல. பாகவதத்துல சுகாச்சார்யார் சொல்லும்போது, ‘கிருஷ்ணனுக்கு ஒப்பற்ற ஒரு தோழன் இருந்தான். அவன் பொறி- புலன்களை வென்றவன்’னு குசேலரப் பத்தி சொல்றாரு. பொறி- புலன்கள வென்றவருக்கா இருவத்தேழு பசங்க? உத்தமமான அந்த கிருஷ்ண பக்தனை-தோழனை, நாம ‘அவருக்கு இருவத்தேழு கொழந்தைங்க’ன்னு சொல்லி, குடும்பக் கட்டுப்பாடு நிகழ்ச்சியிலகூட குசேலரக் கொண்டாந்து நிறுத்திட்டோம். இது தப்பு இல்லியா?

வா! அடுத்ததப் பாக்கலாம். ராமாயணத்துல மாய மானைப் புடிக்கறதுக்காக ராமர் போன பிறகு லட்சுமணனையும் ஏவினா சீதை. லட்சுமணன் போகும்போது என்ன செஞ்சுட்டுப் போனான்?” என நிறுத்தினார் தாத்தா.

“ஹும்! இது ஒரு பெரிய கேள்வியா! லட்சுமணன் கோடு போட்டுட்டுப் போனான். எல்லாருக்குமே தெரியுமே! ‘லட்சுமண் ரேகா’ன்னு சொல்லுவாங்க. அந்தப் பேர்ல இப்பல்லாம் கரப்பான் பூச்சி மருந்து கூட வந்தாச்சு” என பதிலளித்தான் டீன்-ஏஜ்.

“ரொம்ப சந்தோஷம்ப்பா! குசேலர குடும்பக் கட்டுப்பாடுக்குக் கொண்டு போயாச்சு. லட்சுமணனைக் கரப்பான் பூச்சி மருந்துக் குக் கொண்டு போயாச்சு. இன்னும் என்னல்லாம் செய்யப் போறோமோ தெரியல... நீயாவது அடுத்த தலமுறைக்கு நல்லதைக் கொண்டு போய்ச் சேக்கற வழியப் பாரு!

லட்சுமணன் கோடு போட்டாங்கற சமாசாரம், அதாம்பா... லட்சுமண் ரேகா சமாசா ரம் ராமாயணத்துல கெடயாது. வால்மீகியும் சொல்லல. கம்ப ராமாயணத்துலயும் இல்ல. ஆனா என்ன செய்யிறது? ஜனங்க மத்தியில அப்பிடித்தானே பரவிக் கெடக்குது. இதெல்லாம் போவறத்துக்கு ஒரு வழியை, கடைசியில சொல்றேன். வா! அடுத்ததப் பாக்கலாம்.

இது மகாபாரதத்துல வர்றது. கர்ண னோட கடைசி காலத்துல அவன்கிட்ட போயி, ‘நீ செஞ்ச புண்ணியத்த எல்லாம் குடு’னு சாமி தானம் வாங்கிட்டுப் போனதா சொல்லுவாங்க. ஆனா, வியாச பாரதத்துல வியாசர், இப்படி எழுதவே இல்ல. இதுவும் பிற்காலத்துல வந்த தப்பான தகவல்தான்.

இப்ப பெரிய புராணம். இதுல நந்த னார் கதையைச் சொல்லும்போது, நந்தனார் ஒரு வேதியர்கிட்ட

வேலை செஞ்சுட்டு இருந்தாரு. நந்தனாரைக் கோயிலுக்குப் போக விடாம அவுரு தடுத்தாருன்னு சொல்லி, நந்தனாரும் வேதியரும் பேசினதை வாத- பிரதிவாதம் மாதிரி விரிவா சொல்லுவாங்க. இது பொய்! பெரிய புரா ணத்துல இப்பிடி இல்ல. ஆதனூர் வேதியன்னு (நந்தனாரை அடிமையாக வைத்திருந்த பிராமணர்) ஒரு கேரக்டரே கெடையாது. இதுவும் நம்ம காலத்துல வந்த தவறான தகவல் தான்!" என்றார் தாத்தா.

"நச்சு'னு இருக்குது தாத்தா... கலக்கிடு றேன். இந்தத் தப்பெல்லாம் போறதுக்கு வழி சொல்றேன்னு சொன்னீங்களே! அத யும் சொல்லுங்க!" என்றான் டீன்-ஏஜ்.

தாத்தா சொன்னார்: "கஷ்டமான காரியம் இல்லப்பா அது. சுலபம்தான். ராமாயணமோ, பாரதமோ... எந்த நூலா இருந்தாலும் சரி! இந்தக் காலத்துல எல்லா மூல நூலும் எளிமையான தமிழ்ல கெடைக்குது. அதப் படிச்சாப் போதும். இதப் பத்தியெல்லாம் நீ விரிவா சொல்லு! ஆயிரம் பேர் கேட்டா, அதுல ஒரு பத்துப் பேராவது கடைப்பிடிப்பாங்க, இல்லையா. தைரியமா பேசு!" என்றார்.

சந்தோஷத்துடன் எழுந்த டீன்-ஏஜ் பையன், முகம் மலரத் தாத்தாவிடம் இருந்து விபூதியை வாங்கி இட்டுக் கொண்டு கிளம்பினான்.

பட்டாபி

காரீலை நேரம். தும்பைப்பூப் போல வெண்மையும் மென்மையுமான ஆடை அணிந்து, வெளியே கிளம்பத் தயாரானார் தாத்தா.

அப்போது வீட்டு வாயிலில் நிழலாடியது. கையில் ஒரு மஞ்சள் பையை பவ்வியமாகப் பிடித்தபடி ஒருவர் நின்றிருந்தார். மூக்குக் கண்ணாடி வழியாக அவரை உற்றுப்

பார்த்தார் தாத்தா. வந்தவரின் தயக்கத்தைப் புரிந்து கொண்டு, “உள்ள வாங்க!” என்றார்.

வந்தவரோ அங்கிருந்தபடியே, “பட்டாபிங்க றவர் வீடு...” என்று இழுத்தார்.

“இதுதான் பட்டாபி வீடு. நான்தான் பட்டாபி. மொதல்ல உள்ள வாங்க!” என்றார் தாத்தா.

வந்தவர் மிக உரிமையாக வீட்டுக்குள் புகுந்து அவராகவே உட்கார்ந்தார். கையில் இருந்த மஞ்சள் பையை அப்போதும் கீழே வைக்கவில்லை. மிகவும் பயபக்தியோடு பிடித்துக் கொண்டிருந்தார். தாத்தா, அவரை உற்றுப் பார்த்தார். வந்தவர், “என்னடா பட்டாபி! திருதிருனு முழிக்கறே. உத்து உத்துப் பாக்கற. என்னைத் தெரியலியா?” என்றார். தாத்தாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

“நான்தாண்டா சீனு. உன் பால்ய சிநேகிதன். மும்பையிலேர்ந்து போன மாசந்தான் இங்க வந்தேன். இனிமே நிரந்தரமா இங்கதான் டேரா. போன வாரம் எக்குத்தப்பா உன் பிள்ளையைப் பாத்தேன். அவன்தான் அட்ரஸ் குடுத்து, ‘நேரம் கெடைக்கும்போது வாங்க மாமா’னான். ஆனா, இப்பவே வர்ற மாதிரி ஆகிப்போச்சு!” என்றார்.

பால்ய சிநேகிதனைப் புரிந்து கொண்டதும் தாத்தாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. "நா(ன்) சந்தேகப்பட்டேன். டேய்! சீனு! என்னடா இது? இப்பிடிக் கெழவனாப் போயிட்டே!" என்றபடி சீனு வின் கையைப் பிடித்தார்.

"ஆமா!... உங்கிட்ட மட்டும் அப்பிடியே இளமை தாண்டவமாடுதாக்கும்? வயசாயிடுச்சுன்னா இப்பிடித்தான். வந்த வேலயப் பாக்கறேன். இந்தா! இதப் பிடி! ஆன்மிகம்தான் நல்...லா உனக்குள்ள ஊறிப் போயிருக்கே" என்றபடி சீனு, தன் கையிலிருந்த மஞ்சள் பையை நிதானமாகத் திறந்து, ஜாக்கிரதையாக யந்திரம் ஒன்றை எடுத்துத் தாத்தாவின் கையில் கொடுத்தார் (அதன் பிறகு தாத்தாவும், சீனுவும் தங்கள் மலரும் நினைவுகளைப் பேசிக் கொண்டு இருந்தது தனிக் கதை).

பிளாஸ்டிக் கவரில் இருந்த யந்திரத்தை வாங்கிய தாத்தா, அதை முன்னும் பின்னுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு மேஜை மேல் வைத்தார். "சொல்லு சீனு! உன் பிரச்னை என்ன?" என்றார்.

அதுவரை சகஜமாகப் பேசிக் கொண்டிருந்த சீனு முகத்தில் சற்றுக் குழப்பத்துடன், "யாரோ குடுத் தாங்கன்னு என் சம்சாரம் இதை வாங்கிட்டு வந்தா. இதப் பத்திச் சொல்லேன். இத வெச்சுக்கலாமா?" என்றார்.

சாய்வாக உட்கார்ந்திருந்த தாத்தா, கண்ணாடியைக் கழற்றி வைத்து நிமிர்ந்து உட்கார்ந்து சொல்லத் தொடங் கினார். "சீனு! நீ கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். பதில் சொல்ல நேரம் ஆகுமே... பரவால்லியா?" என்றார்.

"அட... நீ வேறப்பா! ரிட்டயர் ஆயாச்சு. இனிமேலாவது கொஞ்சம் நல்லதத் தெரிஞ்சுக்கலாமே. டயம் ஆனாலும் பரவாயில்ல!" என ஊக்கப் படுத்தினார் சீனு.

தாத்தா ஆரம்பித்தார். "இதை வாங்கினா இந்த யந்திரம் இலவசம், அதை வாங்கினா அந்த யந்திரம் இலவசம்னு கெடைக்கிற எல்லா யந்திரத்தையும் வாங்கி வீட்டுல வெச்சுக்கக் கூடாது. ஒவ்வொரு பிரச்னை தீரவும் அல்லது ஒவ்வொரு நன்மையைப் பெறவும் யந்திரங்கள் உண்டு. பூஜைக்கு உரிய அப்படிப்பட்ட யந்திரங்களைக் கையால்தான் எழுத வேண்டும். மானாவாரியா, ஒட்டுமொத்தமா மெஷின்ல அச்சடிச்சுத் தள்ளக் கூடாது. எனக்கு யந்திரம் எழுதத் தெரியும். ஆனா, நான் எழுதக் கூடாது. ஏன்னாக்க, எனக்கு மந்திர ஸித்தி கிடையாது.

நாம அணுகுகிற குருவுக்கு மந்திர ஸித்தி கிடைச்சுருக் கணும். நம்மளோட மந்திர ஸித்திக்கு மொதல்ல குரு மூலமா மந்திர உபதேசம் வாங்கணும். அப்பத்தான் நாம வாங்கிக்கற மந்திர உபதேசம் பலன் கொடுக்கும். மந்திர உபதேசம் வாங்கின நாம, முறைப்படி அதை ஜபம் செய்யணும். அப்பத்தான் மந்திரம் ஸித்தியாகும். அதுக்கு அப்பறமாதான் நாம யந்திரம் எழுதலாம்.

யந்திரம் எழுதறவங்களுக்குக் கொஞ்சமாவது ஜோசியம் தெரியணும். நாம யாருக்கு யந்திரம் எழுதறோம்? நம்ம பாட்டுக்கு யந்திரத்தக் குடுக்கறோமே.. இத வாங்கிக்கிட்டுப் போறவனுக்கு இத பூஜை பண்ணி, பலனை அடையற பாக்கியம் இருக்கா? - இப்பிடிங்கறதயெல்லாம் ஜாதகத்தப் பாத்துத் தெரிஞ்சுக்கணும்.

அடுத்தது- யந்திரம் எழுதின உடனே அத, அதுக்குன்னு உண்டானவங்ககிட்ட உடனே குடுத்துரக் கூடாது. குறிப்பிட்ட காலம் வரைக்கும் நாம அதை பூஜை பண்ணணும். அதுக்குப் பவரை (றிஷீஷ்ஷீக்ஷீ) ஏத்தணும். அதுக்கு அப்பறமா யாருக்காக யந்திரம் செஞ்சோமோ அவரைக் கூப்பிட்டுப் பூஜை முறைகள்லாம் சொல்லி, வழிகாட்டணும். இப்பிடி கெடைக்கிற யந்திரத்த வெச்சு பூஜை பண்ணினா கண்டிப்பா பலன் உண்டு!" என்றார் தாத்தா.

“யப்பாடி! இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?”- சீனு.

மேஜை மேல் சிறிய பிளாஸ்டிக் பாக்கெட்டில் இருந்த யந்திரத்தை எடுத்து சீனுவிடம் காட்டிய தாத்தா, “சீனு! இந்த யந்திரம் உள்ள பாக்கெட்டைப் பாத்தியா? நல்லா மொரட்டுத்தனமா ‘மொற மொற’ன்னு இருக்குது. இதுல உரசறதுலியே, யந்திரத்துல கீறல் விழுந்து புதுசு புதுசா கோடுங்க உண்டாயிடும்” என்று தாத்தா சொல்லிக் கொண்டிருக்கும்போதே சீனு இடைமறித்தார்: “ஏன்? அப்பிடி ஆகக் கூடாதா? அதுல என்ன பிரச்னை?”

“ஆமாம்! அப்பிடி உண்டாகக் கூடாது. அது எப்படிப்பட்ட யந்திரமா இருந்தாலும் சரி! இந்த மாதிரி உதவாத யந்திரமா இருந்தா, அதைத் தூக்கிப் போட்டுறலாம். பிரச்ன ஒண்ணும் இல்ல. ஆனா, நாம ஒழுங்கா பூஜை செய்யற யந்திரத்துல இப்பிடிக் கோடுங்க விழக் கூடாது. விழுந்தா... பலனே மாறிப் போயிடும். நாம எதிர்பாத்ததுக்கு மாறா விபரீதமான பலன்கூட உண்டாகலாம்!” என்றார் தாத்தா.

“யப்பாடா! நல்லா தெளிவாவே சொல்றடா பட்டாபி நீ! இப்ப இந்த யந்திரத்த என்ன செய்யலாம் சொல்லு!” எனக் கேட்டார் சீனு.

“நீ கொண்டு வந்த யந்திரத்துனால எந்த ஒரு பலனும் கெடையாது. சும்மா அதுபாட்டுல கெடக்கட்டும்னா வேணும்னா வீட்டுல போட்டு வெச்சுக்க! ஏதாவது உறுத்தலா தோணினா கொண்டுபோய் கோயில் உண்டியல்ல போடு!” என்றார் தாத்தா.

“அத நீயே செய்டா பட்டாபி! நான் உங்கிட்ட குடுத்த யந்திரத்த நீயே ஏதாவது கோயில் உண்டியல்ல போட்டுரு! நான் வரேன். இந்தா! இதுதான் என்னோட அட்ரஸ். அப்பப்ப வந்து தலையக் காட்டு!” என்றபடியே கிளம்பினார் சீனு.

பட்டாபி

பத்து நாள் உற்சவம் ஏன்?

கோயிலில் பேசுவதற்காக, தகவல்கள் கேட்டு சென்ற டீன்-ஏஜ் பையன், அவசரமாகத் தாத்தாவைத் தேடி வந்தான். “என்னடா? திருப்பி ஓடியாந்துருக்கே? யாரேனும் ஏதாச்சும் சொன்னாங்களா?” என்று கேட் டார் தாத்தா.

“ஆமாம் தாத்தா! கோயில் அதிகாரி புடிச்சுக்கிட்டாரு. ‘நம்ம கோயில்ல பத்து நாள் உற்சவம் நடக்கப் போவுது. உற்சவம் நடத்துறது எதுக்குங்கிறதையெல்லாம் கேட்டுட்டு வந்து, நாளைக்கு நீயே சொல்லு. நேரத்தப் பாக்காத. முன்னப்பின்ன அட்ஜஸ்ட் பண்ணி நேரம் ஒதுக்கறேன்’னு ஏவி விட்டாரு. கோயில் அதிகாரிக் குத் தெரியல போலிருக்கு தாத்தா. அதான், வந்தேன்.” என்று சலித்துக் கொண்டான் டீன்-ஏஜ் பையன்.

அவனை ஏற இறங்கப் பார்த்தார் தாத்தா. “ஏண்டா... பொடிப் பயலே! முந்தா நாள் மொளச்ச நீ, கோயில் அதிகாரியைக் கிண்டலடிக்கிறயா? அவ ரைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். அந்த மனுஷனுக்கு, ஆகமங்கள் பத்தியும் கோயில்கள் பத்தியும் நல்லாவே தெரியும்!” என்றார்.

“அப்புறம் எதுக்கு தாத்தா அவர் அப்பிடிச் சொன்னாரு?” என்றான் டீன்-ஏஜ் பையன்.

“யாக - உற்சவ ஏற்பாடுகள்ல மும்முரமா இருக்கார் அந்த அதிகாரி. அவருக்கு இதுக்கெல் லாம் நேரமில்ல. அதனால உன்னை அனுப்பி வெச்சிருக்கார். நீ நெனக்கற மாதிரி இல்ல. உதாரணமா, பள்ளிக்கூடத்துல பாடம் நடத்தும்போது டீச்சரம்மா, ‘நாலும் மூணும் எவ்வளவு?’னு கேப்பாங்க. ‘ஐயே... இதுகூட டீச்சருக்குத் தெரீல. நம்மகிட்ட கேக்கறாங்க பாரு!’னு சொன்னா எப்பிடி? அந்த மாதிரிதான் இதுவும். பிறத் தியார்கிட்ட குத்தம் கண்டுபிடிக்கிறதிலேயே குறியா இருக்கக் கூடாது. தெரியுதா?” என்றார் தாத்தா.

“ஸாரி தாத்தா!” - டீன் ஏஜ் பையன்.

தாத்தா உற்சவத்தைப் பற்றி விளக்க ஆரம்பித் தார்: “கோயிலுக்கு வர முடியாதவங்க, வயசான வங்க, சின்னக் கொழந்தைங்க, நோயாளிங்க, நெற மாச கர்ப்பிணிகள்- இப்படிப்பட்டவங்களுக்கு எல்லாம் தெய்வ அனுக்கிரகம் கெடைக்கணும்கிறதுக் காகவே சாமி திருவீதி உலா வர்றார்’னு சொல்வார் வாரியார் சுவாமிகள்!” .

டீன்-ஏஜ் பையன் முகம் பிரகாசமானது. “ரொம்ப எளிமையா சொல்லியிருக்காரு வாரியார் சாமி. இருந்தாலும் எனக்கு ஒரு சந்தேகம்! உற்சவ மூர்த்திய, கல்லுல செய்யாம, செப்புல செஞ்சு வெச்சுருக்காங்களே... ஏன் தாத்தா?”

தாத்தா சிலிர்த்தார். “நல்ல கேள்வி. இதுக்கும் வாரி யார் சுவாமி பதில் சொல்லி இருக்காரு. மின்சாரத்தை நாம அனுபவிக்க, ஒயரிங்னு சொல்லி இழுத்துட்டுப் போறோமில்ல. அந்த ஒயருக்குள்ள என்ன கல்லுக் கம்பியா இருக்குது; செப்புக் கம்பிதானே இருக்குது. சுலபமா, சீக்கிரமா மின்சாரம் பாயறதுக் காக செப்புக் கம்பிய வெச்ச மாதிரி, மின்சாரம் கண்டுபிடிக்காத அந்தக் காலத்துலியே சாமியோட சக்திய நாம சுலபமா அடையறதுக்காக செப்பு விக்கிர கமா, உற்சவமூர்த்திய வெச்சாங்கனு சொல்வார் வாரியார். வா! இதயே இப்ப நீ கேட்ட மாதிரி, பத்து நாள் உற்சவமா விரிவா பாக்கலாம். பத்து நாள் மகோத்சவத்துல முதல் நாள் விழா, ஸ்தூல உடம்பான நம்ம உடம்பு மேல இருக்கற பற்றுதலை நீக்கணும்ங்கறதுக்காக. இரண்டாம் நாள் விழா, நம்ம உடம்பு (பிறப்பு)- அது உண்டாகக் காரணமாயிருக்குற சூட்சும உடம்பு- இந்த ரெண்டுமே போகணும்ங்கறதுக்காக...” என்றார் தாத்தா.

“ஸ்தூல உடம்புனா தெரியும். சூட்சும உடம்புனு சொல்றீங்களே, அது எப்படி?” பையன் கேட்டான்.

“புரியும்படி சொல்றேன். பஸ், கார்ல எல்லாம் இருக்குமே...டயர்! அது நம்ம பார்வைக்குத் தெரியும். அத ஸ்தூல உடம்புனு வெச்சுக்க. டயருக்குள்ள இருக்கும் டியூபு நம்ம பார்வைக்குத் தெரியாது. அதை சூட்சும உடம்புனு வெச்சுக்க!”

“பின்னிட்டீங்க தாத்தா!” - டீன்- ஏஜ் பையன்.

“இப்ப மூணாவது நாள் உற்சவத்தப் பாக்கலாம். மனம், வாக்கு, உடம்புங்கற மூணு சமாசாரங்கள்னாலயும் நாம செஞ்ச கெட்டதெல்லாம் போகணுங் கிறதுக்காக. அதாவது ஆசை, கோபம், அறியாமை- இந்த மூணும் போகணுங்கிறதுக்காக மூணாவது நாள் உற்சவம். நாலாவது நாள் உற்சவம்- மனம், புத்தி, அகங்காரம், சித்தம்ங்கற நாலும் நீங்கறதுக்காக. நாலு வகை பிறவிகள்லயும் நாம மாட்டிக்கக் கூடாதுங்கறதுக்காக!”

“நாலு வகையான பிறவிங்கிறது என்ன தாத்தா?”

“முதல் வகை: அண்டஜம். அதாவது முட்டையிலேர்ந்து பிறக்கிறது எல்லாம் ஒரு வகை. பாம்பு, தவளை, முதலை, ஆமை, மீன், பறவை மாதிரியானவை இதுல அடங்கும். இரண்டாவது வகை ச்வேதஜம். இது, வேர்வையில இருந்து உண்டாவது: கிருமி, புழு, பேன், விட்டில் மாதிரி யானவை. மூணாவது வகை உத்பீஜம். விதை, வேர், கிழங்கு இதுல இருந்தெல்லாம் முளைப்பது. மரம், பூண்டு, செடி, கொடி போன்றவை. நாலாவது, ஜரா யுஜம்- கருவிலிருந்து பிறப்பது. மனுஷங்க, நாலுகால் விலங்குங்க இதெல்லாம். இவைதான் நாலு வகைப் பிறவி. இது எதுலயும் நாம மாட்டிக்காம- பொறக்காம இருக்கிறதுக்காகத்தான் நாலாவது நாள் உற்சவம். அஞ்சாவது நாள் உற்சவம்... ஐம்பொறிகளும் (கண், காது, மூக்கு, நாக்கு, உடம்பு) கண்ட பக்கம் போகும். அதுல நாம மாட்டிக்கக் கூடாதுங்கறதுக்காக. ஆறாவது நாள் - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்ங்கற ஆறு கெட்டதும் நீங்கறதுக்காக. இத நல்லா புரியும்படியா சொல் லணும்னா கண்டது மேல உள்ள ஆசை, கோபம் (பகை), கருமித்தனம், அறியாமை வசப்பட்டு ஆசையில மாட்டிட்டு மயங்கறது, காசு-பணம் இதுனால எல்லாம் அகம்பாவம் புடிச்சு அலையிறது, அடுத்தவனக் கண்டு பொறாமை. இந்த ஆறு கெட்ட குணங்களும் போக ஆறாவது நாள் உற்சவம்.

ஏழாவது நாள் - கொஞ்சம் முன்னால பாத் தோமே. நால் வகைப் பிறப்புனு. அதனால உண்டாகக் கூடிய பிறவிகள் ஏழு. தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர்னு ஏழு பிறவி. இந்தப் பிறவிங்கள்ல ஏதாவது ஒண்ணா நாம பிறக்கக் கூடாதுங் கறதுக்காக ஏழாம் நாள் உற்சவம்.

முற்றும் உணர்தல், எல்லையில்லா இன்பம் உடைமை, இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், தன் வயத்தனாதல் (கெட்டவற்றில் ஆசை கொண்டு ஈடுபடாமலிருப்பது), பேரருள் உடைமை, முடிவில்லாத ஆற்றல் உடைமை, இயற்கையாகவே மெய்ஞ்ஞானம் உடைமை, தூய உடம்பு- உத்தமமான இந்த எட்டு வித குணங்களையும் நாம அடையணும்ங்கறதுக் காக எட்டாம் நாள் உற்சவம்.

ஒன்பதாம் நாள் உற்சவம்: மூணு உருவம், மூணு தொழில், மூணு எடத்துல இருக்கறது- இந்த ஒன்பதும் இல்லாம போவறதுக்காக. மூணு உருவம்: உருவம்- அரு உருவம்- அருவம். மூணு தொழில்: படைத்தல்- காத்தல்- அழித்தல். அதாவது உடம்போட இருந்து போகங்களை அனுபவிக்கறது- அதுலியே நெலயா நிக்கறது- அதுல இருந்து மாறுதல அடையறது. மூணு இடம்: சாலோக, சாமீப, சாரூப என்னும் மூன்று விதமான முக்திகள். இந்த ஒன்பதும் கூடாதுங்கறதுக்காக ஒன்பதாம் நாள் உற்சவம். பத்தாம் நாள் உற்சவம்: அழி வில்லாத, எல்லையில்லாத பரமானந்த வெள்ளத்தில் நாம் முழுகுவதற்காக!" என்ற தாத்தா, "டீன்-ஏஜ் பையா! பத்து நாள் உற்சவத்தை, சுருக்கமா சொன்னேன். அந்த தத்துவார்த்தத்தை நிதானமா நிறுத்திச் சொல்லு! உற்சவ நிறைவு நாள் அன்னிக்கி நா(ன்) ஊர்லேர்ந்து திரும்பிடுவேன். அன்னிக்கு எம்பேச்சு இருக்கும். அதுல, மிச்சத்தையும் பாத் துக்கலாம்!" என்றார்.

பட்டாபி

லலிதா சகஸ்ரநாமமும் டேப் ரிக்கார்டரும்!

தாத்தா திருச்சி ரயில் நிலையத்தில் இறங்கி, மகளது வீட்டை அடைந் தார். மகள் வயிற்றுப் பேரனும்-பேத்தியும், தாத்தா கையில் இருந்த மூட்டை முடிச்சுகளைப் பிடுங்காத குறையாக வாங்கி, ஓர் ஓரமாக வைத்துவிட்டுத் தாத்தாவை சோபாவில் உட்கார வைத்து, பக்கத்துக்கு ஒருவராக இருவரும் உட்கார்ந்தார்கள்.

மணக்க மணக்க ஃபில்டர் காபியை நீட்டிய மகள், "அப்பா... இந்தாங்க! இதக் குடிங்க! அலுத்து ஓஞ்சு போய் வந்துருப்பீங்க!" என்றாள். கூடவே குழந்தைகளைப் பார்த்து, "ஏய்! ரெண்டு பேரும் போங்க! தாத்தாவ தொந்தரவு பண்ணக் கூடாது. பள்ளிக்கூடத்துக்குக் கௌம்பற வழியப் பாருங்க!" எனக் கத்தினாள்.

குழந்தைகள் கிண்டல் செய்தன. "யம்மா! உங்க அப்பாவப் பாத்த உடனே ரொம்பத்தான் குதிக்காத! நாளைக்கு எங்க பள்ளிக்கூடத்தோட நாப்பத்தொன்பதாம் ஆண்டு விழா. அதுக்காக இன்னிக்கி லீவு. எங்க ஸ்கூல் கரெஸ்பாண் டெண்ட், பிரின்ஸிபால் எல்லாம் இன்னுங் கொஞ்ச நேரத்துல நம்ம வீட்டுக்கு வரப் போறாங்க. அவங்க எதிர்ல எங்களப் போட்டுக் காச்சாத!" என்றனர்.

தாத்தா காபியைக் குடித்து விட்டு டம்ளரை நீட்டினார். அதை வாங்கிய மகள் குழந்தைகளிடம், "எதுக்காக இப்ப பள்ளிக்கூடத்துல இருந்து பெரிய ஆளுங் கல்லாம் நம்ம வீட்டுக்கு வராங்க? டொனே ஷனா?" எனக் கேட்டாள்.

“அவங்க வந்தாத்தான் தெரியும்!” எனப் பளிச்சென்று பதில் சொன் னார்கள் குழந்தைகள்.

சற்று நேரத்தில் தாத்தா சாப்பிட்டு முடித்தார். அதற்காகவே காத்திருந் ததைப் போல, பள்ளிக்கூடத்தில் இருந்து பெரிய மனிதர்கள் வந்தார்கள். வந்ததும் நேரடியாகத் தாத்தாவிடம் பேசத் தொடங்கி விட்டார்கள்.

“நமஸ்காரம். நேரடியா மேட்டருக்கே வந்துர்றோம். எங்க பள்ளிக்கூடம், நம்ம கலாசாரத்துக்குன்னே நடக்கற பள்ளிக்கூடம்னு உங்களுக்கே தெரியும். நம்ம பள்ளிக்கூடத்தோட பழைய மாணவர் நீங்க. நாளைக்கு ஆண்டு விழா. நீங்கதான் சிறப்புரை. பேரண்ட்ஸும், இளம் தலைமுறையுமா கலந்த மாதிரி இருக்கும். நீங்கதான் அதுக்குச் சரியான ஆளுனு உங்களக் கேக்காம உங்க பேரை சிறப்புரையில போட்டுட்டோம். நீங்க வரப் போற தகவல ஏற்கெனவே உங்க பேத்தி சொன்னது, வசதியா போச்சு!” என்றார்கள்.

தாத்தா முகம் மலர்ந் தார். “நான் படிச்ச பள்ளிக்கூடம். அங்க இருந்து எனக்கு அழைப்புன்னா, சாதாரண விஷயமா? பெருமைப்பட வேணாமா? கண்டிப்பா வர்றேன்!” என ஒப்புக் கொண்டார்.

மறு நாள்... பள்ளியில் ஆண்டு விழா தொடங்கியது. ‘முன்னாள் மாணவர் திரு. பட்டாபி நமது பண்பாட்டின் பெருமை பற்றிச் சிறப்புரை ஆற்றுவார்!’ என ஆங்காங்கே டிஜிட்டல் பேனர்கள் ஜொலித்தன.

தாத்தாவைப் பற்றிய அறிமுகப் படலம் முடிந்ததும் தாத்தா பேசத் தொடங்கினார். தனக்கும் பள்ளிக்கூடத்துக்கும் உள்ள தொடர்பை விவரித்து விட்டு, கலாசாரம் பற்றிப் பேசத் தொடங் கினார். “கொழந்தைங்களுக்கு சின்ன வயசுல இருந்தே நல்லத சொல்லிக் குடுக்கணும். வீர சிவாஜி சின்ன வயசுல நம்ம இதிகாச- புராணங்களயெல்லாம் கேட்டுக் கேட்டு, பெரிய வீரனா வந்தாருன்னு படிக்கிறோம். அந்த மாதிரி புள்ளைங்களுக்கு நல்லதச் சொல்லித் தரணும்.

அதுவும் இந்தக் காலத்துல கண்டிப்பா சொல்லிக் குடுத்துத்தான் ஆகணும்கற நெலமை. நல்ல படிப்பு, நல்ல சம்பாத்தியம். ஆனா அப்பா, அம்மா _ முதியோர் இல்லத் துல. இந்த மாதிரி நெலம வரக் கூடாதுனுதான், ராமாயணத் துல ச்ரவணகுமாரன் கதையச் சொல்லி வெச்சாங்க. கண்ணு தெரியாத அப்பா- அம்மாவ காவடி மாதிரி கட்டி, தான் போகிற எடமெல்லாம் தூக்கிக் கிட்டுப் போய்த் தொண்டு செஞ்சான் ச்ரவணகுமாரன். பெத்தவங்களுக்குத் தண்ணி எடுத்துக்கிட்டுப் போறதுக்காக வந்த ச்ரவணகுமாரன், தசரத மகாராஜா போட்ட அம்புல அடிபட்டுக் கீழ சாஞ்சான். அப்பக்கூட அந்தப் பையன், ‘இந்தத் தண்ணிய, என்னப் பெத்தவங்க கிட்ட குடு! நான் அவங்களுக்கு நமஸ்காரம் பண்ணினேன்னு சொல்லு!’னு தசரதன்கிட்ட சொல்லி மூச்ச நிறுத்திட்டான். ராமாயணத்துல வர்ற இந்தக்

கதை எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். இந்தக் கதைய நம்ம புள்ளங்களுக்குச் சொல்லிட்டு, சில விவரங்களயும் சொல்லணும்.

இந்தக் கதைல வர்ற பையன் பேரு 'ச்ரவணகுமாரன்'. 'ச்ரவணம்'ங்கற வார்த்தைக்குக் கேக்கறதுனு அர்த்தம். அப்பா-அம்மாவை தெய்வமா நெனச்சு அவங்க சொன்ன பேச்சக் கேட்டு, அவங்க மனம் கோணாம நடந்துக் கிட்டான் அந்தப் பையன். அதுனால அவன் 'ச்ரவணன்'.

'இந்த ச்ரவணகுமாரன் கதை என் வாழ்வில் பெரும் திருப்பத்தை உண்டு பண்ணியது; என்னைக் கவர்ந்தது!'னு மகாத்மா காந்தி சொல்லியிருக்கார். இன்னும் சொல் லப் போனா நம்ம கலாசாரம், பண் பாடு, ஞான நூல்கள்னு சொல்ற இதும்மேல எல்லாம் நம்மளவிட, அயல்நாட்டுக்காரங்களுக்குத்தான் ஆர்வம் அதிகமா இருக்கு. நடந்த நிகழ்ச்சி ஒண்ணு சொல்லப் போறேன்.

அம்பாளப் பத்தி 'லலிதா சகஸ்ரநாமம்'னு ஒரு நூல். அத முறையான, தெளிவான உச்சரிப்போட இத்தன தடவை சொன்னா, இன்ன பலன்னு உண்டு. ஒரு இங்கிலீஷ்காரர், முறையான தெளிவான உச்சரிப்போட சில பேரை சொல்லச் சொல்லி, டேப் (ஜிகிறிணி) எடுத்தாரு. கேசட் ரிக்கார்டர் வராத காலம் அது. ஸ்பூல் டைப் டேப்புனு சொல்வோமே, பெரீசா வட்டமா இருக்கும். அதுல லலிதா சகஸ்ரநாமத்தை ஃபுல்லா டேப் எடுத்தாரு. அத எத்தனை தடவ சொல்லணுமோ அத்தனை தடவயும் திரும்பத் திரும்பப் போட்டாரு. கடைசி தடவ முடிஞ்சது. டேப் ரிக்கார்டர் அப்படியே வெடிச்சு தூள் தூளா ஆயிடுச்சு.

கீழ கெடந்த தூளையெல்லாம் பாத்த இங்கிலீஷ்காரர் ஆச்சரியப் பட்டுப் போயிட் டாரு. காரணம்? கீழ கெடந்த தூள் எல்லாம் அப்பிடியே தெளிவா அம்பாள் வடிவத்துல, கையால வரைஞ்ச ஓவியம் மாதிரி இருந்துச்சு. லலிதா சகஸ்ரநாமத்தைச் சொன்ன ஜடப் பொருளான டேப் ரிக்கார்டரே, இப்படி அம்பாள் வடிவமா ஆகியிருக்குனா, மனுஷனான நாம சொன்னா... எப்படினு நெனச்சாரு. அவ்வளவுதான். நம்ம ஞான நூல்கள்ல தீவிரமா ஈடுபட ஆரம்பிச்சார். இப்பல்லாம் இங்கிலீஷ்காரங்கதான் நம்ம நூல்களத் தீவிரமா படிக்கறாங்க; தெரிஞ்சுக் கறாங்க. சரி! இப்ப சில பழக்க வழக்கங்களப் பாக்கலாம்." என்ற தாத்தா, "சாப்பாட்டு இலய எப்பிடிப் போடணும்?" எனக் கேட்டார்.

உடனே, "நுனி இடக் கை பக்கமா இருக்கும்படியா போடணும்!" கூட்டத்தில் இருந்து குரல்கள் ஒலித்தன.

"இது தப்புனு சேக்கிழார் சுவாமிகள் சொல்றார்!" என ஒரு விநாடி நிறுத்தினார் தாத்தா

பட்டாபி

மொட்டை அடிப்பது ஏன்?

“சாப்பிடறப்போ வாழை இலைய, நுனி இடக் கைப் பக்கமா இருக்கும் படியா போடணும்!” என்று கூட் டத்தில் இருந்து பதில் வந்ததும், தாத்தா அதை மறுத்தார்.

“இது தப்புன்னு சேக்கிழார் ஸ்வாமிகள் சொல்றாரு!” என்றார். கூட்டம் முழுவதும் குழப்பத்தை முகத்தில் காட்டியது. அதைப் பார்த்தும், பார்க்காதவர் போலத் தொடர்ந்து பேசினார் தாத்தா: ‘ஈர்வாய் வலம் பெற வைத்து’னு பெரிய புராணத்துல, சேக்கிழார் சொல் றாரு. இப்ப நீங்க சொன்னதைதான் அவரும் சொல்றாரு. ஆனா, வேற விதமா சொல்றாரு. அதாவது நுனி இலய நாம நறுக்கறோமில்லையா, அந்த நறுக்கின பகுதி, வலக் கைப் பக்கமா வரணும்ங்கறாரு. ஏன் அப்படி? இடக்கைப் பக்கம்னு சொல்லக் கூடாது. ‘இடது’ங்கறது அமங்கலமான வார்த்தை. வலம் வர்றதுன்னு சொல்லுவோமே தவிர, இடம் வர்றதுனு சொல்ல மாட்டோம். இடம் வர்றது - அமங்கலமான காரியத்துல தான். அமங்கலமான வார்த்தையைச் சொல்லக் கூடாதுங்கறதுனாலதான், நாம சொல்ற மாதிரி ‘நுனிய இடக் கைப் பக்கமா போடணும்’னு சொல்லாம, வேற மாதிரி மாத்திச் சொன்னாரு சேக்கிழார். மறந்து போய்க் கூட அமங் கலமா பேசக் கூடாது!” என்று தாத்தா சொல்லிக் கொண்டிருந்தபோதே, முன் வரிசையில் இருந்த ஒருவரின்

செல் போன் வீரிட்டது. விழா நிர்வாகி அவசர அவசரமாக மைக்கில், “தயவுசெய்து அனைவரும் அவரவர் செல்போன்களை ஸ்விட்ச் ஆ்ஃப் செய்யும்படி விழா கமிட்டியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்...” என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஒரு சிலர் அப்படியே செய்தார்கள். அதை அனு சரித்தே பேச்சைத் தொடர்ந்தார் தாத்தா: “இப்ப உங்க செல்போன எடுத்துக்குங்க. அது தானாவா அடிக்குது? உங்க நம்பரை நீங்களா விருப்பப்பட்டுக் குடுத்தீங்க. வாங்கினவங்க உங்களத் தொடர்பு கொள்றாங்க. இதேதான் வாழ்க்கையிலேயும். நாம பண்ணுன நல்லது- கெட்டது, ரிஃப்ளெக்ட் ஆகி, நமக்கே திருப்பி வருது. இதுல என்ன விசேஷம்னா... நல்லது- நிதானமா, லேட்டா வரும். கெட்டது- அப்பவே, உடனடியா வரும். புரியும்படியா எளிமையா சொல்லணும்னா... ‘நாம குண்டாகணும், நமக்கு நெறய பலம் கெடைக் கணும்’னா டானிக் குடிக்கறோம். உடனே பலன் கெடைக்காது. நிதானமாத்தான் பவர் தெரியும். அதே விஷம்னா, உடனே தன்னோட

வேலயக் காட்டிடும். அதனாலதான் அமங்கலமாப் பேசக் கூடாதுங்கறத நம்ம மனசுல பதிய வெக்கறதுக்காக சேக்கிழார் அப்படிச் சொன்னார். அடுத்ததா; துணிங்களத் தோச் சிட்டுப் பிழியும்போது, சில பேர் கால்ல பிழிஞ்சுக்குவாங்க. அப்படி செஞ்சா, துணியில இருக்கற அழுக்குங்க தண்ணியோட சேர்ந்து கால்ல போய், அங்க ஏற்கெனவே இருக்கற அழுக்குங்க கூடக் கூட்டணியா சேர்ந்துக்கும்.

அப்பறம் என்ன? அழுக்கோட அழுக்கு சேர்ந்து, தண்ணியுந்தான் இப்ப ஒத்தாசைக்கு இருக்கே, எல்லாக் கிருமிங்களும் உடம்புல பரவி வியாதியக் கொண்டாந்துடும். முக்காவாசி வியாதிங்க வர்றதுக்குக் காரணமே, நம்ம காலுங்களத் தூய்மையா வெச்சுக்காததால தான். அதுனால, துணிங்களத் தோச்சுப் பிழியும்போது, கால்ல வெச்சுப் பிழியக் கூடாதுனு பெரியவங்க சொன்னாங்க. அதோட, ராத்திரி, படுக்கும்போது காலை நல்லாக் கழுவிட்டு, ஈரம் போகத் தொடச்சிட்டுப் படுக்கணும்னாங்க. அதனாலதான் இவ்வளவு மருத்துவ வசதிங்க இல்லாத அந்தக் காலத்திலயும், ஆரோக்கியத்தோட இருந்தாங்க.

அடுத்தது; துணியத் தாண்டக் கூடாதுனு சொல்லி வெச்சுருக்காங்க. காரணம்? இறந்து போனவங்களுக்கு உண்டான காரியங்களச் செய்யும்போதுதான், துணியப் போட்டு மிதிக்கச் சொல்லுவாங்க (தாண்டச் சொல்லுவாங்க). அதுனாலதான், துணியத் தாண்டக் கூடாதுனு சொன்னாங்க. பெரியவங்க சொன்ன தையோ அல்லது செஞ்சதையோ கேலி பேசறதுல எந்த லாபமும் இல்ல. முன்னோர்கள்லாம் இடுப்புல ஒரு கயிறு கட்டியிருப்பாங்க. அரணாக்கயிறு, அண்ணாக் கயிறுன்னு எல்லாம் சொல் லிக் கிண்டலடிப்போம். அத ஏன் செஞ்சாங்கன்னு நாம தெரிஞ்சுக்க வாணாமா? இடுப்புல அப்படிக் கயிறு கட்டிக்கிட்டு இருந்ததுனால, கிட்னி ப்ராப்ளம் - மூத்திர கோசம்னெல்லாம் சொல்றோமே, அந்த வியாதிங்கள்லாம் அதிகமான அளவு வராம இருந்துச்சு.

அடுத்தது; பல பேரு அதிகமான அளவுல எகத்தாளமா பேசறது- முடி இறக்கறதப் பத்தி; அதாவது மொட்ட அடிச்சுக்கறதப் பத்தி. 'உசுரக் குடுத்த சாமிக்கி, முடியக் குடுக்கறியே, அது மறு படியும் வளரும்னுதானே! பக்தி இருந்தா எங்க உங்க சுண்டு வெரலக் குடுங்கடா! பார்ப்போம்'னு சினிமாவுலயே தமாஷ்ங்கற பேர்ல, குறிப்பா நம்ம கலாசாரத்தைக் கிண்டல் பண்ணி இருக்காங்க.

மொட்டை அடிக்கறதப் பத்திப் பார்க்கலாம். அடுத்தவங்கள மொட்டை அடிக்கறதப் பத்தி இல்ல. நமக்கு அடிச்சுக்கறதப் பத்தி. கூர்மையாக் கேக்கணும். நாம எல்லாரும் அம்மா வயத்துல பத்து மாசம் (கர்ப்பத்தில்) இருக்கோம்; அதாவது முந்நூறு நாள். அங்க அம்மா வயத்துல நாம இருக்கறப்ப நம்மச் சுத்தி என்ன பாலும் தேனுமா இருக்கு? அல்லது ஏ.சி. இருக்கா? நம்மளச் சுத்தி ரத்தம், சதை, மலம், ஜலம் (சிறுநீர்)னு தான் இருக்கு. அதுங்களுக்கு நடுவுலதான் முந்நூறு நாள் இருந்துருக்கோம். அதுங்கள்லாம் நம்ம உடம்புல எவ்வளவு ஊறியிருக்கும்? உதாரணத்துக்கு, கடல் தண்ணியில நம்ம சுட்டு வெரல வெச்சு எடுத்துட்டு, துணி யால தொடச்சுட்டு, வெரல நாக்குல வெச்சுப் பாத்தா உப்புக் கரிக்கும். ஒரு விநாடி உப்புத் தண்ணியில இருந்த வெரலுக்கே, உப்பு அப்பிடி ஊறியிருக்குதுன்னா... முந்நூறு நாள் அம்மா வயத்துல ரத்தம், சதை, மலம், ஜலம் (சிறுநீர்)னு, நம்ம உடம்புல எத்தனை ஊறி இருக்கும்? அதெல்லாம் நம்ம பொறந்ததுக்கு அப்பறமா, எப்பிடி வெளியேறும்?

உடம்புக்குள்ள இருக்கறது எல்லாம், உடம்புல இருக்கற மயிர்க்கால்கள் மூலமா வெளியில போயிடும். ஆனா தலைக்குள்ளாற இருக்கறது எல்லாம் வெளியில போக என்ன வழி?" என்ற தாத்தா அருகில் இருந்த தண்ணீரைப் பருகி விட்டு பேச்சைத் தொடர்ந்தார்.

பட்டாபி

இடி இடிப்பதற்கும் அர்ஜுனனுக்கும் என்ன சம்பந்தம்?

தலைக்குள்ளாற இருக்கற எல்லாம், தலையில இருக்கற மயிர்க்கால்கள் வழியாத்தான் வெளியில வந்தாக ணும். ஒட்டுமொத்தமா வர்ற அதெல்லாம் தலையிலியே தேங்கிப் போச்சுன்னு வெச்சுப்போம். அவ்வளவுதான். எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்ங்கறது மாறிப் போய், எல்லா விதமான வியாதிங்களுக்கும் சிரசே பிரதானம்னு ஆகிப் போயிடும். அது கூடாதுங்கறதுக்காகத்தான், கொழந்தயா இருக்கும்போதே, 'குலதெய்வத்துக்கு முடி இறக்கறது'னு செஞ்சாங்க. இது இல்லாம..." என்று தாத்தா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நடுத்தர வயதுக்காரர் ஒருவர் எழுந்து, "குறுக்கால பேசறேன்னு கோவிச்சுக்காதீங்க! குலதெய்வம்னா அது எது? அதை எப்பிடித் தெரிஞ்சுக்கறது? எங்க குலதெய்வம் எதுன்னு தெரியாது. என்ன செய்ய ணும்னு, நீங்கதான் சொல்லணும்!" என்றார்.

ஒரு விநாடி நிதானித்த தாத்தா, "இப்ப சொல்றது, கேள்வி கேட்ட இவருக்கு மட்டுமில்ல. எல்லாருக்காக வும்தான். குலதெய்வ வழிபாட்டை விட்டுட்டு, நாம மத்த என்ன பிரார்த்தன செஞ்சும் பலனில்லைனு பெரியவங்க எல்லாம் விசேஷமா சொல்லுவாங்க. குலதெய்வம்ங்கறது நம்ம இஷ்டத்துக்கு வெச்சுக்கறது இல்ல. நம்ம முன்னோர்கள்ல ஒருத்தர், தனது பக்தி யின் மூலமா தெய்வத்தை நேருக்கு நேரா அல்லது கனவுல பார்த்து இருப்பாங்க. அப்ப அந்த சாமி, 'நான் இன்ன சாமி. நான்தான் உனக்குக் குலதெய்வம்'னு சொல்லியிருக்கும். இப்படி முன்னோர்கள் மூலமா, அந்த வழியில வந்ததுதான் குலதெய்வம்.

சில குடும்பங்கள்ல முன்னோர்களே, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'னு வள்ளு வர் சொல்ற மாதிரி, தெய்வ நெலையில இருந்துருப்பாங்க. அப்படிப்பட்ட அந்த முன் னோர்களே, குலதெய்வமா இருக்கறதும் உண்டு.

அப்படிப்பட்ட குலதெய் வத்தைத் தெரிஞ்சுக்கிட்டு, தவறாம வருஷத்துக்கு ஒரு தடவையாவது வழிபாடு செய்யணும். குலதெய்வம் எது? அது எங்க இருக்குனு தெரி யாதவங்க கவலைப்பட வேணாம். திருப்பதி வேங்கடாசலபதியக் குல தெய்வமா

வெச்சுக்கலாம். குலதெய்வம் எதுனு காலப்போக்குல தானா தெரிய வரும். இப்ப வாங்க! முடி இறக்கறதப் பத்தி, மேல பார்க்கலாம். இந்த மாதிரி குலதெய்வத்துக்குத்தான், முடி எடுக்கறதுங்கற பழக்கத்த வெச்சு, முன்னோர்கள் செஞ்சாங்க.

அதுக்கு அப்பறமா முடி வளர்ந்த உடனே, இஷ்ட தெய்வப் பிரார்த்தனைங்கற பேர்ல, இன்னொரு தடவை, அதாவது ரண்டாந் தடவ முடி இறக்குவாங்க. இது எதுக்கு? அம்மாவோட வயத்துல இருந்தபோது, தலையில ஊறிக் கெடக்கற அழுக்குல, அநேகமா எல்லாமே மொதத் தடவ மொட்டை போட்டப்பவே போயிருக்கும். மிச்சமீதி இருக்குறது ஒட்டுமொத்தமா, மொதல் மொட்டைக்கு அப்பறமா முடி வளரும்போது வெளியில வந்துருக்கும். அத, இஷ்ட தெய்வப் பிரார்த்தனைங்கற பேர்ல, ரண்டாந் தடவை முடி இறக்குறப்போ 'க்ளீன்' செஞ்சுருவாங்க. அவ்வளவுதான்; இனிமே தலைக்கு உள்ள எந்த விதமான கெட்ட ரத்தம், சதை, மலம், ஜலம்னு எதுவுமே இருக்காது. இப்படி முடி இறக்கறதுங்கற

பேர்ல, ஆரோக்கியத்தச் சொல்லி வெச்சாங்க நம்ம பாட்டன், பூட்டன்லாம்.

இப்ப வாங்க! இந்தக் காலத்துல நல்லா வெகுவாப் பல இடங்கள்லியும் பரவிக் கெடக்கற ஒரு தப்பைப் பார்க்கலாம். இப்பல்லாம் முக்காவாசி எல்லா வீடுகள்லியும், பாடற மெஷின் ஒண்ணு இருக்கு. நமக்கு வேணுங்கற சாமி நாமாவை அதுபாட்டுல நாள் பூரா சொல்லிக்கிட்டே இருக்கும்.

இப்ப அந்த மெஷின்லியே புதுசா ஒண்ணு, எல்லார் வீட்லயும் கத்துது. இதுல சாமி நாமா கூட, காயத்ரி மந்திரம் மாதிரியான சில சூட்சுமமான மூல மந்திரங்களயும் சேர்த்து, கத்தும்படியா ஏற்பாடு பண்ணி இருக்காங்க. அதுவும் அந்த மந்திரங்கள எந்த விதமான முறையும் இல்லாம, தபேலா-டோலக்கு, கீ போர்டுல ஸ்ருதினு சேர்த்துக் கலந்து ஒரு வழி பண்ணி இருக்காங்க, அது தப்பு. உங்க யார் வீட்லியாவுது அப்படிப்பட்ட மெஷின் இருந்தா, தயவு செஞ்சு காயத்ரி மந்திரம் மாதிரி மூல மந்திரங்களப் பாடும்படியா வெக்காதீங்க. முன்னோர்கள் சொன்னத, நம்ம சௌகரியத்துக்காக நம்ம இஷ்டப்படி மாத்தக் கூடாது.

உதாரணமா, 'பலமா இடி இடிக்கும்போது 'அர்ஜுனா! அர்ஜுனா'னு சொல்லு! பயம் போயிடும்'னு சொல்லுவாங்க. உடனே, 'இது எப்படி? அர்ஜுனனுக்கும் இடிக்கும் என்ன சம்பந்தம்? என்னய்யா காது குத்துறீங்க'னு கேக்கற வாதக்காரர்களும் உண்டு.

காது குத்தல... ஆனா, அது காது சமாசாரம் தான். பலமா இடி இடிக்கும்போது பல பேருக்கு அந்த இடி சத்தத்துல 'கப்'புனு காது அடைச்சுக்கும். அப்ப 'அர்ஜுனா, அர்ஜுனா'னு சொன்னா, வாய் திறந்து குவிஞ்சு அப்பறமா பிளக்கும். வேண்ணா சொல்லிப் பாருங்க! அப்படிச் சொல்றதுனால தாடைகள் நல்லா அகன்று போய், காத்து வெளியேறும். அடைச்சிக்கிட்டு இருந்த காது 'பளிச்'சுனு சரி ஆயிடும்.

இதத்தான் நாம, கொழந்தையா இருக்கறப்ப, நம்ம பெரிய வங்க, 'காண்டவ வனத்த அர்ஜுனன் எரிக்க ஆரம்பிச்சான். தேவேந்திரன், மழையயும், இடியையும் அனுப்பி அதத் தடுக்கப் பார்த்தான். ஆனா, அதயும் தாண்டி அர்ஜுனன் ஜெயிச்சான். அதுனால இடி இடிச்சா அர்ஜுனா அர்ஜுனானு சொல்லு! பயம் போயிடும்'னு சொல்லி வெச் சாங்க!" என்றார் தாத்தா.

சற்று நிதானித்து விட்டு, "இங்க இருக்கற எல்லாருக்குமே ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம் ஒண்ணு, அதுவும் நம்ம சாஸ்திரங்கள் சொன்னதுல இருந்து சொல்லப் போறேன். இன்னக்கி இருக்கற காலகட்டத்துல இதெல்லாம் எடுபடுமானு தெரியல. இருந்தாலும் சொல்லித்தான் ஆகணும். இருட்டு பரவ ஆரம்பிச்ச உடனே விளக்கைத் தேடி ஏத்தறோமில்லயா, அது போல, தயவு செஞ்சு கூர்மையா கேட்டு மனசுல பதிய வெச்சுக்குங்க!

நம்ம சாஸ்திரங்களும் முன்னோர்களும் சொன்னதுல முக்கியமான ஒண்ணு - ஆணும் பெண்ணும் தொட்டுப் பேசிப் பழகக் கூடாது. பெத்த அப்பனா இருந்தாலும், தான் பெத்த பொண்ணை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அப்பறமா தொட்டுப் பேசக் கூடாது.

'என்ன சார்! நீங்களும் உங்க சாஸ்திரங்களும். பெத்த அப்பா, தான் பெத்த பொண்ணத் தொட்டுப் பேசக் கூடாதுங்கறீங்களே. இது என்ன நியாயம்?'னு மனசுக்குள்ளயே வாதப் பிரதிவாத வண்டிங்கள ஓட்டாதீங்க!

'ஆபோசிட் செக்ஸ் அட்ராக்ட்ஸ் ஈச் அதர்'னு பிற்காலத்துல இங்கிலீஷ்காரன் சொன்னான். அதுக்கு முன்னாலியே அதுனால வர்ற பிரச்னைகள மனோ ரீதியா அலசி ஆராஞ்சு, சாஸ்திரங்கள்ங்கற பேர்ல சொல்லி வெச்சவங்கதான் நம்ம முன்னோர்கள்.

எந்த நேரத்துல மனசு கெட்டுப் போகும்னு எதுவும் சொல்ல முடியாது. பெத்த அப்பாவா இருந்தாலும், தான் பெத்த பொண்ணிடமே முறைகேடா நடக்க முயற்சி பண்ணி, அவங்க கதையையே முடிச்ச தகவல்கள் சமீப காலமா பத்திரிகைகள் பலதுலயும் வந்தத, நீங்கள்லாம் படிச்சு இருப்பீங்க.

அதுனால வாதப் பிரதிவாதம் பண்ணி எதையாவது பேசறவங்க பேசட்டும்... இந்த மாதிரி நல்லதையெல்லாம் உங்க கொழந்தைங்களுக்கு, பெத்தவங்களான நீங்க சொல்லிக் குடுங்க. அது உங்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. இப்ப, கொழந்தைங்களுக்கு எல்லாம், அதாவது படிக்கற பசங்களுக்கு முக்கியமா ஒண்ணு சொல்லப் போறேன்...”

பட்டாபி

கொடிமரம் உணர்த்துவது என்ன?

தாத்தா தொடர்ந்து பேசிக் கொண் டிருந்தார்: “நம்ம கோயில்கள்ல சாமி சந்நிதி செவுத்துல (சுவரில்) கூழிமிமிமிகி, நீஙி, மிஙீஞி என்றெல்லாம், கறுப்பா எண்ணெயால தீட்டி வெச்சுருப்பாங்க. அதாவது படிக்கற பசங்க, பாஸ் பண்ணணுங்கறதுக்காக இப்படிக் கன்னா பின்னான்னு தீட்டி வெச்சுருப்பாங்க. இதைவிட மிகப் பெரிய பாவம் _ சித்திர சபைனு சொல்ற குற்றாலத்துல இருக்கற அபூர்வ ஓவியங்கள்ல, ‘ஐ லவ்...’னு சொல்லி ஆணியால எழுதி வெக்கறது! அந்த மாதிரி சாந்நித்தியம் உள்ள ஓவியங்கள, இவ்வளவு காலம் நெலச்சு இருக்கற மாதிரி இனிமே தீட்ட முடியுமானு தெரியல.

இன்னும் பல கோயில்கள்ல நவக்கிரகத்த சுத்தி இருக்கற செவுத்துல எல்லாம் பால் கணக்கு, தயிர் கணக்குக்கு கோடு போட்டு வெச்ச மாதிரி, இத்தன சுத்துங்கற கணக்குக்காகக் கறுப்பா கோடு கோடா போட்டுக் கன்னங்கரேல்னு ஆக்கி வெச்சுருப்பாங்க. இனிமே கொழந்தைங்களோ, பெரியவங்களோ யாரும் கோயில் செவுத்துல கன்னபின்னானு கரிக்கோடு போடக் கூடாது. இப்படி செஞ்சா விபரீத பலன்னு சாஸ்திரம் சொல்லி வெச்சுருக்கு!” என்றார் தாத்தா.

அதன் பிறகு அவ்வளவு நேரம், தான் சொன்ன வற்றைச் சுருக்கிக் குறிப்புகளாக இரு நிமிடங்களில் சொல்லி முடித்த தாத்தா, தனது உரையை அந்த மேடையில் நிறைவு செய்தார். பலமாகக் கை தட்டினார்கள் மக்கள். தாத்தா மேடையிலிருந்து கீழே இறங்குவதற்குள் பலர் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களின் அன்பு மழையில் நனைந்த தாத்தா, நீண்ட நேரத் தாமதத்துக்குப் பிறகு வீடு திரும்பினார். விடுமுறை முடிந்து, மகள் வீட்டில் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்த தாத்தா ஊர் திரும்பினார்.

மகன்- மருமகள், பேரன்- பேத்தி என நால் வரும், “என்ன... பொண்ணு வீட்டுல டேரா போட்டு முடிச்சாச்சா? நீங்க எப்ப வருவீங்கனு நூறு தடவை, கோயில்காரங்க கேட்டுட்டாங்க... ஒருவேளை பொண்ணு வீட்லியே செட்டில் ஆயிட்டீங்களோனு

நெனச்சோம்!” எனக் கிண்டலடித்தார்கள்.

“எல்லாம் தெரியும்டா எனக்கு. வரும்போதே, கோயில்ல பொறுப்பா இருக்கறவங்க வழியில பாத்துப்

பேசிட்டாங்க” என்றபடி தானும் கிண்டலில் கலந்து கொண்டார் தாத்தா.

அன்று கோயில் திருவிழாவின் முக்கிய நாள். தாத்தா அங்கே சிறப்புரையாகப் பேச வேண்டிய நாளும் அன்றுதான். மாவிலைத் தோரணங்களும் இடையிடையே வண்ணமயமான சீரியல் பல்புகளும் மேடையை அலங்கரித்தன. சுறுசுறுப் பாக மேடையேறினார் தாத்தா.

“அனைவருக்கும் வாழ்த்துகள். ‘நாமும் நமது ஆலயங்களும்’ எனும் தலைப்பில், உங்களுடன் சில கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளப் போகிறேன். நம்ம நாட்டுல கோயில்கள் ஏராளம். அந்தக் கோயில்களுக்குப் பலப்பல மகான்களும் ஸித்த புருஷர்களும் போய், அந்தந்த சாமி மேல பாட்டெல்லாமும் பாடி வெச்சுருக்காங்க. எந்தவொரு கோயிலும், சாமி சக்திக்குக் கொறச்சல் இல்லாம நெறஞ்சுதான் இருக்கு. நாமும் பல பேரு, அந்தக் கோயில்களுக்கு எல்லாம் போறோம். ஆனா, எல்லாருக்கும் சாமியோட அருள் கெடைக்க மாட்டேங்குதே. அது ஏன்?” என்றார் தாத்தா. யாரும் பதில் சொல்லவில்லை.

“சரி! நான் உங்களுக்குப் புரியும்படியாவே உதாரணம் சொல்றேன். எங்க வீட்டு டி.வி.யில கேபிள் டி.வி. தெரிய மாட்டேங்குது. ஏன்?” - தாத்தா.

“கேபிள் கனெக்ஷன் குடுத்துருக்க மாட்டீங்க!” என ‘பளிச்’சென்று பதில் வந்தது கூட்டத்தில் இருந்து.

தாத்தாவுக்கு குஷி பிறந்து விட்டது. “வாங்க... வாங்க. என்னோட வழிலயே வரீங்க. கேபிள் கனெக்ஷன் குடுத்திருந்தாலும் நமக்கு வேண்டிய சேனல்களை ட்யூன் பண்ணி இருக்கணும். ட்யூன் பண்ணி இருந்தாலும், அந்த அந்த சேனலுக்கு உண்டான பட்டனைத் தட்டினாத்தான, அந்த அந்த சேனல் தெரியுது” என்றார்.

முன் வரிசையில் இருந்தவர்கள், ‘ஆமாம்’ எனத் தலையாட்டினார்கள்.



தாத்தா தொடர்ந்தார். “அந்த மாதிரிதான் கோயில்லயும். கோயில்ல எந்தெந்தப் பகுதி எதை எதைச் சொல்லுதுனு மொதல்ல நம்ம மனசுல ட்யூன் பண்ணிக்கணும். அந்த அந்த சந்நிதில நிக்கும்போது, அததுக்கு உண்டான பட்டனத் தட்டி விட்றா மாதிரி என்ன செய்யணுமோ அதைச் செய்யணும்.

நம்ம உடம்பும் கோயிலும் ஒண்ணு. உள்ளம் பெருங் கோயில்; ஊனுடம்பு ஆலயம். வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்; தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்; கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கேனு திருமந்திரத்துல திருமூலர் சொல்றாரு. விரிவா புரியும்படியா சொல்றேன்.

ஸ்வாமி இருக்கற எடம், மூலஸ்தானம் - கர்ப்ப கிருகம், கருவறைனு சொல்றோமே - அது தலை. சிரப் பத்ம ஸ்தானம்னு சொல்லுவாங்க. மூல ஸ்தானத்துக்கு அடுத்தபடியா இருக்கற எடத்த, அந்தராளம்னு சொல்லுவாங்க. அது முகம். அதுக்கு அடுத்ததா இருக்கறது, அர்த்த மண்டபம்னு பேரு. அது கழுத்து. அதுக்கும் அடுத்ததா இருக்கறத, மகா மண்டபம்னு சொல்லுவாங்க. இது மார்பும் தோளும் சேர்ந்த எடம். இவ்வளவு நேரமா பார்த்த எல்லாத்தயும் சுத்தி இருக்கறது, பிரகாரம். அது தொடை, முழந்தாள்கள். கோபுரம்னு சொல்றோமே, அது பாதம். இந்த மாதிரி, கோயில்ங்கறது நம்ம உடம்ப

ஒட்டியே அமைஞ்சு இருக்கும்.

அடுத்ததா துவஜ ஸ்தம்பத்தப் பார்க்கலாம். கொடி மரம்னு சொல்றோமே அதுதான். இது வீணை தண்டு போல (முதுகுத் தண்டில்) மூலாதாரத்துல ஆரம்பிச்சு மேல்நோக்கிப் போகிற பிரம்ம நாடி. இடை கலை- பிங்களைங்கற பிராணவாயுவ நடு நாடியில நிறுத்தி, கொஞ்சங்கூட அசையாமல் தியானித்தால், பிராண வாயு நிற்கும்; பிராணவாயு நின்றால், மனம் நிற்கும்; மனம் நின்றால், ஐம்பொறிகளும் நிற்கும்; அவை அடங்கினால், விஷயங்கள் அடங்கும்; அவை அடங்கினால் பேதாபேதங்கள் இருக்காது; ஆத்மாவை உணர்ந்து அனுபவிப்போம்.

அதன் பின் பிரம்மானந்தம் தோன்றும். இதை நமக்குப் புரிய வெக்கணும்ங்கறதுக்காகத்தான் கோயில்ல கொடி மரத்த, மூலஸ்தானத்துக்கு நேரா நிறுத்தி வெச்சு இருப்பாங்க...” என்ற தாத்தா, “நான் சொல்ற ஒவ்வொரு விஷயத்தையும் உங்க மனசுல நல்லா பதிய வெச்சுக்கணும்” என்று அடுத்த விஷயத்தை ஆரம்பித்தார்.

பட்டாபி

கோயிலில் எப்படி வழிபட வேண்டும்?

“விழாவுல, கோயில்ல கொடி ஏத்துவோம். அப்பறமா சாமி வெளியில வந்து தரிசனம் குடுப்பார்னு பெரியவங்க சொல்லுவாங்க. ஏங்க! கொடி ஏத்தறாங்களே... கோயில்ல, சாமி எந்தக் கட்சின்னு கேலி பண்ணிப் பிரயோஜனம் இல்லை. இதயெல் லாம் எதுக்காக செஞ்சு வெச்சாங்கனு தெரிஞ்சுக்கணும்.

சரி... தீபங்களப் பாக்கலாம். கோயில்ல சாமிக்கு, சிறிசும் பெருசுமா பல வகையா தீபங்களக் காமிப்பாங்க. ஜோதி மயமான சாமிக்கு இது எதுக்கு? கொஞ்சம் ஆழமா பாக்க வேண்டிய விஷயம் இது.

நம்ம உடம்புல மூலாதாரம்னு சொல்ற இடத்துல கீழ் நோக்கியபடி தூங்கிய நிலையில இருக்கற குண்டலினிங்கற பாம்பை, மூலக்கனலை மூட்டி எழுப்பணும். ‘மூலாதாரத்தின் மூண்டெழு கனலை’னு ஔவையார் சொல்றார். அப்படி எழும்பின குண்டலினிங்கற பாம்பு - மூலாதாரம், ஸ்வாதிஷ் டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞைங்கற ஆறு சக்கரங்களையும் தாண்டிப் போய் சந்திரனோட அமிர்த தாரைகள் (ஊற்று) பொங்கி வழியும். அதை அனுபவசாலிகளான யோகிகள் அனுபவிப்பார்கள். அவர் களின் கண்களுக்கு மின்மினி, மின்னல், தீபம், பந்தம், சூரியன், சந்திரன் ஆகியவற்றின் பிரகாசங்களைப் போல, அருள் ஒளி (வெளிச்சம்) உதிக்கும். அந்த மகான்களோட அனுபவத்தை நாமும் அடையணும்னு நமக்குப் புரிய வெக்கறதுக்காகத்தான் தீபங்களக் காமிக்கறாங்க.

இப்பிடி பாரத நாட்டுக்கே, அதுவும் குறிப்பா தமிழ் நாட்டுக்கே பெருமை சேக்கற கலைச் செல்வங்களான நம்ம கோயில்களப் பத்தியும், அதுங்களோட அடிப்படை உண்மை என்னங்கறதப் பத்தியும் நம் முன்னோர்களும், மகான்களும் சொல்லிச் சொல்லியே, பேப்பர் - பேனா - அச்சு இதெல்லாம் இல்லாத காலத்துல இருந்து நம்ம காலம் வரைக்கும் கொண்டாந்து சேர்த்துட்டாங்க. இத எல்லாம் வருங்காலப் புள்ளைங்களுக்கு எளிமையாக் கொண்டு சேக்கறது நம்ம பொறுப்பு!” என்ற

தாத்தா சற்று நிறுத்தினார்.

இதுதான் சந்தர்ப்பம் என்று, கையில் இறுக்கிப் பிடித்த பையுடன், கூட்டத்தில் இருந்து ஒருவர் எழுந்து, "ஏங்க! பெரியவரே! எங்க ஊர்ல சாமி, வடக்க பாத்தபடி இருக்கு. அதுக்கு எதுக்கால, தெக்க பாத்தபடி விழுந்து கும்பிட்டா தப்புன்னு சொல்றாங்க. எப்பிடி எப்பிடி எந்தத் தெசயப் பாத்துக் கும்புடணும்ங்கறதக் கொஞ்சம் சொல்லுங்க! நாம் போயி எங்க ஊர்ல மக்களாண்ட சொல்லுவேன்ல" எனக் கேட்டார்.

"அடுத்தது அதத்தான் சொல்லப் போறேன். சாமி எந்தப் பக்கம் பார்த்து இருந்தா, நாம எப்படி வணங்கணும்; எந்தப் பக்கம் நின்னு தரிசனம் பண்ணனும், கோயிலுக்குள்ள எந்த எந்த சந்நிதியில எப்பிடி எப்பிடி வழிபாடு செய்யணும்ங்கறதப் பாக்கலாம். இத எல்லாரும் நல்லா மனசுல வாங்கிக்கிட்டு, அப்படியே உங்க புள்ளைங்களுக்குச் சொல்லிக் குடுத்து அவங்களையும் பழக்கப்படுத்துங்க!" என்ற தாத்தா, நிதான மாகச் சொல்லத் தொடங்கினார்.

"கோயிலுக்கு வரும்போது, குளிச்சுட்டு நல்லா தூய்மையான உடைகளைப் போட்டுக்கிட்டு, அவங்க அவங்க சம்பிர தாயப்படி நெத்தியில இட்டுக்கிட்டு வரணும். கோபுரத்தைப் பாத்ததும் அதையே சாமியா நெனச்சு, ரெண்டு கையயும் தலைக்கு மேல கூப்பி வணங்கணும். பெண்கள் தலைக்கு மேல கை கூப்பி வணங்கக் கூடாது. அவங்கள்லாம் நெஞ்சு வரைக்கும் கை கூப்பி வணங்கணும். அப்பறமா, கோயிலுக்குள்ள நுழையணும்.

கோயிலுக்குள்ள நுழைஞ்சிட்டோம். சாமி கிழக்க பாத்து இருக்கற சந்நிதின்னு வெச்சுப் போம். பலிபீடத்தோட அக்கினி மூலைக்கு (தென் கிழக்கு) எதிரா, அதும் பக்கத்துல தலைய வெச்சு வடக்குப் பக்கம் பாத்து, ஆம்பளங்க அஷ்டாங்க நமஸ்காரம் செய்யணும். தலை, நெத்தி, ரெண்டு கை, ரெண்டு முழங்கால், ரெண்டு காது- இந்த ஆறும் தரையில படும்படியா செய்யறது அஷ்டாங்க நமஸ்காரம்.

அஷ்டாங்க நமஸ்காரம் செய்யும்போது நம்ம ரெண்டு கையும் வடக்க நீட்டி வணங்கணும். அதுக்கு அப்பறமா, மொதல்ல வலக் கை, அப்பறமா இடக் கையை அப்பிடியே பின்னால கொண்டு வரணும். அதுக்கு அப்பறமா மொதல்ல வலக் காது, பிறகு இடக் காதுங்கற முறைப்படி காதுங்க தரையில படும்படியா வணங்கணும்.

ஆனா, லேடீஸ் இப்பிடி அஷ்டாங்க நமஸ்காரம், அதாவது எட்டு அங்கங்களும் பூமியில படும்படியா நமஸ்காரம் செய்யக் கூடாது. அவங்களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம்தான். பஞ்சாங்க நமஸ்காரம்னு சொன்ன உடனே, சரி! பஞ்சாங்கத்தக் கையில வெச்சுக்கிட்டு நமஸ்காரம் பண்ணணும்னு நெனக்கக் கூடாது. தலை, ரெண்டு கை, ரெண்டு முழங்காலுங்க... இந்த அஞ்சு அங்கங்களும் தரையில படும்படியா செய்யறதுதான் பஞ்சாங்க நமஸ்காரம்.

கொடிமரத்தைத் தாண்டி கோயிலுக்குள்ள போயாச்சுன்னா, எந்த சந்நிதிலியும் யாரும் கீழ விழுந்து நமஸ்காரம் செய்யக் கூடாது. இப்படி கொடி மரத்துக்கிட்ட முடிச்சதுக்கு அப்பறமா, நந்திபகவான் கிட்ட நின்னு அவர் அனுமதிய மானசீகமாக வாங்கிக்கிட்டு உள்ள போவணும். மொதல்ல புள்ளயாரை வணங்கணும். தலையில குட்டிக்கிட்டுத் தோப்புக்கரணம் போடணும். பெண்கள் தலையில குட்டிக்கலாமே தவிர, தோப்புக்கரணம் போடக் கூடாது. பிள்ளயார் முன்னால, லேடீஸ்ங்களுக்குத் தோப்புக்கரணம் கெடையாது.

இப்ப நாம கிழக்க பாத்த சந்நிதியப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கோம். சாமிக்கு வலக் கைப் பக்கமா நின்னு, வடக்கு திசையப் பாத்தபடி கும்புடணும். ஆண்கள் கையைத் தலைக்கு மேல தூக்கியும், பெண்கள் நெஞ்சோடு நெஞ்சா கை கூப்பி வெச்சும் கும்புடணும்.

இனிமே தெற்கு பாத்து இருக்கற சாமி சந்நிதியில எப்படிப் பண்ணணும்னு பாக்கலாம். பலிபீடத்துகிட்ட, தென்மேற்கு திசை பக்கத்துல ஏற்கெனவே சொன்னபடி தலை வெச்சு (கால்கள் தெற்குப் பக்கமாக இருக்கும்படி) அஷ்டாங்க நமஸ்காரம் செய்யணும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம்தான் பண்ணணும். பிள்ளயார் வழிபாடு ஏற்கெனவே சொன்ன மாதிரிதான். சாமி சந்நிதிக்குப் போன உடனே சாமிக்கு

வலக் கைப் பக்கமா நின்னு, அதாவது மேற்குத் திசையில நாம நின்னு கிழக்க பாத்தபடி கும்புடணும்.

அடுத்தது, மேற்கே பாத்து இருக்கற சாமி சந்நிதியில என்ன செய்யணும்னு சொல்றேன். பலிபீடத்து கிட்ட தென்மேற்கு திசை பக்கத்துல முன்னாடியே பாத்த மாதிரி ஆண்களும், பெண்களும் தலை வடக்கேயும், காலு தெற்குப் பக்கமாகவும் இருக்கற மாதிரி நமஸ்காரம் பண்ணணும். பிள்ளயார் வழிபாடு வழக்கப்படி. உள்ள சாமி சந்நிதியில சாமிக்கு இடப் பக்கமா நின்னு, அதாவது நாம தெற்கே நின்னு வடக்க பாத்தபடி கும்புடணும்.

இப்ப வடக்கே பாத்தா மாதிரி இருக்கற சந்நிதியில எப்படி சாமி தரிசனம் பண்ணணும்னு பார்ப்போம். பலிபீடத்தோட வாயு மூலையில அதாவது வடமேற்கு திசையில தலைய வெச்சு, கால மேற்குப் பக்கமா நீட்டி ஏற்கெனவே சொன்ன மாதிரி நமஸ்காரம் செய்யணும். பிள்ளயாருக்கு எப்பிடி வழிபாடு பண்ணணும்னு உங்களுக்கே தெரியும். அத முடிச்சுட்டு உள்ள சாமி சந்நிதிக்குப் போன உடனே சாமிக்கு இடக் கைப் பக்கமா, மேற்கே நின்னு கிழக்கே பாத்தபடி தரிசனம் பண்ணணும்.

மூலவரையும், சுத்தி உள்ள தெய்வங்களயும் தரிசனம் பண்ணிட்டு அப்பறமா, மூலஸ்தான அம்பாள தரிசனம் செய்யணும். எந்த எந்த சாமிய தரிசனம் செய்யறோமோ, அந்த அந்த சாமிக்கு உண்டான ஸ்தோத்திரங்களத் தெரிஞ்சா சொல்லலாம். அதுக்குனு பாட்டுப் பாடறோம் பேர் வழின்னு கத்தக் கூடாது. அடுத்தவங்களுக்கு இடைஞ்சல் இல்லாமச் சொல்லணும்.

பட்டாபி

ஏன் நடக்கிறது தேர்த் திருவிழா?

“அடுத்ததா, பிராகார வலம் வரும்போது, கோயில் கோபுரத்து நிழலோ அல்லது கொடிமரத்தோட நிழலோ இருந்தா அதை மிதிக்காம வலம் வரணும். ஒருவேளை நிழல் நீளமா இருந்து வலம் வர முடியலேன்னா, அந்தப் பிராகாரத்தை விட்டுட்டு அடுத்ததை வலம் வரலாம்.

ஆனா, சாமி உற்சவம் நடக்குது. பின்னாலியே போறோம். அந்த மாதிரி சந்தர்ப்பங்கள்ல கோபுர நிழலோ, கொடிமரத்து நிழலோ இருந்தாலும் சரி; நாம கவனிக்க வேண்டாம். நாம பாட்டுக்கு சாமியோட சேர்ந்து வலம் வரலாம். பாதகமில்ல.

எந்தக் கோயிலா இருந்தாலும் சரி, சாமிக்கும் அவருக்கு முன்னால இருக்குற வாகனத்துக்கும் நடுவுல நாம போகக் கூடாது.

கோயிலுக்குள்ள ஒக்காந்து சாப்டறது... அங்கியே தூக்கம் போட்றது... நாற்காலியப் போட்டுட்டு ஹாய்யா ஒக்கார்றது... நிர்மால்யம்னு சொல்றோமே அதாவது சாமிக்கு சாத்தின பூக்களைத் தாண்டுறது... ஒவ்வொரு விக்கிரகத்தயும் தொட்டு முத்தம் குடுக்கறது... கண்ணுல ஒத்திக்கறது... ஏதாச்சும் பிரசாதம் குடுத்தா கோயில்லியே தின்னுட்டு, அங்க இருக்குற தூண்லியே கையத் தொடைக்கறது.. இதெல்லாம் மகா பாவம். கோயில்ல வலம் வரும்போது 3, 5, 7, 9-னு கணக்கு வெச்சு, அவங்கவங்க சௌகரியப்படி சுத்தலாம். ஒரு தடவ, ரெண்டு தடவ சுத்தக் கூடாது!” என்றார் தாத்தா.

“தேரு ஏன் ஊர்வலமா வரணும்?” எனக் கேட்டார் ஒருவர்.

கேள்வி கேட்டவரை ஒரு சில விநாடிகள் உற்றுப் பார்த்த தாத்தா, புருவங்களைச் சுருக்கியபடி ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

“சரி! இவர் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்றேன். அதுக்கு முன்னால ஒரு விஷயம். இந்த மாதிரி உங்களுக்கு இருக்கற சந்தேகங்களை எழுதி இங்கே மேடைக்கு அனுப்புங்க! தெரிஞ்சா பதில்

சொல்றேன்; தெரியாட்டி, வெவரம் தெரிஞ்ச பெரியவங்ககிட்ட கேட்டு அப்பறமா பதில் சொல்றேன்.

அதுக்குனு வம்பு புடிச்ச கேள்விங்கள, வீம்பு புடிச்சு கேக்கக் கூடாது. அப்படிக் கேட்டீங்கன்னா, அந்தக் கேள்விங்கள எல்லாம் ஒதுக்கிட்டு, முக்கியமான கேள்விங்கள மட்டும், இந்த மேடையில இருக்கிற நிர்வாகி எங்கிட்ட குடுப்பார். வாங்க! இப்ப தேர்

ஊர்வலத்தைப் பத்தி பாக்கலாம். தேர்த் திருவிழா, தேர் ஊர்வலம் இதெல்லாம் ஒரு முக்கிய நோக்கத்துக்காக- காரணத்துக்காக உண்டானது. தேரைக் கௌப்பணும்னா வடம் புடிக்கறோம்ல! அந்தத் தேர் வடத்த யார் புடிக்கணும்?" என்றார் தாத்தா.

கூட்டத்தில் இருந்து பல விதமான பதில்கள் கூச்சலாக வெளிப்பட்டன. தெளிவாக ஒரு பதிலும் புரியவில்லை. ஆனால், அதைப் புரிந்து கொண்ட தாத்தா, "இவங்க இவங்க புடிக்கலாம்... இவங்க இவங்க புடிக்கக் கூடாதுனு சொல்றது தப்பு. இனிமேலயாவது அந்த எண்ணத்தை விடுங்க! ஊர் கூடித் தேர் இழுக்கறதுனு கிராமத்துல பழமொழியே உண்டு. அது மட்டுமல்ல. இந்த மாதிரி திருவிழாவுல ஒரே கும்பலா இருக்கும். அப்ப நம்ம புத்தி, 'சே! என்ன கும்பல்! எவன் எவனெல்லாம் மேல பட்டானோ? வீட்டுக்குப் போன உடனே குளிக்கணும்!' அப்படினு நெனைக்கும். அந்த நெனைப்பே வரப்படாது.

ஒரு அடியார் இப்படித்தான் ஒரு விழாவுல கலந்துக்கிட்டு, தொண்டு எல்லாம் செஞ்சிட்டு வீட்டுக்குப் போனார். போன உடனே குளிக்கணும்னு நெனச்சார். ஆனா, அசதியில தூங்கிட்டார்.

அதுக்காகவே காத்திருந்தா மாதிரி கனவுல சிவபெருமான் வந்தார். 'இங்கே இருக்கற எல்லாருமே நம் வடிவம்'னு சொல்லிக் காட்டினார். அதே மாதிரி திருவிழாவுக்கு வந்துருந்தவங்க எல்லாம் சிவபெருமானாகவே தெரிஞ்சாங்க. கனவு கலைஞ்சுது. அடியாருக்கு உண்மை புரிஞ்சு தன் எண்ணத்த மாத்திக்கிட்டார். இது நம்ம இதிகாசங்களும், புராணங்களும் சொன்னது. இந்தத் தகவல் திருவாரூர் தல புராணத்திலேயும், பெரிய புராணத்திலேயும் இருக்குது.

அதுனால இந்த மாதிரி தேர் திருவிழா எல்லாம் நாம ஒத்துமையா இருக்கணும்ங்கறத அனுபவத்துல கொண்டு வரணும்ங்கற எண்ணத்துல நம்ம பாட்டன்- பூட்டன்களால ஏற்பாடு பண்ணி நடந்துட்டு இருந்துச்சு.

இதக் கேக்கறவங்க- படிக்கறவங்க யாரும் இன்னியில இருந்து, ஊர்த் திருவிழா பண்றேன் பேர்வழினு சாமி பேரைச் சொல்லி, பேதம் பார்த்து சண்டை போட்டு, மண்டைய ஒடச்சுக்கக் கூடாது. தயவுசெஞ்சு சாமி பேரச் சொல்லி சண்டை போடாதீங்க!" என்றார் தாத்தா. அப்போது அவர் குரல் கம்மிப் போய், தழுதழுத்திருந்தது.

ஒரு சில நொடிகள்தான். முகத்தில் மலர்ச்சியையும், சிரிப்பையும் காட்டியபடி மறுபடியும் பேசத் தொடங்கினார் தாத்தா.

"தேர், திருவிழா இதைப் பத்தி வாரியார் சாமி ஒண்ணு சொல்வாரு. அவர் சொன்னத அப்படியே சொல்றேன். தேர், திருவிழானு நாம கொண்டாடறப்ப அங்க ஏராளமான கடைகள்லாம் மொளைக்கும். ரெண்டு, மூணு நாளைக்கு முன்னமே, வியாபாரிங்க கூடிடுவாங்க. பூ விக்கிறவங்க, பலூன் விக்கிறவங்க, மேளக்காரங்க, மிட்டாய்- பழம்னு விக்கிறவங்க- பந்தல் போடுறவங்க, இப்படிப் பல தரப்பட்ட தொழிலாளிங்களுக்கும் பொழப்பு கிடைக்கும்.

ஒரு ஊர்ல தேர்த் திருவிழா முடிஞ்ச உடனே, அடுத்த திருவிழா எந்த ஊர்லனு பாத்துப் போயிடுவாங்க. சிறு தொழில்கள் எல்லாம் சிதையாம நல்லா வளந்துச்சு- அப்பிடினு வாரியார் சாமி வெவரமா சொல்வாரு. தேர்த் திருவிழா இப்படிப் பல கோணங்கள்ல நம்ம வாழ வைக்குது" என்று தாத்தா சொல்லும்போதே, பொது மக்களின் கேள்விகள் அடங்கிய தாள்களைக் கொண்டு வந்து மேஜையில் வைத்தார் விழா நிர்வாகி.

மேலாக இருந்ததை எடுத்துப் பார்த்த தாத்தா, "புதுமணத் தம்பதிகளை மறுவீட்டுக்கு அழைத்தல் என்று ஒரு நிகழ்ச்சி செய்கிறோமே; அதன் காரணம் என்னன்னு ஒருத்தர் கேட்டுருக்காரு. பிரமாதம்! பிரமாதம்! நம்ம கலாசாரம், பழக்க வழக்கங்களை பத்தித் தெரிஞ்சுக்கணுங்கற ஆர்வம் இப்ப அதிகமாவே இருக்கு. மனசாரப் பாராட்டணும்." என்றவர் தொடர்ந்து மறுவீடு அழைக்கும் வைபவத்தைப் பற்றி கூட்டத்தாரிடம் விளக்க ஆரம்பித்தார்.

பட்டாபி

கோயில் என்ன டைனிங் ஹாலா?

கல்யாணம் ஆன புதுசுல மறுவீட்டுக்கு அழைக்கறதுனு ஒண்ணு செய்வாங்க. அது பொண்ணு வீட்டுல நடக்கும். மாப்பிள்ளையும் பொண்ணும் அங்க கொஞ்ச நாள் இருப்பாங்க. பொண்ணுக்கு அது பொறந்த வீடாச்சே! பழக்கப்பட்ட இடம். எந்தெந்தப் பொருள், எங்கெங்கே இருக்குனு தெரியும். கணவனுக்குச் சோறு பொங்கிப் போடுவா மனைவி. கணவனோட கோப- தாபம், குணம், பழக்க-வழக்கம், அவனுக்கு எது பிடிக்கும்- எது பிடிக்காதுங்கறது எல்லாம் அப்பவே அவளுக்குப் பிடிபட்டுடும். அவளோட பழக்க-வழக்கமும், கணவனுக்குப் பிடிபடும். அதுக்கு அப்பறமா பொண்ணு புகுந்த வீட்டுக்கு வருவா. ஏற்கெனவே பழக்க வழக்கங்களப் புரிஞ்சுக்கிட்டதால, வாழ்க்கை வண்டி பிரச்னை இல்லாம ஓடும்!" என்ற தாத்தா மேஜையில் இருந்த பேப்பர்களை எடுத்து அடுத்தடுத்த கேள்விகளை வாசித்தார். அவர் முகத் தில் புன்முறுவல்!

"கேள்விங்க எல்லாம் சூப்பர்! வரிசையா பதில் சொல்றேன்..." என்று தாத்தா சொல்லும்போதே, யாரோ தேங்காய் மூடியைத் தரையில் தட்டும் சத்தம் கேட்டது. தாத்தாவின் கவனமும், கண்களும் அந்த திசை நோக்கிச் சென்றன.

"தயவுசெஞ்சு இப்படிப் பண்ணாதீங்க. கோயில் பிராகாரத்துலியோ... கோயில் தூணுலியோ தேங்கா மூடிய வெச்சு 'நச்சுநச்சு'னு அடிச்சு ஒடைச்சு தேங்காயத் தின்னுட்டு, கொட்டாங்கச்சியை தூள் தூளா அங்கேயே போட்டுட்டு, நமக்கு என்னன்னு போயிடறோம். பக்தியோட பிராகாரத்த சுத்தறவங்க காலுல, ஒடஞ்ச கொட்டாங்கச்சி குத்தி ரத்தக் காயம் ஏற்படும். இத மாதிரியே கோயில்லியே வாழைப்பழத்தத் தின்னுட்டு, தோலைப் போட்டுட்டுப் போயிடுவாங்க. பின்னால வர்றவன் வழுக்கி விழுவான். கோயில் என்ன, நம்ம வூட்டு டைனிங் ஹாலா, கையேந்தி பவனா? பெரிய பெரிய கோயில்ல எல்லாம், கையோட கொண்டு போன சாப்பாட்டு மூட்டைய அவுத்து, பத்து பதினஞ்சு பேரா உக்காந்து நல்லா சாப்டுட்டு, எச்ச எல அது- இதுனு எல்லாத்தயும் அப்படியே போட்டுட்டு அவங்க பாட்டுல போறத நெனச்சா பயமா இருக்கு.இந்த மாதிரியெல்லாம் செஞ்சா, அப்பறம் தினமும் பவித்ரோத்ஸவம் (கோயில் வழிபாடுகளில் நம்மை அறியாமல் ஏற்படும் தவறுகளை நிவர்த்திக்கச் செய்யப்படுவது 'பவித்ரோத்ஸவம்') நடத்தினாலும் பிரயோஜனம் இல்ல."

–இவ்வாறு தாத்தா சொன்னவுடன், தேங்காய் தட்டும் சத்தம் 'டக்'கென்று நின்றது. மனத் திருப்தியுடன் தாத்தா தொடர்ந்தார்: "நம்ம வீட்டுக்கு ஒருத்தர் வர்றார். அவருக்கு சாப்பாடு போடறோம். அவர் சாப்பிட்ட எலைய அவர் எடுக்கக் கூடாது. எடுத்தா, நாம அன்னதானம் செஞ்ச புண்ணியம் அவருக்குப் போயிடும்னு சொல்லுவாங்க. ஏன் இப்படி?

நம்ம வீட்டுக்கு வர்ற விருந்தாளிங்க, நம்ம வீட் டுக்குப் புதுசு, வெளி ஆளுங்கதான். அவங்களுக்கு நம்ம வீட்டோட அமைப்பு தெரியாது. சாப்பிட்ட எலையைக் கையில தூக்கிட்டு அத எங்க போடற துன்னு தெரியாம முழிப்பார். அந்த எலையில இருந்து ஏதாவது ஒழுகித் தரையில கோலம் போடும். அவருக்குத் திண்டாட்டமா போயிடும். 'சைய்! சாப்பாடு ஏற்பாடு பண்ணினவன், இந்த எலைய எடுக்க ஒரு ஆளை ஏற்பாடு பண்ணித் தொலைச்சுருக்கக் கூடாதா?'னு நெனைப்பார். இது கூடாதுனுதான், விருந்தாளிங்க சாப்பிட்ட எலையை, அவங்க எடுக்கக் கூடாது. நாம அன்ன தானம் செஞ்ச புண்ணியம் அவங்களுக்குப் போயி டும்னு பெரியவங்க அழகா சொல்லி வெச்சாங்க.

இதே மாதிரி விருந்துனு சொல்லி பல பேரு கூடி ஒண்ணா சாப்பிடும்போது, ஒரு ஆளு பளிச்சுனு சாப்டுட்டு அவசர அவசரமா எழுந்து கை கழுவ ஓடக் கூடாது. அது பந்தியில இருக்கற மத்தவங்கள அவமானப்படுத்தற மாதிரி ஆயிடும்!

சாப்பாட்டுப் பந்தியில பலர் சாப்பிடறோம். நம்ம பக்கத்துல உக்காந்து சாப்பிடறது யாருன்னு நமக்கே தெரியாது. அப்படி இருக்கும்போது, நான் அவன அவமானப்படுத்துறதுலியோ அல்லது அவன் என்னை அவமானப் படுத்துறதுலியோ என்ன அர்த்தம்? அதுவுமில்லாம அவனும் நானும் சொந் தமா பந்தமா? எதிர் காலத்துல ஒருத்தரை ஒருத்தர் பாத்துக் கூடிக் குலாவிக்கப் போறோமா என்ன? இப்பிடி யெல்லாம் நெனச்சு, தேவையில்லாம வாதம் பண்ணக் கூடாது. சாப்பாட்டுப் பந்தியில ஒரு ஆள் மட்டும் சட்டு புட்டுனு சாப்பிட்டு எழுந்தான்னா, மொதல்ல அவனுக்குக் கை கழுவுற எடம் தெரியாது. அடுத்தது, அவன் கையில இருந்து, எச்சில் சோத்துப் பருக்கையோ, சாப்பாட்டுத் துணுக்கோ அடுத்தவன் எலையில விழுந்தா பிரச்னைதான்.

இந்த மாதிரி காரணங்களுக்காகத்தான், பெரியவங்க அப்பிடிச் சொல்லி வெச்சாங்க. இதை புரிஞ்சுக்காம நம்ம இஷ்டத்துக்குக் கன்னா பின்னானு நடந்துக்கிறது அபத்தம். ஒரு விஷயத்தை எதுக்காகச் சொல்லி வெச்சிருக்காங்க, ஏன் பண்ணி வெச்சிருக்காங்கன்னு புரிஞ்சுக்காம இருக்கிறது தப்பு. அதைத் தப்பா புரிஞ்சுட்டு நம்ம இஷ்டத்துக்குக் கன்னாபின்னான்னு செய்றதும் அபத்தம்!" என்ற தாத்தா அதற்கான உதாரணத்தையும் சொன்னார்:

"சில ஊர் கோயில் கோபுரங்கள்லியும் தேரிலயும் கன்னாபின்னான்னு பொம்மைங்க வெச்சுருக்கிறதைப் பார்த்திருக்கலாம். இத தப்புன்னு நாப்பது நாப்பத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னால தெளிவா தீர்மானமே போட்டுருக்காங்க. அப்ப 'ஆகம சில்ப மகாநாடு' நடந்துச்சு. கோயில் கோபுரம்- விமானம்- தேர்கள்ல செஞ்சு வெச்சுருக்கற ஆபாச உருவங்களப் பத்தின விஷயத்தையும் பேசினாங்க. இந்த மாதிரி உருவங்கள் இருக்கணுங்கறதுக்கு எந்த வித ஆதாரமும் கிடையாது. இது தோஷம். கோயில் விமானங்கள்ல சாமி வடிவங்களும், கோபுரங்கள்ல புராணக் காட்சிகளும் இருக்கணும். திருப்பணி செய்யும்போது, இதை மனசுல வெச்சுக்கிட்டு, ஆபாச வடிவங்கள நீக்கிடணும்னு முடிவு பண்ணினாங்க.

‘அப்ப, தேருகள்ல இப்பிடி இருக்குதே!’னு கேள்வி வரலாம். அற்புதமான தத்துவத்த சொல்ல வந்தது, தேரும் அதோட அமைப்பும். நாம போய் அதுல கன்னா பின்னானு செஞ்சு வெச்சா, முன்னோர்களா பொறுப்பு? இனி, தேரு அமைப்பப் பத்தியும், அதுல ஏன் இப்பிடி வந்துச்சுனும் பாக்கலாம்” என்ற தாத்தா அதைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தார்.

பட்டாபி

தேரின் பாகங்கள் சொல்வது என்ன?

"தேரோட அமைப்பைப் பாக்கலாம். அது, நம்ம உடம்பைக் குறிக்குது. தேரு, கோண வட்ட வடிவமா இருக்கும். அது நடுவுல சாமிய வெப்பாங்க. இது கடவுள் நம் இதயத்துல இருக்கறத நெனவு படுத்துது.

தேருக்கு அடியில (உருள்ற) ஆறு சக்கரங்கள், நம்ம உடம்பு போகிற ஆறு விதமான போக்குகளைச் சொல் லுது. பிறப்பு, குழந்தைப் பருவம், விடலைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம், முடிவுனு ஆறு விதமான போக்கு. அதாவது மாறுதல் நம்ம உடம்புக்கு உண்டு. இதையே இன்னும் எளிமையா சொல்றதுனா பொறக்கறது, இருக்கறது, வளர்றது, மாறிட்டே வர்றது, தேஞ்சுட்டே போறது, முடிஞ்சு போறதுனு ஆறு விதமான போக்குகளா சொல்லலாம்.

இதுக்கு மேல பட்டரைனு சொல்ற, மரத்தால செஞ்ச பாகம் இருக்கும். இதற்கு நாலு அடிப்பக்கங்கள் இருக்கும். ஒவ்வொரு பக்கத்துலயும் பஞ்சபூத பொம் மைங்க, முன்னால பாத்த பட்டரையை தோள்ல தாங்கிக்கிட்டு இருக்கற மாதிரி இருக்கும். இந்த அடிப்பக்கங்கள், நம்ம உடம்பு- மண், தண்ணீ, நெருப்பு, காற்றுனு சொல்ற இந்த நான்கு பூதங்களாலேயும் ஆனதுங்கறதுக்கு அடையாளம்.

நாலு பக்கத்துலயும் இருக்கற அஞ்சு அஞ்சு பூதங்களும், 4ஜ்5-னு பெருக்கினா இருபது. இது- நம்ம உடம்புல இருக்கற ரோமம், நரம்பு, தோல், மாமிசம், எலும்பு, சுக்கிலம், ரத்தம், வியர்வை, சிறுநீர், வாய்நீர், உணர்ச்சி, சோம்பல், தூக்கம், தாகம், பசி, தத்தி நடக்கறது, ஓடுவது, உட்காருவது, நடப்பது, படுப்பதுங்கற இந்த இருவதையும் சுட்டிக் காட்டுது.

இதுக்கு மேலதான் கொஞ்சம் முன் னாடி பார்த்தோமே, நாலு பக்கம் உள்ள பட்டரைனு ஒரு பகுதி- அது இருக்குது. அதுல பக்கத்துக்கு அஞ்சா 4ஜ்5 இருவது பட்டைங்க இருக்கும். ஞான இந்திரியம் அஞ்சு, கர்ம இந்திரியம் அஞ்சு, மொத்தம் பத்து. இந்த இந்திரியங்களோட செயல்பாடுகள் பத்து.



ரெண்டையும் சேர்த்தா இருவது வரும். பட்டரையில இருக்கற இருவது பட்டைங் களும் இந்த இருவதைத்தான் குறிக்குது.

இதுவரைக்கும், பட்டரையின் பக்கவாட்டு அமைப்பைப் பார்த்தோம். இனி, இதோட உள் கூட்டு அமைப்பப் பத்தி பாக்கலாம்...

பட்டரைங்கற இந்தப் பகுதி அஞ்சு அடுக்குக ளால ஆனது. இந்த அடுக்குகள் நம்ம உடம்புல இருக்கற அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோன்மய கோசம், விஞ்ஞான மய கோசம், ஆனந்தமய கோசம்னு சொல்ற அஞ்சையும் நெனவு படுத்துது. இந்த அஞ்சு அடுக்குங்கள்லியும் இருக்கற எடத்துல, அதாவது வெளிப்பக்கமா அறுபத்துநாலு சிறு சிறு உருவங்களை செஞ்சு பலகைங்களால மூடியிருப்பாங்க. இந்த அறுபத்து நாலு பொம்மைங்களும், அறுபத்துநாலு கலை- கலை ஞானங்கள அடையாளப்படுத்துதுங்க.

ஆனா, இதப் புரிஞ்சுக்காமத்தான் அறுபத்துநாலு கலைஞானங்களத் தப்பா புரிஞ்சுக்கிட்டு கன்னா பின்னாங்கற பொம்மைங்கள இந்தப் பகுதியில வெச்சு வெளயாடிட்டோம். அறுபத்துநாலு கலைகளோட பொம்மைகளுக்கு பதிலா, அக்கப்போர் பொம் மைங்களா செதுக்கிட்டோம்! சரி... இனி, தேரோட மேல் பகுதிக்குப் போகலாம்.

பட்டரைக்கு மேல, மூணு தட்டுங்க இருக்கும். அதுல கீழ இருக்கற தட்டு, அதாவது அடியில இருக்கற தட்டு எண்கோண வடிவத்துல இருக்கும். அதுக்கு மேல இருக்கற மத்த ரெண்டு தட்டுங்களும் சதுரமா இருக்கும். இதுல எண்கோணத் தட்டு, நம்ம உடம்புல இருக்கற எட்டு விதமான அங்கங்களக் குறிக்குது. அதாவது கால் 2, கை 2, கண் (அல்லது) கன்னங்கள் 2, மார்பு 1, நெத்தி 1 -இந்த எட்டையும் அடையாளப்படுத்துது. இதையே இன்னொரு விதமாகவும் சொல்லுவாங்க. இந்த எண்கோணத் தட்டு, நம்ம உடம்புல இருக்கற முடி, தோலு, எலும்பு, சதை, நரம்பு, ரத்தம், பிராண வாயு, அபான வாயுங்கிற எட்டையும் குறிக்குதுனும் சொல்றது உண்டு.

இதுக்கு மேல இருக்கிற ரெண்டு சதுரமான தட்டுகளில் ஒன்று, உயிர்கள் நாலு விதமான வழியில உண்டாறதப் பத்திச் சொல்லுது. அதாவது கருப்பையிலிருந்து பிறப்பது, முட்டையில இருந்து பிறப்பது, நெலத்துல இருந்து விதை மூலமா பிறப்பது, வேர்வையில இருந்து பேன், அது இதுனு பொறக்குதே அதைப் பற்றிச் சொல்லுது. அடுத்த சதுரமான தட்டு, தெய்விக நெலய நாம அடையறதுக்கான சரியை, கிரியை, யோகம், ஞானம்னு சொல்ற நாலு படிக்கட்டுங்களயும் விளக்குது.

சதுரத் தட்டுகள் ரெண்டு, எண் கோணத் தட்டு ஒண்ணு இந்த மூணும், 'நம்மகிட்ட இருக்கும் ஆணவம், கன்மம், மாயைனு மூணு விதமான கெட்டதுங்கள அடக்கி, ஒடுக்கி நீக்கணும்'னு சொல்லுது.

இந்த மூணுங்கறதுக்கு வாரியார் சாமி இன்னொரு அற்புதமான விளக்கம் சொல்வார். 'ஸ்தூல உடம்பு, சூட்சும உடம்பு, காரண உடம்புனு மூணு உண்டு. இது புரியணும்ங்கறதுக்காக ஒரு உதாரணம். டயர்- ஸ்தூல உடம்பு. அதுக்குள்ளாற இருக்கற ட்யூபு சூட்சும உடம்பு. அந்த ட்யூபுக்குள்ளாற இருக்கற காத்து காரண உடம்பு. இந்த மூணையும் நாம தாண்டிப் போகணும். அதாவது உடம்பு எடுக்கற பிறவிங்கற நெலைமை இல்லாம போவணும்' என்பார்.

இது வரைக்கும் தேர்ல சக்கரங்களுக்கு மேல இருக்கற 'பட்டரை'ங்கற பகுதியோட வெளிப்பக்கத்தையும், உள் பக்கத்தையும் தெளிவா பாத்தோம். இதுக்கு மேல உள்ள பகுதி யப் பத்தி இனி பாக்கலாம்.

பட்டரைக்கு மேல மரத்தால செஞ்ச பதினாறு தூண்கள் இருக்கும். நடுவுல காலியா எடம் விட்டு சுற்றி இந்தத் தூண்களெல்லாம் இருக்கும். இந்தத் தூண்களுக்கு மேல கனமில்லாத மெல்லிசான சட்டங்களால இணைச்சு சேர்க்கப்பட்ட நாலு சதுர அடுக்குகள் வரிசையா ஒண்ணு மேல, ஒண்ணா இருக்கும். மேல உள்ள நாலாவது அடுக்குக்கு மேல ஒரு கலசம் இருக்கும். அது மலர்ந்த தாமரைப்பூ மாதிரி, கடைசியில ஒரு நுனியில போய் முடியும்!

பட்டாபி

கர்ப்பக்கிரக விக்கிரகங்கள்!

ஆகமம் சொல்வது என்ன?



தேரைப் பற்றி விவரித்த தாத்தா, கரும்பலகை ஒன்றைக் கொண்டு வரச் சொல்லி, ஒரு சில கோடுகளால் அதுவரை தான் சொன்னதை, வரைந்து காட்டி விளக்கினார். அதன் பிறகு கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுப் பேச்சைத் தொடர்ந்தார்.

“தேர்ல, ஏற்கெனவே பார்த்தோமே, கீழ இருக்கற முக்கோண மரப் பட்டரை. அது, நமக்குள்ள இருக்கற ஆறு ஆதாரங்கள்ல மொதலாவதா இருக்கற மூலாதார நாடியைக் குறிக்கும். அதுக்கு மேல இருக்கற ரெண்டு சதுரப் பலகைத் தட்டுங்களும் சுவாதிஷ்டானம், மணி பூரகம்ங்கறதுங்களக் குறிக்கும். அதுக்கு மேல சாமியை வெக்கற காலியிடம் இருக்கும். அதச் சுத்தி இருக்கற தூணுங்கள்லாம் அனாகதம்ங்கற நாடி. இன்னும் கொஞ்சம் ‘பளிச்’சுனு சொல்லணும்னா, சாமி இருக்கற எடம் இதயம். அதச் சுத்தியிருக்கற தூண்கள்லாம், இதயத்தைச் சுத்தியிருக்கற நாடி.

இதச் சொல்ற ரண்டு தட்டுப் பார்த்தோமே, அதுக்கு மேல இருக்கற ரண்டு சதுரப் பலகை அடுக்குகளுக்கு நடுவுல காலியா இருக்கிற எடம் விசுத்தி- ஆக்ஞாங்கற நாடிகள். மேல இருக்கற (உச்சியில) கலசம்தான் சகஸ்ராதார நாடி.

இவ்வளவு நேரமா நாம பார்த்ததைத்தான் ‘முக்கோணத்தின் மேல் நான்கு சதுரம் காண வேண் டும்’னு, சித்த புருஷரான சிவவாக்கியர் சொல்றாரு. முக்கோணம்ங்கறது மூலாதார நாடி. அதுக்கு மேல இருக்கற நாலு சதுரங்களும், நாலு வேதங்கள்னு சொல்லப்படுற நம்ம முதுகெலும்பு. மூளைக்குள்ள சதுரமாகவோ வட்டமாகவோ இல்லாம இருக்கறது- இடுப்பு, நடு முதுகு, பின் கழுத்து, பிடரிங்கற பகுதியில எல்லாம் இருக்கற நாடிகள். இதுங்கள எல்லாம் நிமிர்த்தித்தான் கடைசியா சகஸ்ராதார நாடிய நிமிர்த்தணும். மேல இருக்கற கலசம்தான் சகஸ்ராதார நாடியக் குறிக்குது.

சகஸ்ராதார நாடிய மலரச் செஞ்சோம்னு வெச்சுக் குங்க... எல்லாமே ஒண்ணா தோன்றி கடைசியில ஒண்ணுமில்லாம முடியறதத்தான்- கலசம் ஒரு முனையில முடிந்து கடைசியில ஒண்ணுமில்லாத வெட்ட

வெளியில முடியறதைக் குறிக்குது. 'வெட்ட வெளி தன்னை மெய்யென்று இருப்பார்க்கு'னு சித்தர் கள்லாம் சொல்றது இதைத்தான். சிதம்பர ரகசியம், புத்த மதத்துல நிர்வாணம்னு சொல்றதெல்லாம் இதைத்தான். சாமி மகாவிஷ்ணு, கல்கி அவதாரம் எடுத்து உலகத்தை அழிக்கப் போறார்னு சொல்றோமே அதுவும் இதைத்தான். அதாவது ஞானம் உண்டாச்சுனு வெச்சுக்கங்க. உலகம், அதுல உள்ள உருவம்ங்கறது எல்லாம் மறைஞ்சு போய், எல்லாமே ஒரே வெளியாகத் தோணும். எல்லாத்துக்கும் மேல, கலசத்துல ஒரு கொடி கட்டி இருப்பாங்க. அது, 'நாம வைராக்கியத் தோட இருக்கணும்'ங்கறதச் சொல்ல வந்துது. கிட்டத்தட்ட இப்ப நாம தேரைப் பத்தின ஃபைனல் ஸ்டேஜுக்கு வந்துட்டோம்.

தேர்ல நாலு குதிரைங்க கட்டி இருப் பாங்க. பொம்மையாத்தான். இந்தக் குதிரைங்க தேரை இழுத்துட்டுப் போறா மாதிரி பாவனை. அந்தக் குதிரைங்க கடிவாளத்தையெல்லாம், பாகன் மாதிரி முன்னால உட்கார்ந்து இருக்கற ஒரு மனுஷன் கையில பிடிச்சு இருப்பான். அந்த மனுஷன், நாலு குதிரைங்களயும் தப்பான வழியில போகாம நல்ல வழியிலேயே ஓட்டிக்கிட்டுப் போறான்னு பாவனை. அந்த குதிரைகள் மனம், புத்தி, அகங்காரம், சித்தம்னு நாலையும் குறிக்குது. இந்த நாலும் நமக்குள்ள இருக்கற அந்தக்கரணங்கள்.

கடிவாளங்கள், நம்மோட அறிவு. பாகன்ங்கறது, நம்ம மனசாட்சி. மன சாட்சிய வெச்சுக்கிட்டு, அறிவால நம்மளோட அந்தக்கரணங்களை நல்லபடியா, நல்ல வழியில ஓட்டிக்கிட்டுப் போனா, நம்ம உள்ள இருக்கற ஆன்மா வெளிப்படும். இதத் தான், 'தேரு ஊரச் சுத்தி வருது'னு சொல்லுவாங்க.

தேரப் பத்தின தகவல்களைத் தெளிவா பார்த்தோம். ஒரு சில ஊர்ல இருக்கற தேருங்கள்ல கன்னா பின்னானு மட்ட ரகமான பொம்மைங்களச் செதுக்கி வெச்சிருக்காங்க. அதுக்கெல்லாம் ஆதாரம் எதுவும் இல்லைனு பாத்து, எப்படி அதெல்லாம் வந்துச்சுனும் பாத்தோம். சரி, இனிமே அடுத்த கேள்வியைப் பார்க்கலாம்" என்ற தாத்தா அதை வாசித்தார்.

"கேள்வியை வாசிக்கிறேன்... 'நம்ம கோயில்ங்கள்ல சாமி இருக்கற எடம், காத்து வசதியே இல்லாம அவ்வளவா வெளிச்சம் இல்லாம இருக்குது. அங்க பூஜ கீஜனு என்னெல்லாமோ செய்யறாங்க. இதெல்லாம் எதுக்கு? என்ன பலன்? சாமி இருக்கற எடத்துல நாலு வென்டிலேஷன் ஃபேன் வெச்சு, நூறு வாட்ஸ் பல்பை ஒரு நாலு போட்டு 'பளிச்'சுனு வெக்கலாமில்ல?' - அப்படினு ஒரு கேள்வி.

கர்ப்பக்கிருகத்துல நாலு ஃபேனப் போட்டு, ஏழெட்டு லைட்டுங்களப் போட்டு, இன்னும் சொல்லப் போனா ஒரு ஏ.சி-யைப் போட்டு... அப்பிடி இப்பிடினு நம்ம இஷ்டத்துக்கு அமர்க்களம் பண்ணக் கூடாது. கோயிலக் கட்டின நம்ம பாட்டன் பூட்டன் எல்லாம் ஒவ்வொண்ணையும் ஆழ்ந்து சிந்தனை பண்ணி அதுக்கு அப்பறமாத்தான் கட்டி வெச்சுருக்காங்க.

கர்ப்பக்கிரகத்துல இருக்கற விக்கிரகத் தைச் செய்யும் போதுகூட தங்களுக்கு இஷ்டப்பட்ட கல்லுல பண்ண மாட் டாங்க. கரடு முரடா சத்தம் கௌப்புற கல்லுங்கள்ல ஆண் தெய்வங்களையும், இனிமையா ஓசை கௌப்புற கல்லுங்கள்ல பெண் தெய்வங்களையும் செஞ்சாங்க. இந்த மாதிரி சத்தம் எழுப்பாத கல்லுங்கள்ல, மத்த வேலைங்களச் செஞ்சாங்க.

இப்படிச் செய்யுற சாமி விக்கிரகங்களை வெக்கற எடமான கர்ப்பக்கிரகத்தையும், விசேஷ மான முறையில வெச்சாங்க. மூல விக்கிரகத் தோட கை-கால், விரல்கள்னு ஒவ்வொண்ணா அளவு சொல்லி; அந்த விக்கிரகம் இருக்கற கர்ப்பக்கிரகத்தோட நீளம், அகலம், உயரம்... இதெல்லாம் என்ன அளவுல இருக்கணும்னு சொல்லி, ஆகம சாஸ்திர நூல்கள் செஞ்சு வெச்சுருக்காங்க. அந்த ஆகமமெல்லாம் என்ன சொல்லுதோ அப்பிடித்தான் கோயில்ங்கள்ல நடக்குது!

பட்டாபி

செவ்வாய் தோஷக்காரர்கள் கவனத்துக்கு...

“அரசாங்கத்தோட சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வீடு கட்டி- குடிநீர் வசதி, மின் சார வசதி, ரோடு வசதி, தெரு விளக்கு வசதினு வாங்கிக்கிறோமில்லையா! அந்த மாதிரிதான் ஆகம சாஸ்திரங்கள்ங்கறது, ஆண்டவனோட சட்ட திட்டம். அதுங்க சொல்ற படி நாம செஞ்சா, நமக்கு வேண்டியது தாராளமா கிடைக்கும். சந்தேகமே இல்லை! இப்ப வாங்க! இதைக் கொஞ்சம் விஞ்ஞான ரீதியாகவும் பாக்கலாம். ‘ஒரே மாதிரி அதிர்வுறும் காற்று மண்டலம், ஒரு குறிப்பிட்ட அதிர்வு எண் உடைய ஒலிக்கு, பெரும் ஓசையை எழுப்ப வல்லது’ங்கறது விஞ்ஞான உண்மை. (ஓர் உலோகம் ஒரு விநாடிக்கு, எவ்வளவு முறை அதிர்கிறது என்பதைக் குறிப்பது, அதன் அதிர்வு எண்.)

இந்த விஞ்ஞானத்த அனுசரிச்சுத்தான் கர்ப்பக் கிரகம் இருக்கு. ‘ஓம்’னு சொல்றோமே, அந்த ஒலிக்குத் தகுந்த மாதிரி- கர்ப்பக் கிரகமும், அதுல இருக்கற காத்து மண்டலமும் ஒரே மாதிரி அதிர்வு அடையும்படியா கட்டப்பட்டிருக்கு. அப்பிடி அதிர்வு அடையும்போது, கர்ப்பக்கிரகத்துல இருக்கற காத்தோட ஒவ்வொரு அணுவும் பெரிய அளவுல அதிரும்.

கர்ப்பக்கிரகத்துல இருக் கற சாமிக்கு தெனந்தோறும் பல விதப் பொருள்கள அபிஷேகம் பண்றோம். இதனால, கர்ப்பக்கிரகத்துல இருக்கற காத்து மண்டலத்துல எதிர் மின்னோட்டம் அதிகமா ஆகும். இந்த எதிர் மின்னோட்டம், உயிர்களோட வாழ்க்கைக்குத் தேவையானதுனு விஞ்ஞானம் சொல்லுது. இப்படிப்பட்ட எதிர் மின்னோட்டங்களை நாம அடையணும்னா, பீச், மலைப் பகுதிங்க, அருவிக்கரை மாதிரியான இடங்களுக்குப் போகணும்னு சொல்றாங்க விஞ்ஞானிங்க.

நாம எல்லாரும் பீச்சுக்கோ, ஹில் ஸ்டேஷனுக்கோ, அருவிங்க இருக்கற எடத்துக்கோ போக முடியாது. இந்த மூணும் இல்லாத ஊருங்க நெறைய இருக்கு. அப்ப அங்க இருக்கறவங்க எல்லாம் என்ன பண்றது? அதுக்காகத்தான் நம்ம முன்னோருங்க கோயிலக் கட்டி, கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்னு சொன்னாங்க. இது மட்டுமா... கர்ப்பக் கிரகத்துல அபிஷேகம் செய்யறதுனால, அங்க

இருக்கற காத்து மண்டலம் ஈரப் பதமா மாறுது. அந்த ஈரப்பதக் காத்து மண்டலத்துல பிராண வாயு வோட அழுத்தம் அதிகமாவுது. அதனால பிராண வாயுவோட மூலக் கூறுகள் அதிகமா கிடைக்குது. இப்பிடியுள்ள சூழ்நிலை உடம்பு ஆரோக்கியத்தை அதிகமாக்குதுனும் விஞ்ஞானம் சொல்லுது.

கோயிலுக்குப் போற எல்லாரும், இது வரைக்கும் சொன்ன பலன்களை கட்டாயம் அடையணும்கிறதுக்காகத்தான், நம்மகோயில்ங்கள்ல ஆறு கால பூஜைகளை நடத்தறாங்க. இவ்வளவு நேரமும் நாம பார்த்ததையெல்லாம், பல வருஷங்களுக்கு முன்னமேயே குற்றாலம்- பராசக்தி கல்லூரியச் சேர்ந்தவங்க ஆராய்ச்சி பண்ணி நிரூபிச்சிருக்காங்க. நாம செய்யற அபிஷேக-ஆராதனையெல்லாம் அங்க காத்துச் சூழல்ல மாற்றங்களை உண்டாக்கி; ஆரோக்கியமான சுவாசத்தை உண்டாக்குது... ரத்த அழுத்தத்தையும், இதயத் துடிப்பையும் சீராக்குதுனெல்லாம் தெளிவா சொல்லி இருக்காங்க.

இப்ப தெரியுதா... 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'னெல்லாம் ஏன் சொல்லி வெச்சாங்கனு!" என்ற தாத்தா பெருமிதமான ஒரு புன்னகையோடு ஒரு முறை சுற்றிலும் பார்த்தார்.

கூட்டத்தில் இருந்த நடுவயது மனிதர் ஒருவர், "பெரியவரே! இந்த செவ்வா தோஷத்தைப் பத்திக் கேட்டேன். செவ்வா தோஷ ஜாதகத்துக்கு, செவ்வா தோஷ ஜாதகமாத்தான் பாக்கணும்னு சொல்றாங்களே... அது ஏன் அப்பிடினும் கேட்டுருந்தேன். நீங்க இன்னும் அதுக்கு பதிலே சொல்லலீங்களே?" என்றார்.

அந்தக் கேள்வியை அப்படியே வாங்கி, மைக்கில் சொன்னார் தாத்தா: "செவ்வா தோஷ ஜாதகத்துக்கு, செவ்வா தோஷ ஜாதகத்தைத்தான் பொருத்தம் பாக்கணுமாங்கற சந்தேகம் பல பேருக்கு உண்டு.

ஜாதகம், கீதகம்லாம் வுட்டுடுவோம். விஞ்ஞான ரீதியா இதப் பாக்கலாம். இப்ப நான் சொல்லப் போறது, நடந்த கதை. ஒரு டாக்டர்கிட்ட, ஒரு பொண்ணு ரத்தப் பரிசோதனைக்காகப் போயிருந்தாள். பேசிக்கிட்டு இருந்த டாக்டர் அந்தப் பொண்ணுகிட்ட சாதாரணமா கேட்டார். 'ஏம்மா! உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?'

பொண்ணு பதில் சொல்லுச்சு. 'இன்னும் ஆவல சார்! செவ்வா தோஷ ஜாதகம் என்னோடது. அதுனால செவ்வா தோஷமுள்ள மாப்ளயா தேடிக்கிட்டிருக்காங்க.'

அப்பறமா அந்தப் பொண்ணோட ரத்தத்த சோதன பண்ணிப் பாத்தாரு டாக்டர். ஸிபி நெகடிவ்னு ரிசல்ட் கெடச்சுது. ரிசல்ட்டை, பொண்ணுகிட்ட குடுத்து அனுப்பிச்சாரு டாக்டர்.

அப்பறமா அவர் மூளை தீவிரமா வேல செஞ்சுச்சு. இந்தப் பொண்ணு செவ்வா தோஷம்னு சொல்லுது. இதோட ரத்தம் ஸிபி நெகடிவா இருக்குது. இந்த ரெண்டுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோனு அந்த டாக்டர் தீவிரமா யோசனை பண்ண ஆரம்பிச்சாரு.

அதோட முடிவுல, செவ்வா தோஷமுள்ள ஆணும், பெண்ணுமா பல பேரோட ரத்தத்த எடுத்து செக் பண்ணிப் பாத்தாரு. பரிசோதனை ரிசல்ட் ஒரே மாதிரி ஸிபி நெகடிவாத்தான் இருந்துச்சு. அதாவது அந்த டாக்டர் கண்டுபிடிச்சது என்னன்னா, செவ்வா தோஷம் உள்ளவங்கள்ல, தொண்ணூறு சதவிகிதத்துக்கு மேல எல்லாருக்குமே ரத்தம் ஸிபி நெகடிவா இருக்குங்கறதுதான்.

செவ்வா தோஷம் உள்ள பொண்ணுக்கு மாப்ள தேடும்போது செவ்வா தோஷம் உள்ள மாப்ளயா தேடுறாங்களே, அது ஏன்கிற கேள்விக்கு, அந்த டாக்டருக்கு உடனே பதில் தெரிஞ்சு போச்சு. தெரிஞ்ச உடனே, முன்னோர்களோட தீர்க்க தரிசனத்தை நெனச்சுக் குதிக்க ஆரம்பிச்சுட்டாரு.

அவர் என்ன கண்டுபிடிச்சாருங்கறத, இப்ப எளிமையா- விஞ்ஞானமாவே பாக்கலாம். உதாரணமா, கணவன் ரத்தம் ஸிபி பாசிடிவ்னு வெச்சுப்போம். மனைவியோட ரத்தம் ஸிபி நெகடிவா இருந்தாக்க, அவங்களுக்கு பொறக்கற கொழந்தையோட ரத்தம், அப்பாவை அனுசரிச்சு ஸிபி பாசிடிவா இருக்கும். அல்லது அம்மாவோட ரத்தம் மாதிரியே, கொழந்தையோட ரத்தமும் ஸிபி நெகடிவா இருக்கும்.

அம்மா வயத்துல வளர்ற கொழந்தை யோட ரத்தம், அம்மா மாதிரியே அதாவது, அம்மாவை ஒட்டியே, ஸிபி நெகடிவா இருந்து டுச்சுன்னா, ஒரு பிரச்னையும் இல்ல. அத விட்டுட்டு, ஒருவேளை கொழந்தையோட ரத்தம் அப்பாவை அனுசரிச்சு ஸிபி பாசிடிவா இருந்துச்சுன்னு வெச்சுக்கங்க. பிரச்னை அங்கயே ஆரம்பமாயிடும்.

கருவுல உள்ள கொழந்தைக்கு அம்மா வோட ரத்தத்தின் மூலமாத்தான் உணவு போவுது. அப்பிடிப் போவும்போது அம்மா ரத்தமும், கொழந்தையோட ரத்தமும் ஒண்ணாக் கலக்குது. கொழந்தையோட ஸிபி பாசிடிவ் ரத்தம், அம்மாவோட ஸிபி நெகடிவ் ரத்தத்தோட கலக்கும்போது, அம்மாவோட ரத்தத்துல ஆன்ட்டி பாடீஸ்-ங்கற எதிர்ப்பு அணு உண்டாவுது.

இந்த எதிர்ப்பு அணு கொழந்தையோட ரத்தத்துல கலக்கும்போது, அதுக்குப் பெரிய பாதிப்பு உண்டாவுது. சில நேரம் கொழந்தையோட உயிருக்கே ஆபத்து உண்டாகலாம். அப்பாவோட ரத்தமும் ஸிபி நெகடிவா இருந்தா, இந்தப் பிரச்னைங்கள்லாம் வராது!”

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 27

ஆட்டிப் படைக்குதா நவக்கிரகங்கள்?

பட்டாபி

“ஆண்- பெண் ரெண்டு பேரும் செவ்வா தோஷக்காரங்களா இருந்தால், ரெண்டு பேரோட ரத்தமும் ஸிபி நெகடிவா இருக்கற துனால செவ்வா தோஷப் பொண்ணுக்கு, செவ்வா தோஷ மாப்ளயா பார்த்துக் கல்யாணம் பண்ணி வெக்கணும்னு நம்ம பாட்டன் பூட்டன்லாம் சொல்லி இருக்காங்க. சும்மா ஏதோ இஷ்டத்துக்கு வெவரம் புரியாம முட்டாள்தனமா அவங்க சொல்லி வெக்கல.

எல்லாத்துக்கும் மேல, விஞ்ஞான வசதி நல்லா வளர்ந்துருக்கற இந்தக் காலத்துல- குறிப்பா மருத்துவத் துறையில எவ்வளவோ முன்னேற்றம் வந்துருக்கற இந்தக் காலத்துல, செவ்வா தோஷத்த நெனச்சு பயப்பட வேண்டாம். செவ்வா தோஷம் இல்லாதவங்களா பாத்துக் கூடக் கல்யாணம் பண்ண லாம். பொண்ணு கர்ப்பமா இருக்கும்போது, அவ ரத்தத்த ‘செக்’ பண்ணி தடுப்பு ஊசி போட்டுடலாம். கொழந்தைக்கு பாதிப்பு இருக்காது. அதுனால செவ்வா தோஷக்காரங்க பயப்பட வேணாம்!” என்று செவ்வாய் தோஷம் பற்றிக் கூறி முடித்த தாத்தா, அடுத்த கேள்விக்கு பதில் சொல்லத் தொடங்கினார்:

“சூட்சுமமான கேள்விகள்ல இதுவும் ஒண்ணு. ‘நவக்கிரகங்களைப் பத்தி உங்க அபிப்பிராயம் என்ன? கிரகங்கள்ங்கறதே ஜடப் பொருள்தானே? ஜடப் பொருள் போய், ஆறறிவு படைச்ச மனுசன பாதிக்குது; ஆட்டிப் படைக்குதுங்கறது நம்பற மாதிரி இல்லை. இன்ன கஷ்டம்னா, இந்தக் கிரகத்தை பூஜை பண்ணணும்னு சொல்றாங்களே. இது எந்த அளவுக்கு உண்மை?’னு கேட்டுருக்கார்.

இதுல முதல் பாயிண்ட், நவக்கிரகங்களைப் பத்தி அபிப்பிராயம் சொல்ல நாம யார் சார்? மகான்களும், ஞானிங்களும், மேதாவிகளுமா நம்ம முன்னோர்களெல்லாம் அள்ளிக் குடுத்துட்டுப் போயிருக்காங்க. அத்தனையிலேயும் போனது போக... மிச்சம் மீதி இருக்கறதயாவது அடுத்த தலைமுறைக்குக் குடுத்துட்டுப் போகணும். நாம பயணம் பண்றதுக்கு ஏராளமா பாதைங்க இருக்கும். அதுல போறத விட்டுட்டு, நாம ஏன் புதுசா ரோடு போட்டு நொந்து போகணும்? அதுனால நவக்கிரகங்களைப் பத்தி என் அபிப்பிராயம் என்னங்கறத விட, முன்னோர்கள் சொல்லி வெச்சுருக்கறதுல, நான் புரிஞ்சுக்கிட்டத இப்ப எளிமையா சொல்லப் போறேன்.

ஜடப்பொருளா இருக்கற கிரகங்கள் நம்மள எப்படி ஆட்டிப் படைக்குதுனு பாக்கறதுக்கு முன் னோடியா, இப்ப நம்ம

காலத்துல எல்லாரையும் ஆட்டிப் படைக்கற சமாசாரங்கள்ல ஒரு சிலதைப் பாக்கலாம்.

முதல்ல டி.வி.! அடாடாடா... அது என்னமா இன்னிக்கு ஆட்டிப் படைக்குது! கொழந்தைங் கள்ல இருந்து வயசானவங்க வரைக்கும் எல்லா ரும் டி.வி. முன்னால கட்டிப் போட்ட மாதிரிதான இருக்கோம். அது ஜடப்பொருள்தானே. என்னிக் காவது ஒருத்தரே ஒருத்தராவது, இந்த ஜடப் பொருள் எப்படி நம்மளை ஆட்டிப் படைக்குதுனு கேட்டோமா?

அடுத்தது செல்போன். அதுவும் ஜடப்பொருள்தானே! நாம எந்த சந்துல பொந்துல இருந்தாலும் அத வெச்சுப் பளிச்சுனு நம்மப் புடிச்சுப் பேசறாங்களே! இந்த ஜடப் பொருள் நம்மளை ஆட்டிப் படைக்குதே... எப்ப டினு கேட்டோமா? புதுப் புது மாடல் செல்போனை அல்லவா தேடறோம்!

எப்படி டி.வி-யவும், செல் போனையும் கண்டுபுடிச்சு வெளியிட்டாங்களோ, அந்த மாதிரி நம்ம முன்னோர்கள் நவக்கிரகங்களைச் சொல்லி, நவக்கிரகங்களுக்கும் நமக்கும் என்ன தொடர்புனு சொல்லி, என்னென்ன பிரச்னைக்கு, என்னென்ன நவக்கிரக பூஜை பண்ணணும்னு சொல்லி வெச் சிருக்காங்க.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேதுனு நவக்கிரகங்களைச் சொல்றோம். இதுல மொதல்ல இருக்கறது சூரியன். சூரியன் இல்லேன்னா உலகம் இயங்காதுங்கறது விஞ்ஞான ரீதியா எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம். அதே மாதிரிதான் ஆரோக்கியம் இல்லேன்னா எந்த மனுஷனும் இயங்க முடியாது. அதனாலதான் 'ஆரோக்கியம் வேணுமா? சூரியனை பூஜை பண்ணு'னு பெரியவங்க சொன்னாங்க.

சரி... இப்ப, நவக்கிரகங்களுக்கும், நமக்கும் என்ன தொடர்புனு பாக்கலாம். நவக்கிரகங்களும் நம்ம உடம்புல ரெண்டு விதமா இருக்கு. அதுல ஒண்ணு கண்ணுக்குத் தெரியாது; இன்னொண்ணு தெரியும்.

முதல்ல கண்ணுக்குத் தெரியறதப் பாக்கலாம். சூரியன் நம்ம உடம்புக்குள்ள எலும்புல இருக்குறாரு. சந்திரன்- ரத்தம்; செவ்வாய் மற்றும் ராகு- மஜ்ஜை; புதன்- தோல்; வியாழன் மற்றும் கேது- தசை; சுக்கிரன்- இந்திரியம்; சனி- நரம்பு. (இதை வேறு விதமாகவும் சொல்வார்கள்.)

நம்ம உடம்புல எங்கங்க எதெது இருக் குனு பாத்தோமில்ல. இத அனுசரிச்சு, ஏதாவது தீராத வியாதினா ஜோசியர் என்ன சொல்றாரு? உங்களுக்கு இந்தக் கிரகம் சரியில்ல. இதைப் பண்ணுங்க... அதைப் பண்ணுங்கனு சொல்லி வழி காட்டுறாரு.

அடுத்ததா, கண்ணுக்குத் தெரியாம நவக்கிரகங்கள்லாம் நம்ம உடம்புல எப்பிடி எல்லாம் இருந்துக்கிட்டு, ஆட்டிப் படைக்குதுனு பாக்கலாம்.

சூரியன் ஆத்மாவா இருக்குது. சந்திரன்- மனசு; செவ்வாய், ராகு- பலம்; புதன்- வாக்கு; வியாழன், கேது- ஞானம்; சுக்கிரன்- காமம்; சனி- துக்கம்.

ஏற்கெனவே பார்த்தா மாதிரிதான் இதுலயும், ஜோசியர் கிட்டப் போனா, இத அனுசரித்துச் சொல் வார். உதாரணமா பையன் அல்லது பொண்ணுக்கு படிப்பு ஏறலேன்னா, 'இப்பிடி இப்பிடி வியாழ பகவானை பூஜை பண்ணச் சொல்லுங்க! உங்க கொழந்தைக்கு நல்லா படிப்பு வரும்'னு சொல்வார்.

இந்த நவக்கிரகங்கள், நம்ம உறவு முறையில யார் யாரா இருக்குதுனு இப்ப பாக்கலாம்.

திருநாளில் வாழைமரம் ஏன்?

நவக்கிரகங்கள் பற்றிய விளக்கத்தைத் தொடர்ந்தார் தாத்தா: “சூரியன்- அப்பா; சந்திரன்- அம்மா; செவ்வாய், ராகு- கூடப் பொறந்தவங்க; புதன்- தாய்மாமன்; குரு, கேது- குழந்தைகள்; சுக்கிரன்- மனைவி; சனி- மரணம்.

இதுல யாருக்காவது பாதிப்பு அல்லது இதுல இருக்கறவங்க யாராலியாவது நமக்கு பாதிப்புனு வெச்சுக்குங்க... ‘இப்பிடி இப்பிடி செய்ங்க’னு சொல்லி, ஜோசியர் வழி காட்டுவாரு. இது வரைக்கும் நவக் கிரகங்களப் பத்தி எளிமையா புரியணுங்கறதுக்காக, ஓரளவுக்கு உதாரணங்களோட சொன்னேன். புரிஞ்சிருக்கும்னும் நினைக்கிறேன்.”

அடுத்த கேள்விக்குத் தாவினார் தாத்தா: “அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் நஞ்சுனு சொல்வாங்க. அத அனுசரிச்சு அடுத்தக் கேள்வியைக் கேட்டுருக்காங்க. ‘ஏகாதசி அன்னக்கிப் பட்டினியா இருந்து, துவாதசி அன்னக்கி சாப்பாட்டுல அகத்திக் கீரை சேத்துக்கணும்னு சொல்றாங்களே... இது ஏன்?’னு கேக்கறாரு ஒருத்தரு.

‘ஏகாதசி அன்னக்கிப் பட்டினி இருக்கணுமா... அப்படி இருந்தாத்தான், சாமி அனுக்கிரகம் பண்ணுவாரா?’ங்கற எண்ணம் வரும். நம்ம பாட்டன்- பூட்டன் எல்லாம் முட்டாளுங்க இல்ல. நம்ம ஆரோக்கியத்தையும் அமைதியையும் யோசிச்சே எல்லாத்தையும் சொல்லி வெச்சிருக்காங்க.

மொதல்ல ஏகாதசி. இயந்திரங்கள், சைக்கிள், மோட்டார் பைக், காரு இதுங்களையெல்லாம் அப்பப்ப கவனிச்சு ஆயில், கிரீஸ்னு போட்டு வெச்சாதான் ஸ்மூத்தா ஓடும். அதுங்க என்ன தான் இயந்திரமா இருந்தாலும், அப்பப்ப ஓய்வு கொடுக்கணும்.

சில கம்பெனிங்கள்ல ‘மெய்ண்டனென்ஸ் லீவுனு வருஷத்துக்கு சுமார் பதினஞ்சு நாள் லீவு விட்டு, மிஷின்களை க்ளீன் பண்ணி, ஆயில்- க்ரீஸ்லாம் அடிச்சு, பக்காவா சுத்தம் பண்ணுவாங்க. அதனால அந்த மிஷினுங்க வருஷம் முழுவதும் நல்லா ஓடும். நம்ம உடம்பும் கிட்டத்தட்ட அந்த மாதிரிதான். ஆனா, நாம என்ன செய்யறோம்? உடம்பை போட்டுக் கசக்கி உருப்படாம பண்ணிக்கறோம். இது கூடாதுங்கறது முன்னோர்களோட அறிவுரை.

உடம்புக்குள்ள ஏராளமான பாகங்கள் இருக்கு. அதுல முக்கியமானது வயிறு. தலகாணியில பஞ்சு திணிக்கற மாதிரி, வயித்துக்குள்ள கண்டதையும் திணிக்கக் கூடாது. வயிறு அதிகமா வேலை செஞ்சா, பல விதத்துலேயும் பிரச்னைதான். அஜீரணக் கோளாறு, ‘அங்க புடிச்சுக்கிச்சு, இங்க வலிக்குது’னு புலம்புவோம். ஒட்டுமொத்தமா உடம்பே பாழாயிடும். இதுல நாம மாட்டிக்காம இருக்க, உடம்புக்கு ஓய்வு கொடுக்கத்தான் ஏகாதசி விரதத்தை சொல்லி வெச்சிருக்காங்க.

ஆண்டவன் அருளை அடையறதானாலும் அன்றாட வாழ்க்கையில சந்தோஷ-சுகங்களை முழுமையா அனுபவிப்பதானாலும்... அமைதி, நிம்மதி, பொறுமை எல்லாம் வேணும். அதுக்கு தேவை ஆரோக்கியம். அப்படிப்பட்ட ஆரோக்கியத்துக்கு உதவுறது ஏகாதசி விரதம்.

அடுத்து துவாதசி- அகத்திக் கீரை விஷயம். குடல் புண்ணையும் வயித்துல இருக்கற தேவையில்லாத புழுக்களையும் நீக்கக் கூடிய சக்தி அகத்திக் கீரைக்கு உண்டு.

மாசத்துக்கு ரெண்டு தடவை இப்படி ஏகாதசி விரதம் இருக்கும்போது, உடம்புல இருக்கற சத்துப் பொருள் சரி சமமாவறதோட உடம்பும் வெயிட் போடாம இருக்கும். துவாதசி அன்னிக்கி அகத்திக்கீரை சாப்பிடும்போது, அதுல இருக்கற சத்து, வயிற்றுப் புழுக்களை கொன்று வெளியில தள்ளிடும். உடம்பு தெம்பா, ஆரோக்கியமா ஆயிடும். இப்போ புரிஞ்சுதா ஏகாதசி விரதமும், அகத்திக் கீரை மகிமையும்!

அதுக்காக, தெனமும் சாப்பாட்டுல அகத்திக் கீரையை சேக்கக் கூடாது. சேத்தா நம்ம உடம்புல இருக்கற ரத்தம் மொத்தமும் முறிஞ்சுடும்.

இது ரொம்ப சின்ன விஷயம்தான். ஆனா இதையெல் லாம். முறைப்படி செய்யாம போனதாலதான், பெருசு பெருசா பட்டியல் போட்டு, மருத்துவத்துக்கு செலவு செய்ய வேண்டி இருக்கு!" என்ற தாத்தா அடுத்த கேள்வியைக் கையில் எடுத்தார்.

"ஏதாவது விசேஷம்னா நம்ம வீடுகள்ல மாவிலைத் தோரணம், வாழை மரம் எல்லாம் கட்டுவோம்! இதெல்லாம் எதுக்குங்கறது அடுத்த கேள்வி.

பொதுவா பச்சை வாழையும், மாவிலைத் தோரணமும்... அடடா கண்ணுக்கு என்ன குளிர்ச்சி! ஆனா இப்போ அதுங்களுக்கு பதிலா, பிளாஸ்டிக்ல மாவிலைத் தோரணமும் வாழை மரமும் வந்துடுச்சி. கூடவே பொம்பள பொம்மை ஒண்ணு கையைக் கூப்பி, தலைய விரிச்சுப் போட்டு, ஆடிக்கிட்டே நிக்குது... அது நம்மள வரவேற்குதாம். எங்கியோ போயிட்டோம்!

சரி நாம பதிலைப் பார்க்கலாம்... மரம்- செடிங்கள்லாம் கரியமில வாயுவை எடுத்துக்கிட்டு பிராண வாயுவைக் கொடுக்குது. விசேஷம் நடக்குற இடங்கள்ல பலர் கூடுவோம். அப்ப நம்ம உடம்புல இருந்து வியர்வை நாற்றமும் ஆவியும் வெளிப்படும். அங்கே நாம கட்டி வெச்சிருக்கற மாவிலைத் தோரணங்களும், வாழை மரங்களும் துர் நாற்றத்தையும் காத்துல ஆவியாகிப் பரவியிருக்கிற கிருமிங்களையும் அழிச்சுடும். இதுல வாழை மரம் ரொம்ப விசேஷம்.

குறிப்பா வாழைப் பட்டைக்கு விஷத்தை முறிக்கும் தன்மை உண்டு. பாம்பு கடிச்சா, வாழைப் பட்டை சாறு எடுத்து, கடிபட்டவன் வாயில பிழிஞ்சா விஷம் உடனே இறங்கிடும். அப்போ அவனுக்கு பல்லு கிட்டிப் (வாய் திறக்க முடியாமல் பற்கள் நெருங்கிப்) போச்சுன்னா, வாழைப் பட்டையில படுக்க வெக்கலாம். உடனே கிட்டிப்பு விலகிடும். அப்புறம் வாழைப் பட்டைச் சாறை வாயில ஊத்தலாம். கடிபட்டவன் பொழைச்சுக்குவான்.

அது மட்டுமில்லை... வாழையிலை, பூ, காய், பழம், நார், பட்டை, தண்டுனு எல்லாமே நமக்கு உபயோகமாவுது. வாழை இலையில சாப்பிட்டால் ஆரோக்கியம். வாழை நார் பூத்தொடுக்க உதவுது.

பத்துப் பேர் கும்பலா கூடற இடத்துல ஏதானும் இப்படி ஆகிடுச்சுன்னா உதவணும்னு, வாழை மரத்தப் பெருசா ரெண்டைக் கொண்டு வந்து கட்டி வெச்சது - இதுனாலதான்!"

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 29

வடக்கே தலை வெச்சு ஏன் படுக்கக் கூடாது?

பட்டாபி

மேஜையில் இருந்த துண்டுச் சீட்டுகளை எடுத்துப் பார்த்தார் தாத்தா. “கொஞ்சம் கேள்விங்கதான் இருக்குது. பரவாயில்லை. சீக்கிரம் முடிச்சுரலாம்...” என்று அவர் சொல்லும்போதே, நல்ல தோற்றமுடைய ஒருவர் மேடையேறி ஒரு பை நிறையப் பழங்களையும் மற்றும் சில உணவுப் பொருட்களையும் தாத்தாவிடம் கொடுத்து விட்டு மேடையில் இருந்து இறங்கினார்.

சில நிமிடங்கள் பழங்களையும், உணவுப் பொருட்களையும் பார்த்த தாத்தா, பின்பு ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவர் போலப் பேச்சைத் தொடர்ந்தார்:

“இவர் கொடுத்ததைப் பார்க்கும்போது எனக்கு ரெண்டு பெரியவங்க ஞாபகம் வருது. அதுல ஒருத்தர் காஞ்சி மகா ஸ்வாமிகள். அடுத்தவர் கிருபானந்த வாரியார்.

காஞ்சிப் பெரியவரு சிவாஸ்தானம்ங்கற எடத்துக்குப் போகறதுக்கு முன்னால, மடத்துல நடந்தது இந்தச் சம்பவம். நல்ல பதவியில உள்ள ஒருத்தர் தட்டு தட்டா பழங்களோட பெரியவரை தரிசிக்க மடத்துக்கு வந்தார்.

பெரியவருக்கு முன்னால பழத் தட்டுங்கள எல்லாம் ஒண்ணு மாத்தி ஒண்ணு வெச்சுட்டுக் கீழ விழுந்து நமஸ்காரம் பண்ணிட்டு நின்னாரு. பெரியவரு அதுல இருந்து ஒரு பழத்தைக்கூட எடுக்கவோ, தொட்டுப் பார்க்கவோ இல்லை. ‘அந்தப் பழங்களையெல்லாம் எடுத்துண்டு அவனை அப்பிடியே திரும்பிப் போகச் சொல்லு!’னு சொல்லிட்டாரு.

காரணம்? வந்தவர் பெரிய்ய பதவியில உள்ளவர் இல்லையா? என்னமோ ஒரு காரியம் ஆகணுங்கறதுக்காக அவர்கிட்ட வந்த வேற யாரோ ஒருத்தர், அவருக்கு ஏராளமா என்னவெல்லாமோ கொடுத்தார். அப்படி பெரிய பதவிக்காரர் வாங்கிக்கிட்ட பொருட்கள்ல இந்தப் பழங்களும் அடக்கம். அதனாலதான், முறையில்லாம வந்த அந்தப் பழங்களை பெரியவர் ஏத்துக்கல.

இப்ப வாரியார் சொன்னதைப் பார்க்கலாம். ‘சாஸ்திரம் படிச்ச ஒருத்தர், பசி தாங்க முடியாம போய்ட்டு

இருந்தார். வழியில ஒரு எடத்துல சுண்டல் விநியோகம் நடந்துக்கிட்டு இருந்துச்சு. சாஸ்திரம் படிச்சவரும் போய்க் கையை நீட்டினார். அவர் கையில, ஒரு கைக்கு ரெண்டு கையா சுண்டலப் போட்டாங்க. அவசர அவசரமா சாப்பிட்டாரு. விக்கல் வந்துருச்சு.

சுண்டல் விநியோகம் பண்ணுனவர் ஒரு சொம்புத் தண்ணியக் கொண்டு வந்து, 'விக்குது பாருங்க! இந்தாங்க தண்ணி... குடிங்க'னு சொன்னாரு. ஆனா, சாஸ்திரம் படிச்சவரோ, குளம் எங்கேனு கேட்டு ஏறத்தாழ ஒரு கி.மீ. தூரம் நடந்து போய் குளத்துல தண்ணி குடிச்சாரு.

அவர்கிட்ட போய், சுண்டல் தானம் பண்ணினவர், 'என்னங்க இது? நான் சுண்டல் கொடுத்தேன். வாங்கிக்கிட்டீங்க. தண்ணி தந்தா ஏத்துக்க மாட்டேங்கறீங்களே. இது என்ன நியாயம்?'னு கேட்டார்.

அதுக்கு, சாஸ்திரம் படிச்சவர், 'ஐயா! நீங்க கொடுத்த சுண்டல நான் சாப்பிடலேனா செத்துப் போயிருப்பேன். அதுனால ஏத்துக்கிட்டேன். அது ஆபத்து கால தர்மம். ஆனா, நீங்க தந்த சுண்டல தின்ன பிறகு உடம்புல தெம்பு வந்துருச்சு. அதுக்கு அப்பறமா, எனக்கு வேண்டியதை நானே உழைச்சு தேடிக்கணும்'னு சொன்னாரு.

அதே மாதிரி நமக்கு உரிமை இல்லாத பொருளை நாம உபயோகிக்கக் கூடாது. உரிமை உள்ள பொருள்களையும் அளவுக்கு அதிகமா உபயோகிக்கக் கூடாது. இலவசமா கிடைக்குதேனு நம்ம இஷ்டத்துக்குப் பிரயோஜனப்படுத்தக் கூடாது. இதெல்லாம் சாஸ்திரங்கள்ல நம்ம முன்னோருங்க சொல்லி வெச்சது!' என்பார் வாரியார்.

முன்னோருங்க சொல்லி வெச்சதைக் கேட்கலேனா நஷ்டமும் கஷ்டமும் நமக்குத்தான். வடக்க தலை வெச்சுப் படுக்கக் கூடாதுனு சொன்னாங்க. அது ஏன்னு பார்க்கலாம். நம்ம மரபுப்படி, உயிரோட இருக்கும்போது வடக்க தலை வெச்சுப் படுக்கக் கூடாது. இறந்த பிறகுதான் வடக்குப் பக்கமா தலை வெச்சுப் படுக்க வெப்பாங்க. வடக்குப் பக்கமா தலை வெச்சுப் படுத்தா, புத்தி குழம்பும். பல வித குழப்பங்கள் வரும். தூக்கம் போயிடும். ஒழுங்கா தூங்கலேனா, வியாதியஸ்தனா ஆக வேண்டியதுதான். சிலருக்கு மனநலம் கூட பாதிக்கப்படும்.

இன்னொரு விஷயம். பூமத்திய ரேகைனு சொல்றோமே. அந்த ரேகையில இருந்து எட்டு டிகிரியில நம்ம இந்தியா இருக்குது. (ஆரம்பம் அங்கிருந்துதான்) இது வட துருவத்துக்கு ரொம்ப பக்கத்துல இருக்கு.

வட துருவத்துல காந்த சக்தி இருக்கறதுனால, அந்த காந்த சக்தியின் மின் அலைகள், வடக்க பார்த்து தலை வெச்சுப் படுத்து இருக்கறவனோட மூளையைத் தாக்குது. மூளையின் செயல்திறன் கெட்டுப் போகுது. அப்புறம் என்ன? அவ்வளவுதான். மூளையின் செயல்திறன் கெட்டுப் போனா செயல்களில்

தடுமாற்றம். ஆரோக்கியம் குறைஞ்சு போகுது. அதனாலதான் வடக்க தலை வெச்சுப் படுக்கக் கூடாதுனு சொன்னாங்க. இதைத்தான் நம்ம பழந்தமிழ் நூல்கள்ல எல்லாம் 'வடக்கிருந்து உயிர் துறத்தல்'னு எழுதி வெச்சாங்க. வடக்கிருந்து உண்ணாவிரதம் மேற்கொண்டால் சீக்கிரமா இறந்து போயிடலாம்.

இதே தகவலை இன்னொரு விதமா இதிகாச புராணங்கள்ல சொல்லி வெச்சுருக்காங்க. பிள்ளையார் அவதாரம் செஞ்சதும், அவரை சனி பகவான் பார்த்தான். பிள்ளையார் தலை போயிடுச்சு. உடனே சிவபெருமான், 'வடக்க நோக்கித் தலை வெச்சுப் படுத்திருக்கிற ஜீவனோட தலையைக் கொண்டு வந்து பொருத்துங்க'னு சொன்னாரு. அவர் சொன்னபடி போய்ப் பார்த்தால், ஒரு யானை வடக்குப் பக்கமா தலை வெச்சுப் படுத்து இருந்துச்சு. அந்த யானையோட தலையைக் கொண்டு வந்து பிள்ளையாருக்குப் பொருத்தினாங்க. அதனாலதான் பிள்ளையாருக்கு யானைத் தலைனு, கதை வடிவமாகவும் சொல்லிக் கொடுத்தாங்க.

அடுத்த கேள்வியும் 'டாப்'பான கேள்வி. 'வாழை மரம் இந்தத் திசையில தார்(குலை) போட்டுச்சுனா, குடும்பம் அழிஞ்சிடும்னு சொல்றாங்க. இது சரியா, தப்பா'னு கேள்வி. நான் 'சரி' என்றே சொல்வேன். இனி, அதற்கான விளக்கம்..."

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 30

உச்சி வேளையில் கிணற்றை ஏன் எட்டிப் பார்க்கக் கூடாது?

பட்டாபி

“வாழை மரம் வடக்குப் பக்கமா தார் போடணும். வேற திசையில தார் போட்டுச்சுனா, அந்த வீடு அவ்வளவுதான்; வெளங்காதுன்னு சொல்றது சம்பிரதாயம். இது உண்மையா? வாழை மரத்துக்கும், வீடு வெளங்கறதுக்கும் என்ன சம்பந்தம்? விளக்கமா தெரிஞ்சுக்கலாமா...

உண்மை என்னன்னா... இது விவசாயத்தோடு சம்பந்தப்பட்டது. வாழை பயிரிடுவதற்கு தகுந்த காலமா, ஆடி மாசத்தைச் சொல்வோம். ஆடிப் பட்டம் தேடி விதைனு சொல்வாங்களே! அப்ப அடிக்கற காத்தை ஆடிக் காத்துன்னு சொல்வாங்க. அதையே இன்னொரு விதமா- தென்மேற்குப் பருவக் காத்துனும் சொல்வோம். இந்தக் காத்து ஒழுங்கா வீசினால், நாடு வளமா இருக்கும். இது முறையா வீசுதா இல்லையானு நமக்கு எப்படித் தெரியும்? ஆடிக் காத்து ஒழுங்கா வீசுனா, வாழை மரம் வடக்குப் பார்த்துத் தார் போடும். அதை வெச்சு ஆடிக் காத்து நல்லா வீசுது; பயிர் பச்சையெல்லாம் நல்லா விளையும்னு தெரிஞ்சுக்கலாம். அப்படி இல்லாம வாழை மரம் வேற திசையில் தார் போட்டுச்சுனா, ஆடிக் காத்து சரியா அடிக்கலை; பயிர் பச்சைங்க ஒழுங்கா விளையாது, உணவுப் பண்டங்களுக்குத் திண்டாட்டம்னு தெரிஞ்சுக்கலாம்.

ஆக, வாழைத் தார் விஷயம்- விவசாயத்துக்காகச் சொல்லப்பட்டது. இதைச் சொல்லி வெச்ச பாட்டன், பூட்டனை எல்லாம் நிக்க வெச்சு, சுத்தி வந்து தரையில விழுந்து நாம நமஸ்காரம் செய்யணும். ஆனால், நாம உண்மை தெரியாம இந்த விஷயத்தை வீட்டோட தொடர்புபடுத்தி, நாமும் குழம்பி அடுத்தவங்களையும் குழப்பறோம்.

இதே மாதிரி வீட்டுத் தோட்டத்துல ஆமணக்கு வளர்க்கக் கூடாதுனும் சொல்வாங்க. வளர்த்தால், அதன் காய் வெடிச்சுச் சிதறுவதைப் போல, அந்தக் குடும்பமும் வெடிச்சுச் சிதறிடும்பாங்க. இதுல என்ன இருக்குனு பாக்கலாமா?

பொதுவா, வெடிச்சுப் பரவும் விதைகள் கடினமா இருக்கும். ஆனால், ஆமணக்கு விதைகள் இளகின தன்மை கொண்டதா இருக்கும். வெயில் ஏற ஏற, முற்றிய ஆமணக்குக் காய்கள்லாம் வெடிச்சு, விதைகள் இறைஞ்சு கெடக்கும்.

விஷத் தன்மையோட பளபளப்பா இருக்கற அந்த விதைகளை, குழந்தைகள் எடுத்து வாயில போட்டா, என்னாகும்? விபரீதம்தான்! அதனால இதை வீட்டுத் தோட்டத்துல வளர்க்கக் கூடாதுனு சொன்னாங்க! சரி, வாங்க... அடுத்த கேள்வியைப் பார்க்கலாம்!

இதுவும் நம்ம சம்பிரதாயத்துல சொல்லப்படுற தகவலைப் பற்றிய கேள்விதான்... 'வீட்டுல புறா வளர்க்கக் கூடாது; வளர்த்தால், புறாக்கள் எழுப்புற 'கும்கும்' சத்தத்தால, குடும்பம் வளராது; நசிஞ்சுடும்கறது உண்மையா?'னு கேட்டிருக்காங்க.

புறாவை வீட்டில் வளர்க்கக் கூடாதுங்கறது சரிதான். ஆனா, புறாக்களோட சத்தத்துக்கும், நம்ம குடும்பத்துக்கும் எந்த விதமான சம்பந்தமும் கெடையாது. புறாக்களோட கழிவு வாடை, பாம்புங்களைக் கவர்ந்து இழுக்கும்.

அதனால புறாக் கூண்டுக்கு வரும் பாம்புகள், அங்க இருக்கற புறா முட்டைகளை உடைச்சுக் குடிச்சுட்டு, கூண்டுக்குள்ளேயே மயங்கிச் சுருண்டு படுத்துக்கும். வெவரம் தெரியாம நாம புறாக் கூண்டு கிட்டப் போனால், 'இவன் தன்னைத்தான் அடிக்க வர்றான்'னு நெனச்சு, பாம்பு நம்மளப் போட்டுத் தள்ளிடும். அப்புறம் கதை கந்தல்தான்!

இப்படி பாம்பு கீம்புனு சொல்லி, நம்மள பயப்படுத்தக் கூடாதுங்கறதால, புறாக்களோட சத்தம் குடும்பத்துக்கு ஆகாதுனு டெக்னிக்கலா சொல்லி வெச்சாங்க!" என்ற தாத்தா அடுத்த கேள்விக்குத் தாவினார்.

"அடுத்த கேள்வியும் சூப்பர்! 'உச்சி வேளையில கிணத்துக்குள்ள எட்டிப் பார்க்கக் கூடாது. பார்த்தால், பேய் அடிச்சு கிணத்துக்குள்ள தள்ளிடும்னு, ஊர்ப் பக்கம் சொல்றாங்களே... அது உண்மையா?'ங்கிறது கேள்வி.

மொதல்ல பேய்- பிசாசைத் தூக்கி ஓரமா போடுங்க. இல்லாட்டி, அந்தக் கெணத்துக்குள்ளேயே தூக்கிப் போட்ருங்க! பேய் பயத்தை விட்டுட்டு, கேள்விக்கான பதிலை நம்ம வழிப்படி பார்க்கலாம்!

கெணறுகள்ல- அதுவும் நாம உபயோகப்படுத்தாத கெணறுகள்ள விஷ வாயுங்கற நச்சுக்காத்து உருவாகும் வாய்ப்பு உண்டு. உச்சி வெயில் நேரத்துல, சூரியக் கதிர்கள் நேரா கெணத்துல பாயும். சூடுபட்ட பால் பொங்கற மாதிரி, சூரியச் சூட்டுல, கெணத்துல இருக்கற விஷ வாயு பொங்கி மேலே வரும். அப்ப நாம கெணத்துக்குள்ளே எட்டிப் பார்த்தோம்னா விஷ வாயு தாக்கி, நாம அப்படியே அந்தக் கெணத்துக்குள்ள விழ வேண்டியதுதான்! இந்த மாதிரி விஷ வாயு தாக்கி இப்படி நடந்துச்சுனு அடிக்கடி செய்தித் தாள்கள்ல படிச்சிருப்பீங்களே... இந்த விபரீதம்லாம் வேண்டாம்னுதான் நம்ம முன்னோர் விஞ்ஞானபூர்வமான தகவலை, இப்படி ஒரு நம்பிக்கையா சொல்லி வெச்சாங்க" என்ற தாத்தா குஷியாகத் தொடர்ந்தார்.

"நம்ம ஆளுங்க என்ன கேள்வி கேக்கலாம்னு உட்கார்ந்து யோசிப்பாய்ங்க போல! நம்ம சாஸ்திர-சம்பிரதாயங்களைப் பத்தித் தெரிஞ்சுக்கற ஆர்வம், இப்ப நெறையவே ஏற்பட்டிருக்கு!" என்றவர் ஒரு விநாடி பேச்சை நிறுத்தி ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

அந்தச் சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்ததைப் போல, தாத்தாவை நெருங்கிய கோயில் அறங்காவலர் அவரின் காதில் ஏதோ சொன்னார்.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 31

‘சாயந்திர வேளையில சாம்பிராணி போடுங்க!’

பட்டாபி

மேஜையில் இருந்த துண்டுச் சீட்டுகளை ஒரு முறை எடுத்து எண்ணிப் பார்த்தார் தாத்தா. அங்கு சில தாள்களே இருந்தன. ஒரு முறை கனைத்துத் தொண்டையைச் சரிசெய்து கொண்டு பேச ஆரம்பித்தார்: “நெறைய இருக்குமேங்கற எண்ணத்துலதான், கேள்விங்க எவ்வளவு இருக்குதுனு பார்த்தேன். பரவாயில்லே. நாலஞ்சுதான் இருக்குது.

தெனந்தோறும் மாலை நேரத்துல வீட்டுக்கு உள்ளேயும், வெளியிலயும் சாம்பிராணி போடணும். இப்படி செஞ்சா, லட்சுமிதேவி, நம்ம வீடு தேடி வருவாள்னு சொல்லி வெச்சு இருக்காங்க. இது ஏன்?

வேற ஒண்ணுமில்ல... அந்தி சாயுற நேரத்துலதான் விஷ ஜந்துக்கள்... அதாவது பூச்சி பொட்டுங்க... தேளு, பூரான் இதெல்லாம் வெளியில வரும். முக்கால்வாசி நேரத்துல வீட்டுக்குள்ளயேகூட, வந்து அடைஞ்சுக்கும். கொசு முதலான பூச்சிங்களப் பத்தி சொல்லவே வேணாம். அந்தப் பூச்சிங்க எல்லாம் நம்மளக் கடிச்சுத் தொல்லை பண்ணினா என்ன ஆவும்? நம்ம ஆரோக்கியம் கெட்டுப் போகும். சாம்பிராணியை ஒழுங்கா போட்டோம்னு வெச்சுக்கங்க... இந்த விஷ ஜந்துக்கள்- பூச்சி-பொட்டு தொல்லையெல்லாம் இருக்காது.

அடுத்தது, வீட்டுக்குள்ள நகம் வெட்டக் கூடாது. வெட்டினாலோ, நகத்தைக் கடிச்சாலோ தரித்திரம்னு சொன்னாங்க.

ஏன் சொன்னாங்க? வீட்டுக்குள்ள நகம் வெட்டினா, அது எங்கியாவது போய் விழும். ஒருவேளை நாம சாப்பிடற உணவுப் பண்டங்கள்லகூடப் போய் விழலாம். நாம சாப்பிடும்போது அந்த நகமும், அதுகூட சேர்ந்த அழுக்கும் வயத்துக்குள்ள போகும். பிறகென்ன... கடுமையான வயத்துப் போக்கு, வயத்து வலினு வியாதிதான்.

இதே மாதிரிதான் நகத்தைக் கடிக்கறதும். நகத்தைக் கடிக்கும்போது, அதுல இருக்கற அழுக்கும் சேர்ந்து

நம்மளை வியாதியில கொண்டு போய்த் தள்ளிடும்.

இதைத்தான் நகம் கடிச்சா தரித்திரம்; வீட்டுக்குள்ள நகம் வெட்டினா தரித்திரம்னு சொல்லி வெச்சிருக்காங்க.

அரச மரத்தைச் சுத்திட்டு அடி வயித்தைத் தொட்டுப் பாக்கறதுனு சொல்வாங்க. அது என்னனு உண்மையைத் தெரிஞ்சுக்கலாம். அரச மரத்தை மட்டுமில்ல, அரச மரத்தையும், வேப்ப மரத்தையும் ஒண்ணா சேர்த்து வெச்சிருப்பாங்க. அதையும் சேர்த்தே சுத்தலாம்.

பொதுவா, விஞ்ஞான ரீதியாகப் பார்த்தாலும், அரசும், வேம்பும் எப்படிப்பட்ட விஷக் கிருமிகளையும் ஒழிச்சுடும்ங்கறது தெரியும்.

கடுமையான விஷத் தன்மை கொண்ட வியாதிகளைக் கூட, இருந்த இடம் தெரியாமப் போக்கிடும் சக்தி வேப்ப மரத்துக்கு உண்டு. அரச மரம்... பூமியோட காந்தசக்தியை அதிகமாகக் கொண்ட மரம் இது. இந்த ரெண்டு மரமும் சேரும்போது, அதுங்கள்ள இருந்து வெளிப்படற கதிர்வீச்சு, நம்ம உடம்புக்கு நல்ல ஆரோக்கியம் கொடுக்குது.

அது மட்டுமல்ல; உயிர் அணுக்கள் உற்பத்தி ஆவுறதத் தடுக்கற கிருமிங்களையெல்லாம் அரச மரமும், வேப்ப மரமும் அழிச்சுடுது. கெடுதல் செய்யுற கிருமிங்க எல்லாம் போன உடனே, உடம்பு முழுமையா ஆரோக்கியமாயிடுது. அப்புறம்... கொழந்தை பொறக்குது.

இந்த விவரம் தெரிஞ்சதாலதான் பெரியவங்கள்லாம் அரச மரத்தையும், வேப்ப மரத்தையும் சேர்த்து வெச்சு, சுத்தி வந்தாங்க.

அடுத்தது - 'வளர்ற புள்ளங்க, வியாபாரம் செய்யிறவங்க கூடையைத் தூக்கி விடக் கூடாது. புள்ள வளர்றா மாதிரி, வியாபாரமும் விலை போகாம, அப்படியே வளந்துக்கிட்டே போகும்'னு சொல்லுவாங்க. இதுவும் நம்ம வாழ்க்கைய ஒட்டின அனுபவ சமாசாரம்தான்.

புள்ளைங்கனா வெளையாட்டு, கூத்து, குறும்பு வேடிக்கைனு கலந்தாங்கட்டியாத்தான் இருக்கும். அந்தப் புள்ளைங்களப் போய், 'நீயும் ஒரு கை புடி'னு தூக்கச் சொன்னா என்ன ஆவும்?

அது மட்டுமில்ல... கூடையில இருக்கற பொருளோட மதிப்பு, அதோட கனம், எதுவுமே அந்தப் புள்ளைங்களுக்குத் தெரியாது. வெவரம் தெரியாம, குறும்புத்தனமா- அலட்சி யமா தூக்கிக் கீழே போட்டு உடைச்சிடுவாங்க.

அப்புறம்... எங்கே இருந்து வியாபாரம் வளரும்? குழந்தைங்க இயல்பை- மனசைப் புரிஞ்சுக்கிட்டு முன் னோர்கள் சொல்லி வெச்சது இது.

இவ்வளவு நேரமும் நான் சொன்னதைக் கேட்டீங்க. ஆனால், இது அப்படியே காத்தோட காத்தா போயிடக் கூடாது. கொஞ்சமாவது அனுபவத்துல கொண்டு வரணும்.

இல்லாட்டி... நல்லதெல்லாம் கேட்டோம்; தெரிஞ்சுகிட்டோம். எல்லாம் மனசுல இருக்குன்னு மட்டும் இருந்தால் பிரயோஜனப் படாது.

தயவுசெஞ்சு குழந்தைங்களுக்கு நல்லதைச் சொல்லிக் குடுங்க. நம்ம புள்ளைங்கள்லாம், எதுவும் சோடை இல்ல. அதுவும் இந்தக் காலத்துப் புள்ளங்க, சூப்பரோ சூப்பர். அனுசரணயா, அரவணைச்சு அதுங்களக் கொண்டு வரணும். இல்லாட்டி, நாம பாடுபட்டு என்னதான் உழைச்சு சம்பாதிச்சாலும் பலன் இல்லை.

இந்தக் காலத்துப் புள்ளங்க எல்லாம் சூப்பர் அறிவாளிங்க. அதுங்களுக்கு நல்லதைச் சொல்லிக் குடுங்கங்கற வேண்டுகோளை உங்கள் முன் வைத்து விடை பெறுகிறேன்!" என்ற தாத்தா மேடையில் இருந்து கீழே இறங்கினார்.

கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டது.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 32

குங்குமமும் ஸ்டிக்கர் பொட்டும்!

பட்டாபி

மேடையை விட்டுக் கீழே இறங் கிய தாத்தா, வீட்டுக்குக் கிளம்பினார். கார் கொண்டு வந்து நிறுத்தினார் நிர்வாகி.

“வேண்டாம். ராத்திரி நேரம்தானே! நடந்தே போயிடறேன்!” என்ற தாத்தா நடையைக் கட்டினார். மாலை, மரியாதைகள் கொண்ட பையுடன், சிலர் தாத்தாவுடன் துணையாக இணைந்து நடந்தார்கள். அனைவரும் கோயில் நிர்வாகக் குழு மற்றும் திருவிழாக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பவர்கள்.

சற்றுத் தூரம் போனதும் அவர்களில் ஒருவர், “ஐயா! அங்க உங்களாண்ட நானும், சில சந்தே கங்கள் கேக்கலாம்னு நெனச்சேன். அப்பறமா பொதுமக்கள்தான் முக்கியம்னு விட்டுட்டேன்!” என்றார்.

“பரவாயில்ல. இப்ப கேளுங்க. தெரிஞ்சா பதில் சொல்லப் போறேன். இல்லாட்டி, தெரிஞ்சவங்ககிட்ட போய்க் கேட்டு, தெரிஞ்சுக்குவேனில்ல!” என்று ஊக்கம் கொடுத்தார் தாத்தா.

முதல் கேள்வி வந்து விழுந்தது. “இப்ப அங்க இங்கேனு ஒரு சில இடங்கள்ல அம்மை வந்திருக்கு. இப்பிடி இருக்கற வீடுங்கள்ல சமையலுக்கு எதுவும் தாளிக்கக் கூடாதுங்கிறாங்க. தாளிச்சுக் கொட்டினா என்ன தப்பு?”

“இந்த மாதிரி சொல்றது நியாயம்தாங்க! அடுப்புல எண்ணெயை ஏத்தவே கூடாதுனு சொல்லுவாங்க. அடுப்புல எதயாச்சும் எண்ணெயில போட்டுத் தாளிப் போம்... கடுகு கிடுகுனு! அப்பிடியே வெடிச்சு சிதறும். சாதாரணமா நல்லா இருக்கற நம்ம உடம்பிலயே, வெடிச்சு சிதர்ற அந்தக் கடுகு, பட்டால் சூடு தாங்க முடியல. இதே கடுகு, அம்மை போட்டுருக்கறவங்க மேல போய் விழுந்தால், என்ன ஆவும்? சூடா இது போய்ப் பட்ட உடனே, அம்மைக் கொப்பளம் மெள்...ளமா உடைய ஆரம்பிக்கும். அதுல இருக்கற தண்ணி அப்பிடியே வழிஞ்சு உடம்பில கசிய ஆரம் பிக்கும். நாம துடைச்சு விடுவோம். நம்ம

மேலயும் அந்தத் தண்ணியெல்லாம் படும். நம்மையும் படுக்கப் போட்டுடும். அதுனாலதான் அம்மை போட்டுருக்கற வீட்டுல, அடுப்பில எண்ணெய்ப் பாத்திரமே ஏத்தக் கூடாதுனு சொன்னாங்க!" என்றார் தாத்தா.

அதைத் தொடர்ந்து அடுத்தவர், "இது சரிங்க! ஆனா அம்மை வார்த்து இருக்குறப்ப, பிச்சைக்காரங்க வந்து கேட்டாதான, தர்மம் செய்யக் கூடாதுங்கறாங்களே! அது எதுக்கு?" எனக் கேட்டார்.

"முதல்ல சொன்ன அதே லாஜிக்தாங்க இதுக்கும். இந்த மாதிரி இருக்குற வீட்லேர்ந்து துணி, சோறு, காசுன்னு எதுவும் குடுக்கக் கூடாது. நாம குடுக்கற இதுங்க மூலமா, அடுத்தவங்களுக்கு அம்மை பரவக் கூடாது. அதனால்தான் அப்பிடிச் சொல்றாங்க!" என்றார் தாத்தா.

தாத்தாவின் மாலை, மரியாதை பொருட்கள் அடங்கிய பையைத் தூக்கி வந்தவர், மற்றொருவரிடம் பையைக் கொடுத்து விட்டு, "என்ன சொன்னாலும் என் சம்சாரம் நெத்தியில குங்குமமே வெச்சுக்க மாட்டேங்குது. ஸ்டிக்கர்தான் வெச்சுக்குது. அதுக்கு எதுனாச்சும் சுலபமா புரியற மாதிரி சொல்லுங்க தாத்தா! வீட்டுல போய்ச் சொல்லி நான் காலரத் தூக்கி விட்டுக்கு வேன்ல!" எனக் கேட்டார்.

"சுலபமா என்னங்க சுலபமா? உள்ளதை அப்பிடியே சொன்னால் போதும். நீங்க காலரத் தூக்கி விட்டுக்கலாம். சுருக்கமா சொல்ல ணும்னா, குங்குமம் இட்டுக்கிட்டு இருக்கறவங்கள ஹிப்நாடிஸம், மெஸ் மெரிஸம் இதெல்லாம் பாதிக்காது. இந்த சக்தி, ஸ்டிக்கர் பொட்டுக்குக் கிடையாது. இதை ஏற்கெனவே பார்த்து இருக்கோம். மேடையில சொல்லும்போது, சிலதையெல்லாம் விரிவா சொல்ல முடியாது. காரணம்... டைம் இருக்காது. இப்ப அந்தப் பிரச்ன இல்ல. வாங்க! விரிவாகவே பார்க்கலாம். லேடீஸுங்க ஏன் குங்குமத்த விட்டுட்டு ஸ்டிக்கர் பொட்டுக்குப் போறாங்கங்கறதும் புரியும்.படிகாரம், சுண்ணாம்புத் தண்ணி, மஞ்சள் இந்த மூணையும் சேர்த்துதான் குங்குமம் செய்யறாங்க. இப்பிடி செஞ்ச சுத்தமான குங்குமத்துக்கு, சாந்தப் படுத்துற சக்தி உண்டு. இதுல மஞ்சள், நாளாக நாளாக இரும்புச் சத்தா மாறிடுது. படிகாரம்கிறது கிருமி நாசினி. தோல் நோய்ங்கள நீக்கிடும். தொற்று நோய்க்கிருமிங்க நம்மளத் தாக்காதபடி பாதுகாப்பா இருக்கும்..." என்று தாத்தா சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

ஒருவர் இடைமறித்து, "என்னாத்த சொல்றது? குங்குமம் வெச்சுக்கிட்டா நாளாவ நாளாவ அந்த எடத்துல ஒரு கறை மாதிரி கறுப்பா மாறிப் போயிடுதுனு என் சம்சாரம், குங்குமம் வெக்காம ஸ்டிக்கர்தான் வெச்சுக்குது" என்றார்.

பதில் அளித்தார் தாத்தா. "ஐயா! இப்ப நான் சொல்லிக்கிட்டு வந்த படிகாரம்தான், லேடீஸுங்க குங்குமத்த விட்டு, ஸ்டிக்கர் பொட்டுக்குத் தாவின துக்குக் காரணம். குங்குமம் செய்யறப்ப, படிகாரத்தைக் குறிப்பிட்ட அளவு கலந்தா பரவாயில்ல. சில நேரத்துல படிகாரம் அளவுக்கு அதிகமா போயிடுது. அப்பிடித் தயாரான குங்குமத்தை இட்டுக்கிட்டா, நாளாக நாளாக நெத்தியில கறை உண்டாயிடுது, சூடு பட்ட பூனை மாதிரி! நம்ம லேடீஸுங்க எதுக்கு வம்புனு ஸ்டிக்கர் பொட்டுக்குப் போயிடறாங்க. இப்ப குங்குமத்துல இருக்கற சுண்ணாம்புத் தண்ணியைப் பத்தி பார்ப்போம். சுண்ணாம்பு சத்து குறைவா இருக்கறதால என்னென்னமோ தோல் வியாதிங்க வருது. டாக்டர்ங்க கிட்ட போனா, தோல் வியாதிக்கு கால்ஷியம் ஊசி போடுவாங்க. உங்களுக்கே தெரி யுமே! இப்ப தெரியுதா, சுண்ணாம்புத் தண்ணியக் கலந்து குங்குமத்த ஏன் செய்யறாங்கனு? ஒழுங்கா தயாரிச்ச அதாவது சுத்தமான குங்குமத்த நெத்தியில வெச்சுக்கிட்டா அது, நம்ம உடம்புக்கும், மூளைக்கும் போகிற நரம்புகளுக்கு சக்தியைக் கொடுக்கும். மூளைக்குப் போகிற நரம்புங்க அதிகமான சூட்டை, மூளைக்கு அனுப்பாம கட்டுப்படுத்தறது நம்ம நெத்தி, அங்க குங்குமம் வெச்சுக்கிட்டா, சூடு தணியுது. நெத்தியில குங்குமம் வெச்சுக்கிட்டு சூரிய நமஸ்காரம் செஞ்சா, அதுக்குப் பலனே தனி!

சூரியனோட ஒளிக்கதிர்கள் குங்குமத்துல பட்டு, ஏற்கெனவே சொல்லிக்கிட்டு வந்தேனே மூணு மூலப் பொருளுங்க... அதுங்க கூட வைட்டமின் 'டி'யும் அல்ட்ரா கதிர்களும் கலந்து, ஒரு புதிய பவரை- அதாவது காந்த சக்திய உற்பத்தி செய்யுது. இவ்வளவு நல்லதுங்களயும் கொடுக்கற குங்குமத்த ஒதுக்கிட்டு, ஸ்டிக்கர் பொட்டு நியாயமா? சொல்லுங்க!" எனத் தாத்தா சொல்லி நிறுத்தினார்.

"அதெல்லாம் சரிங்க! குங்குமம் வாங்கும்போது, எல்லாம் கரெக்டா கலந்துருக்குதானு பார்த்தா வாங்க முடி யும்?" என்றார் ஒருவர்.

"ஒண்ணும் பிரச்னயில்ல. எல்லாம் சரியான விகிதத்துல கலந்திருக்கிற நல்ல குங்குமமும் சில இடங்கள்ல கிடைக்குது. அதை விசாரிச்சு வாங்கணும்!" என்று தாத்தா சொல்லி முடிக்கவும், வீடு நெருங்கவும் சரியாக இருந்தது.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 33

சின்ன குழந்தைகள் வெற்றிலை போடலாமா?

பட்டாபி

காலைப் பொழுது. நடுத்தர வர்க்கக் குடும்பத்தினரது வீட்டில், அந்த நேரத்தில் நடக்கும் களேபரங்கள் தாத்தாவின் வீட்டிலும் நடந்தன. ஓர் ஓரமாக நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் தாத்தா.

“அப்பா... இதைப் பாருங்க!” என்றபடி தாள்கள் சிலவற்றை, தாத்தாவின் அருகில் இருந்த மேஜையின் மீது போட்டான் அவரின் மகன்.

‘என்ன அது?’ என்பது போல், மகனைப் பார்த்தார் தாத்தா.

“அப்பா! போன வருஷம் எங்க ஆபீஸ் சாவனீரு (மலரு)க்காக உங்ககிட்ட ஒரு கட்டுரை வாங்கிப் போட்டோமே... ஞாபகமிருக்கா! அதையே இந்தத் தடவை கொஞ்சம் வித்தியாசமா செய்யணும்னு நெனச்சோம். அதுக்காக எங்க ஆபீஸ்ல வேலை பாக்கற வங்க, அவங்க அவங்க பிள்ளைகளிடமிருந்து கேள்வி- பதில்களை வாங்கி அதைத் தொகுத்து ஒரு கட்டுரையா போடப் போறோம்.

எது எதைப் போடலாம்னு ஓரளவு சார்ட்- அவுட் (பிரித்து) பண்ணிட்டோம். நீங்க அதைக் கொஞ்சம் திருத்தித் தரணும். அதாவது, ‘சரணம்’ங்கறதுக்கு பதிலா ‘சரனம்’னு இருக்கும்... எல்லாம் காலேஜ் படிக்கற பசங்க எழுதினது... நல்லாவே எழுதியிருக்காங்க... நாங்க எல்லாம் பார்த்தாச்சு. இருந்தாலும், நீங்க ஒரு பார்வை பார்த்துக் கையை வெச்சா ‘பெட்டர்’னு ஆபீஸ்ல ஃபீல் பண்ணினாங்க. அதான் இதெல்லாம்” என்றான் பிள்ளை.

“சரி, சரி... நான் பார்த்து வெக்கறேன். நீ கெளம்பு. சாயந்திரமா வந்து வாங்கிக்க!” என்ற தாத்தா அவற்றை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

கேள்விகளை அப்படியே படித்த தாத்தா, பதில்களை மட்டும் தனது வழக்கப்படி பேச்சு வழக்கிலேயே படித்தார்.

சின்னக் குழந்தைகள் வெற்றிலை போடக் கூடாது. மீறினால், பேசும் சக்தியை இழந்து விட நேரிடலாம் என்கிறார்களே... இது சாத்தியமா?

'ஜீரண சக்திக்கு வெத்தலை ரொம்ப நல்லது. அதுவுமில் லாம நாம சாப்பிடுற சாப்பாட்டுனால ஏதாச்சும் அலர்ஜி வந்தால், அதை வெத்தலை போக்கும். அதுக்காக ஆடு தழை திங்கற மாதிரி கண்ட நேரத்துல வெத்தலை போடக் கூடாது.

வெத்தலையோ அல்லது பாக்கோ... எதுவானாலும் அதை மட்டும் தனியே வாயில் போட்டு மெல்லக் கூடாது. பேச்சு வழக்குலகூட வெத்தலை- பாக்குன்னு சேர்த்துதான் சொல்லுவாங்க; தனித்தனியே சொல்ல மாட்டாங்க.

வெத்தலைய மட்டும் வாயில போட்டு அப்பிடியே மென்றால், நாக்கின் நுண்ணிய நரம்புகளும், ரத்த ஓட்டமும் பாதிப்படைய வாய்ப்பு இருக்கு. சரியா பேச வராது. பாக்கை மட்டும் தனியே வாயில் போட்டு மென்றால், நெஞ்சு வலியில கொண்டு போய் விட்டு விடும். சில நேரம் மாரடைப்பு ஏற்படவும் வாய்ப்பிருக்கு.தவிர, ஈரல் பாதிப்புடன் சோகை வியாதியும் வரலாம்.

அதேமாதிரி வெத்தலைய ரெண்டு மூன்றாக சேர்த்து வெச்சும் போடக் கூடாதுன்னும் சொல்வாங்க. வெத்தலை யோட பின்பக்கத்துல சின்னச் சின்ன பூச்சி- புழுங்க இருக்கலாம். வெத்தலயோட வெத்தலயா சேர்த்து வெச்சு ஒட்டுமொத்தமா மெல்லும்போது, புழு-பூச்சிங்களும் வயித்துக்குள்ள போவும். சிலபேரை இது உடனடியா மயக்கத்துல கூடத் தள்ளிடும். அதனாலதான் வெத்தலைய ஒவ்வொண்ணா எடுத்து, முன்னேயும் பின்னேயும் துடைச்சி, சுண்ணாம்பு தடவி, நடு நரம்பக் கீறிக் கிள்ளிப் போட்டுட்டு, பாக்கோட சேர்த்துப் போட்டுக்கணும்னு சொன்னாங்க. நடு நரம்பை ஒட்டிதான் சின்னச் சின்ன பூச்சிங்க இருக்கும். கிழிச்சுப் போடறது அதுக்காகத்தான்.

இந்த விஷயங்கள்லாம் சின்னப் பசங்க- குழந்தைங்களுக்குத் தெரியாது. எனவேதான் அவங்கள்லாம் வெத்தலை போடக் கூடாதுன்னு பெரியவங்க சொல்லி வெச்சிருக்காங்க.'

அடுத்த கேள்விக்குத் தாவினார் தாத்தா.

அந்தி சாயும் வேளையில் தலைமுடியை விரித்துப் போடுவதோ, வாரிப் பின்னுவதோ கூடாது என்கிறார்களே... ஏன்? 'நம்ம முன்னோர்கள் காலத்துல, இப்ப இருக்கற மாதிரி மின்விளக்கு வசதிகள்லாம் கிடையாது. மங்கலான வெளிச்சம்தான்! அந்தி சாயும் நேரத்துல அந்த மாதிரி மங்கலான வெளிச்சத்துல, தலைமுடியை விரிச்சுப் போட்டுகிட்டு இருக்கறவங்களைப் பார்த்தா, மனசு 'பக்'குங்கும். 'பேய் பேய்'னு அலறும். இன்னொரு காரணம், மங்கலான வெளிச்சத்துல தலைய வாரிப் பின்னினா, தலைமுடி அங்கங்க உதிர்ந்து காத்துல அல்லாடும்; நம்ம கண்ணுக்கும் தெரியாது. சாப்பிடும்போது சாப்பாட்டோட சாப்பாடா வயித்துக்குள்ள போவும். பிறகென்ன... வாந்தி-பேதிதான்.

கேள்வி- பதில்கள் சுவாரஸ்யமாக இருக்கவே, அடுத்தடுத்த கேள்விகளை ஆர்வத்துடன் படித்தார் தாத்தா.

வீட்டுல படுத்துத் தூங்கும்போது, எல்லாரும் ஒரே திசையில தலையை வெச்சுத் தூங்காம, இஷ்டப்படி மாறி மாறிப் படுத்தால், படியளக்க வரும் பரமசிவன் வீட்டுக்குள் வர வழியில்லாம திரும்பிப் போயிடுவாரு... தரித்திரம் உண்டாகும்னு சொல்றாங்களே! இது என்ன நியாயம்? என் சௌகரியப்படி படுத்துத் தூங்கறதுக்குமா தடை?

‘நாம் தெருவுல, கைய- கால வீசிக்கிட்டு நடப்போம்.நமக்குச் சுதந்திரம் உண்டு. ஆனால் இது, அடுத்தவன் மூக்குல இடிக்காத வரைக்கும்தான்! தெருவைக் கடக்கும் சிறிது நேரத்துக்கே, இவ்வளவு கவனம் தேவைப்படுது.அப்ப... ஆறு மணி நேரம் படுத்து தூங்கறப்ப எவ்வளவு கவனமா இருக்கணும்?

அந்தக் காலத்துல கூட்டுக் குடும்பம்தான் அதிகம். எல்லாரும் ஒண்ணா சாப்பிட்டு, ஒண்ணா தூங்கின காலம் அது. எல்லாரும் ஒரே பக்கமா தலையை வெச்சுப் படுத்துத் தூங்கினா, இடப் பற்றாக்குறையை அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்.

அப்படி இல்லாம திசைக்கு ஒருத்தரா கண்டபடி படுத்துத் தூங்கும்போது, ஆழ்ந்த தூக்கத்துல புரளுவோம், கையக் கால நீட்டுவோம். அது அடுத்தவங்க மூஞ்சியில படும். பிறகு, அவங்களுக்கும் தூக்கம் கெட்டு, நமக்கும் தூக்கம் கெட்டு சண்டைதான்; சிவராத்திரிதான். சின்னச் சமாசாரம்தான். ஆனா இதுவே, பெருசாகி குடும்பத்துல பிரிவும் உண்டாகும். அதுனாலதான் அப்பிடி சொன்னாங்க.

இந்த பதிலைப் படித்துப் புன்னகைத்த தாத்தா, “இந்தக் காலத்துப் பசங்க நல்லாத் தெளிவாத்தான் இருக்காங்க” என்றபடியே மற்றொரு தாளை எடுத்தார். புது வீடு கட்டும்போது, இந்த வருஷம் ஆரம்பிச்சு அடுத்த வருஷம்தான் கட்டி முடிக்கணும்னு சொல்றாங்களே... சட்டு புட்டுன்னு சீக்கிரமா கட்டி முடிச்சா தப்பா என்ன?

இந்தக் கேள்வியை தாத்தா படித்துக் கொண்டிருந்த போதே, “அப்பா, சாப்பிட வாங்கப்பா. நேரத்தோட சாப்பிடணும்னு நீங்கதான சொல்லுவீங்க!” என்று சாப்பிட அழைத்தாள் மருமகள். கேள்வித்தாளை மேஜையில் வைத்து விட்டு சாப்பிடக் கிளம்பினார் தாத்தா.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - 34

நடராஜர் படத்தை வீட்டில் வைத்தால் குடும்பம் ஆடிப் போயிடுமா?

பட்டாபி

தாத்தா சாப்பிட்டு விட்டு வந்து, நாற்காலியில் அமர்ந் தார். தான், பாதியில் விட்டுப் போன... புது வீடு கட்டுவது குறித்த கேள்விக்கான பதிலை முதலில் படிக்க ஆரம்பித்தார்: 'புது வீடு கட்ட ஒரு வருஷ காலம் அவகாசம் எடுத்துக்கறப்ப... அந்த வீடு, முழுசா ஒரு மழைக் காலத்தையும் வெயில் காலத்தையும் பார்த்துடும். மழையில நல்லா நனைஞ்சு வீடு ஸ்ட்ராங்காகும்; அஸ்திவாரம் எந்த அளவுக்கு பூமிக்குள்ள இறங்க முடியுமோ அந்த அளவுக்கு இறங்கி 'செட்டில்' ஆயிடும். வீட்டுச் சுவரிலும் விரிசல், வெடிப்புன்னு எதுவும் இருக்காது. அதுக்காகத்தான் அப்படிச் சொன்னாங்க.'

'நல்ல பதில்' என்று மனதுக்குள் பாராட்டி யவராக அடுத்த கேள்வியை எடுத்தார்.

'புல்லாங்குழல் ஊதும் கண்ணன் படத்தை வீட்டில் வைத்திருந்தால், குடும்பம் ஊதிப் போய் விடும் என்கிறார்களே... உண்மையா?'

இதுக்கு, காஞ்சி மகா ஸ்வாமிகள் விளக்கமா பதில் சொல்லியிருக்கார்.

அதாவது, 'கர்ப்பத்துல இருந்தப்பவே தேவகி யின் கவலைகளைத் தீர்த்து வெச்சு, ஜனனம் பண்ணினதுக்கு அப்பறமா கோகுலத்துக்கு நாயகனாகவே இருந்துண்டு... பால்ய லீலைகளால கம்சனை நடுங்கப் பண்ணிண்டு... கோகுலத்துல பசு மாடுகள மேச்சு புல்லாங்குழல் ஊதி அத் தனை பேருக்கும் அனுக்கிரகம் பண்ணின கிருஷ்ணனா நம்ம குடும்பத்தைக் கெடுப்பான்?

கௌரவர்கள்கிட்டே தூது போய்... அர்ஜுனனுக்குத் தேரோட்டி, உலகத்துல தர்மங்கள் அழியாம

இருக்க ணுங்கறதுக்காக பகவத் கீதையைக் கொடுத்த கிருஷ் ணன், நம் குடியைக் கெடுப்பானா?'

அடுத்த இரண்டு மூன்று கேள்விகளும் இதே பாணியில்தான் இருந்தன.



வள்ளி மலை சுவாமிகள்

'பழநியாண்டவன் படத்தை வீட்டுல மொட்டை அடிச்சுடுவான்னு

'தப்புதான்... பழநியாண்டவன் மொட்டையா வெச்சிருந்தா, அதுக்குப்

பழநியாண்டவன் அருளால, தீராத முருகக் கடவுளோட திருப்புகழ் போய்ப் பரப்பினாரு வள்ளிமலை பழநியாண்டவன், நடத்திக் காண்பித்த

வெச்சுக்கக் கூடாது; குடும்பத்தை சொல்றாங்களே... இது சரியா?

படத்தை மொழு மொழுன்னு பழநியாண்டவனா பொறுப்பு?

வயித்து வலி குணமாகிவிட... பாட்டுகளை எல்லா இடத்துக்கும் சுவாமிகள். நம்ம காலத்துலயே அற்புதம் இது.

மீனவ குப்பம் ஒண்ணுல, அடிக்கடி மீனுங்க எல்லாம் திருட்டுப் போய்க்கிட்டு இருந்துச்சு. அந்த அடியார்களுக்காகப் பழநியாண்டவனே கையில தண்டாயுதத்தோட காவல் இருந்து காப்பாத்தின வரலாறும் உண்டு.

அப்படிப்பட்ட பழநியாண்டவனா நம்ம குடும்பத்தை மொட்டை அடிப்பான்? பழநியாண்டவன் படத்தை தாராளமா வீட்டுல வெச்சுக்கலாம்.

அதே நேரம் ஒரு உண்மையையும் நாம தெரிஞ்சுக்கணும். பழநியாண்டவன் மொட்டை அடிச்சுக்கிட்டு இல்ல; மெல்லிசான, நெளி நெளியான கூந்தலோடதான் இருக்கார். அபிஷேகக் காலத்துல உன்னிப்பா கவனிச்சுப் பார்த்தா தெரியும். 1901- ஆம் வருஷம் வெளி வந்த 'பழநி தல புராண'மும் (பாடல்கள்) 'ஒண்மீக் குடுமியழகும்'னு சொல்லுதே தவிர, 'மொட்டை'ன்னு சொல்லல. அதனால பழநியாண்டவன் படத்தை வீட்டுல வெச்சு வழிபடலாம்.

அடுத்த கேள்வியும் 'வைத்துக் கொள்ளக் கூடா தாமே...' - ரகம்தான்!

'நடராஜர் படத்தை வீட்டில் வைத்துக் கொண்டால், குடும்பம் ஆடிப் போயிடுமாமே... அப்படியா?'

'இதுக்கும் எந்த விதமான ஆதாரமும் இல்லை. சைவ சித்தாந்தத்துல- மெய் கண்ட சாத்திரம் பதினாலுல- 'உண்மை விளக் கம்'ங்கற பகுதி, 'சிட்டன் (பரமசிவன்) சிவாய நம வென்னுந் திருவெழுத்தஞ்சாலே அவாயமற நின்றாடுவான்'னு சொல்லுது.

அதாவது சிவபெருமான், 'சிவாய நம' என்கிற பஞ்சாட்சரத்தையே (ஐந் தெழுத்தையே) உடம்பாகக் கொண்டு, ஆன்மாக்களோட பிறவி தீர்ந்து போகணும்னு நடனம் ஆடறார். இதுவே அந்தப் பாட்டோட கருத்து. 'உண்மை விளக்கம்'ங்கற அதே நூல், நடராஜரோட திருவடியில ஆரம்பிச்சு திருமுடி முடிய 'நமசிவாய'ங்கற அஞ்செழுத்து மந்திரத்தைப் பொருத்திக் காட்டுது.

இவ்வளவு விரிவாகச் சொன்ன அந்த நூல்ல எந்தவொரு இடத்துலயும், 'நடராஜர் படத்தை வீட்டுல வெச்சுக்கக் கூடாது. குடும்பம் ஆடிப் போயி டும்'னு சொல்லல.

எனவே, நடராஜர் படத்தையும் வீட்டுல வெச்சு பூஜிக்கலாம். ஆனால் ஒரு விஷயம், இது போன்ற சாமி உருவங்களை கண்ணாடிப் படங்களா சுவத்துல மாட்டி வெக்கறதோட மட்டுமில்லாம, நம்ம மனசுலேயும் வெச்சுக்கணும்; அதுதான் முக்கியம்.

அடுத்த கேள்வி ருத்ராட்சம் பற்றியது; கடைசி கேள்வியும்கூட.

‘ருத்திராட்ச மாலையை எப்படிக் கட்டுவது? அதற்கு எவ்வாறு சக்தி (றிஷீஷ்மீக்ஷீ) ஏற்ற வேண்டும்?’

‘ருத்திராட்சங்கள்ல பல வகை உண்டு. ஒரு முகம் கொண்ட ருத்திராட்சத்துல இருந்து, இருபத்தைந்து முகம் கொண்ட ருத்திராட்சம் வரைக்கும் உண்டு.

மாலையா கட்டும்போது, எல்லா ருத்திராட்சமும் ஒரே மாதிரி இருக்கணும். அதாவது, எட்டு முக ருத்திராட்சத்துல மாலை கட்டறோம்னு வெச்சுக்குங்க. மாலையில இருக்கற எல்லாமும் எட்டு முக ருத்திராட் சமாவே இருக்கணும். நாலு முக ருத்திராட்சத்துல மாலை கட்டினா, எல்லா ருத்ராட்சமும் நாலு முகம் கொண்டதா இருக்கணும்.

ருத்திராட்ச மாலை முறையாகக் கட்டிட்டோம்னு வெச்சுக்கங்க. பிறகு அதை யாராவது மகான்கள்கிட்ட குடுத்து வாங்கிக்கலாம். முடியலேன்னா, அதை கோயில்ல குடுத்து, சிவபெருமான் மேல சார்த்தச் சொல்லி, அதுக்கு அப்பறமா வாங்கிக்கலாம். இது சுலபமான முறை.

கேள்வி- பதில்களை பொறுமையுடன் படித்து முடித்த தாத்தா, அவற்றை எழுதிய தற்கால இளைய தலைமுறையை மனம் திறந்து பாராட்டினார்.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! -35

பட்டாபி

கிரகண காலமும் கர்ப்பிணிகளும்!

தாத்தா உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். காலை நேரத்து பரபரப்பான வேலைகளை முடித்த களைப்பில், புடவை முந்தானையால் முகத்தையும் கைகளையும் துடைத்தபடி அவர் எதிரில் வந்து அமர்ந்த மருமகள், "என்னப்பா எழுதிக்கிட்டு இருக்கீங்க?" எனக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லேம்மா... டி.வி.யில 'சக்தி கொடு'ன்னு ஒரு ஆன்மிக நிகழ்ச்சி பார்த்தேன். அதைப் பாராட்டி நாலு வரி எழுதி அனுப்பலாமேனு தோணுச்சு; அதான், எழுதிக்கிட்டிருந்தேன். சரி... நீ கேக்கறதைப் பார்த்தா, ஏதோ சொல்ல வர்ற மாதிரி தெரியுதே... என்ன விஷயம்!" என்றார்.

"மகளிர் சங்கத்துல இருந்து போன் பண்ணிக் காய்ச்சி எடுத்துட்டாங்கப்பா! இந்த வருஷம் ஆண்டு விழாவுல நான்தான், நம்ம பழக்க வழக் கங்களைப் பத்தி ஏதாவது பேசி ஆகணும்னு கண்டி ஷனா சொல்லிட்டாங்க. நீங்க ஏதாச்சும் நாலு தகவல் சொல்லுங்கப்பா. அதை அப்படியே அங்க போய்ச் சொல்லிடறேன்!" என்றாள் மருமகள்.

தாத்தா குஷியானார். "அட, இவ்ளோதானா? நான் கூட என்னவோ ஏதோன்னு நெனச்சேன். சரி, ஒண்ணு பண்ணலாம்; உனக்கு ஏதாவது சந்தேகம் இருந்துச்சுன்னா கேளு; பதில் சொல்றேன். அதை அப்பிடியே அங்க போய் சொல்லிடு!" என்றார்.

மருமகள் முதல் கேள்வியைக் கேட்டாள்: "சூரிய- சந்திர கிரகண காலங்கள்ல, தர்ப்பைப் புல்லைக் கிள்ளி உணவுப் பொருட்கள்ல போடறோமே... எதுக்கு?"

"நல்ல கேள்வி! சூரிய கிரகண நேரத்துல, சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களும், கீழ்ச் சிவப்புக் கதிர்களும் உணவுப் பண்டங்களைக் கெடுக்கும். கெட்டுப் போன இந்த பண்டங்களைச் சாப்பிட்டால், உடம்புக்கு கேடு. ஆனால், தர்ப்பைப் புல்லு இந்தக் கதிர்களோட(ஸிணீஹ்□) ஆற்றலைக் கட்டுப்படுத்தும். அதனாலதான் கிரகணத்தப்போ உணவுப் பண்டங்கள்ல தர்ப்பைப் புல்லைப் போடணும்னு சொல்லி வெச்சாங்க.

நீயே பார்த்து இருப்பியே... முன்னோர்களுக்குத் தர்ப்பணமோ, வேற ஏதாச்சும் நல்லதுங்களைச் செய்யும்போதோ தர்ப்பைப் புல்லை நல்லா நீளமா முறுக்கி, ரெண்டா மடிச்சு மோதிரம் மாதிரி செஞ்சு, கை விரல்ல மாட்டிக்குவாங்க. அதுக்குப் பவித் திரம்னு பேரு. நாம தர்ப்பணம் அல்லது குறிப்பிட்ட சில பூஜைகளைச் செய்யும்போது எதையும் சாப் பிடாம இருப்போம். அதனால உடம்பு கொஞ்சம் பலகீனமா இருக்கும். அந்த மாதிரி நேரங்கள்ல காத்து மண்டலத்துக்கு மேல இருக்கிற காஸ்மிக் ரேஸ் (ஸிணீஹ்□), காமா ரேஸ், அல்ட்ரா ரேஸ் முதலான கதிர்கள்லாம் நம்ம உடம்புல பட்டு, நமக்கு பாதிப்பை உண்டாக் கக் கூடாதுன்னுதான் ஆராய்ச்சிபூர்வமா, தர்ப்பைய உபயோகிக்கும்படி சொல்லி வெச்சாங்க.

இதே மாதிரிதான் கர்ப்பிணிப் பெண்கள் கிரகண
காலத்துல வெளியில போகக் கூடா துன்னு சொல்றதும்!

அப்பிடிப் போனால், கிரகணத்தின் போது வெளிப்படற கதிர்கள், வயத் துக்குள்ள இருக்கற குழந்தையை பாதிக்கும். அதனால குழந்தை ஏதாவது குறையோட பிறக்க வாய்ப்பு இருக்கு. அதே மாதிரி, கிரகணக் காட்சியை டைரக்டா அதாவது வெறும் கண்ணோட பார்க்கக் கூடாது; அதற்காக உள்ள ஸ்பெஷல் கண்ணா டியைப் போட்டுக்கிட்டுத்தான் பார்க்கணும்னு சொல்வாங்க. 'மீறி பார்த்தாக்க கண்கள் பாதிப்படைஞ்சுடும்'னு பேப்பர்ல கூட செய்தி போடு வாங்களே!" என்றார் தாத்தார்.

"சூப்பர்ப்பா... எளிமையா சொல்லிப் பின்னிட்டீங்க!" என்று சந்தோஷப் பட்ட மருமகள், "ஒரு நிமிஷம்பா, இதோ வந்துடுறேன்!" என்றபடி உள்ளே சென்றாள். சற்று நேரத்தில் காபியுடன் வெளிப்பட்டாள்.

''இந்தாங்க, முதல்ல இதைக் குடிங்க. பிறகு, அடுத்த கேள்வியைக் கேக்கறேன்' என்றாள்.

தாத்தா, காபியை குடித்து முடித் தார். மருமகள் அடுத்த கேள் வியை ஆரம்பித்தாள்: ''புதுமணத் தம்பதிகளை ஆடி மாசத்துல பிரிச்சு வெக்கறாங்களே... ஏன்?''

''அம்மா... இது, எல்லாருக்கும் ஓரளவுக்கு தெரிஞ்ச விஷயம்தான். இருந்தாலும் விளக்கமா சொல்றேன்.

புதுமணத் தம்பதிங்க ஆடி மாசம் சேர்ந்தால், சித்திரை மாசத்துல குழந்தை பிறக்கும். அது, கடுமையான வெயில் காலம். விஞ்ஞான ரீதியா பார்க்கலாம்... சித்திரை மாச காலத்துல, பூமத்திய ரேகைக்கு நேர் கோட்டுல, பூமிக்குப் பக்கத்துல சூரியன் இருக்கும். அப்போ, சூரியனின் கதிர் வீச்சு ரொம்ப வீரியமா இருக்கும். அதோட, காஸ்மிக் ரேஸ்... அது இதுன்னு ஏற்கெனவே பார்த்தோமே... அதெல்லாமும் அதிகமா இருக்கும். தவிர, சூரியனின் கலைகள் பதினாறும் சந்திரனின் கலைகள் பன்னிரண்டும் தீவிரமா செயல்படும். அந்த நேரத்துல பிறக்கற குழந்தை, மனநிலை மாறுபாட்டுடனோ ஊனமாவோ பிறக்க வாய்ப்பு இருக்கு; சுகப் பிரசவம் ஆகறதும் கஷ்டம். பெரிய உசுருக்கு அதாவது, தாயோட உயிருக்கே ஆபத்து உண்டாகலாம். இதையெல்லாம் யோசிச்சுதான் நம்ம பெரியவங்க, ஆடி மாசத்துல புதுமணத் தம்பதிகளைப் பிரிச்சு வெச்சாங்க, புரிஞ்சுதா? அடுத்ததைக் கேளு!'' என்றார் தாத்தா.

மருமகள் கேட்டாள்: ''கண்ணுல கட்டி வந்தால் நாமக் கட்டியைக் குழைச்சு பத்து மாதிரி போடறாங்களே... ஏன்? நெத்திக்கு இடுற நாமக்கட்டியை இப்படி உபயோகப்படுத்தலாமா?''

''நீ சொல்ற மாதிரி, கண்ணுல கட்டி வந்தால் நாமக்கட்டியக் குழைச்சுப் போடறது பழக்கம்தான். ரெண்டு மூணு தடவை இப்படி செஞ்சாக்க... கட்டியின் வீக்கம் குறைஞ்சிடும். கண் எரிச்சல், வலி எதுவும் இருக்காது.

நாமக்கட்டியை ஆங்கிலத்துல அலுமினி ஸிலிகாஸ் (கிறீ□னீவீஸீவீ ஷிவீறீவீநீணீ□)னு சொல்லுவாங்க. நாமக்கட்டியோட மருத்துவ குணங்களைச் சொல்லும் பழங்காலப் பாட்டும்

உண்டு.

'ஆடுஞ் சரக்கதன் ஆரணங்கே வெண்ணாமம் சாடும் குணமதனைச் சாற்றக் கேள் – நீடுலகில் பொல்லாத கண் நோயும், போராடும் ஊந்தி அழல் எல்லாம் ஒழிக்கும் இது'னு அந்தப் பாட்டுல வருது.

நாமக்கட்டியை தண்ணி விட்டுக் குழைச்சு, கண் இரப்பைக்கு மேல் (வெளிப்) பக்கத்துல அப்படியே வளையம் மாதிரி பத்துப் போட்டால், கண் நோயால உண்டான சிவப்பு நிறம் மாறிப் போயிடும். நாமக்கட்டியை, பன்னீர் விட்டுக் குழைச்சு, அடிவயித்துல பத்துப் போட்டாக்க... சூட்டுனால உண்டான வயித்து வலி, நீர்க்கட்டு இதெல்லாம் நீங்கிப் போயிடும்!" என்ற தாத்தா, "ஆனா இப்படி யெல்லாம் சொல்லியிருக்குதேனு இந்தக் காலத்துல நாமக்கட்டியைக் குழைச்சு, பத்து போடறேன்னு செய்யக் கூடாது!" என்று நிறுத்தினார்.

"ஏன்? ஏம்பா!" பதிலைத் தெரிந்து கொள்ளும் ஆர் வத்தில் படபடத்தாள் மருமகள்.

"சொல்றேன்... சொல்றேன்! முதல்ல எனக்குப் பசிக்குது. சாப்பாட்டப் போடு. சாப்டுட்டு மீதியை விலாவாரியாச் சொல்றேன்!" என்றவர் சாப்பிட உட்கார்ந்தார்.